A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
JUNE 2019
மலர் 24
இதழ் 6

R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

For all your legal requirements
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
L & L LAW Solicitors
46 High street
Colliers wood
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# மோடி என்ற சுனாமி!

இந்தியாவில் இரண்டாவது முறையாக தனிப் பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைத்து, மோடி பிரதமராகப் பதவி ஏற்றுள்ளார். ஐம்பது ஆண்டுகளில் இந்தியாவில் இது முதல் முறை என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளார். கடந்த தேர்தலில் வீசிய மோடி அலை, பேரலையாக மாறி சூறாவளியாக, சுனாமியாக உருப்பெற்று மாபெரும் வெற்றியை ருசிக்கத் தொடங்கியுள்ளது. “ஒன்றாகச் சேர்ந்து வளர்வோம். வலிமையான இந்தியாவை உருவாக்குவோம். இந்தியா மீண்டும் வென்றுள்ளது” என்று வெற்றிக்களிப்பில் மூழ்கியுள்ளார் மோடி. பாஜக கூட்டணி பெற்ற இந்த மிகப்பெரிய வெற்றிக்கு காரணம், மத அடிப்படையில் பிரிக்கப்பட்ட வாக்குகளும், பாகிஸ்தானுக்கு கொடுத்த பதிலடியும்தான் என்று பரவலாக கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், இவ்வளவு பெரிய வெற்றிக்கு அதுவும், தொடர்ந்து இம்முறையும் மோடி அரசின் வெற்றிக்கு... காரணம் இது மட்டுமே கிடையாது. மோடி தலைமையிலான பாஜக, கடந்த தேர்தலை விடவும் இந்த தேர்தலில் அமோக வெற்றி பெறுவதற்கு இவை தவிரவும், மற்றும் பல முக்கிய காரணங்கள் உள்ளன. நாடு முழுக்கவுமே எதிர்க்கட்சித் தலைவர்கள், பாஜகவுக்கு எதிராக கூட்டணி அமைப்பது தொடர்பாக பேசினார்களே தவிர, அனைவரும் இணைந்து ஓரணியில் நிற்கவில்லை. இது இவர்கள் மீதான நம்பகத்தன்மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவில்லை.

### மோடி செல்வாக்கு

2018 ஆம் ஆண்டு வாக்கில், ஓரளவுக்கு பாஜக செல்வாக்கு சரிந்தது. அதை பல மாநிலத் தேர்தல்கள் உணர்த்தின. ஆனால், அந்தக் காலகட்டத்தில் கூட மோடி என்ற தனிநபர் மீதான புகழுக்கு எந்தப் பங்கமும் வரவில்லை. மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் எந்த ஒரு தலைவரையும் முன் நிறுத்த முடியவில்லை. மோடிக்கு ‘பப்ளிசிட்டி’ பலம் கூடிக் கொண்டே சென்ற நிலையில், அவருடன் ஒரே தராசில் வைத்து பார்க்கும் அளவுக்கு ராகுல் காந்தியால் வளர முடியவில்லை.

### தனி நபர் பிம்பம்

இந்த வாக்குகள் அனைத்தும் பாஜக என்ற கட்சிக்காக கிடைத்தவை கிடையாது. மோடி என்ற ஒற்றை நபருக்காக கிடைத்தது என்பதைத்தான் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது. லோக் நீதி அமைப்பு நடத்திய எக்ஸிட் போல் கணிப்பின் போது, பாஜகவுக்கு வாக்களித்தவர்களில் 32% பேர், மோடி மட்டும் பிரதமர் வேட்பாளராக இல்லாவிட்டால், தாங்கள் பாஜகவுக்கு ஓட்டு போட்டு இருக்க மாட்டோம் என்று தெரிவித்தனர். இதுதான் தனிநபர் இமேஜ் மீதான மனநிலை. தமிழகத்தில் ஜெயலலிதாவுக்கும் இப்படி ஒரு இமேஜ் மனநிலைதான். அம்மா உணவகம், அம்மா உப்பு, அம்மா குடிநீர் என பல ஜெயலலிதா தனது பெயரில் பிரபலப்படுத்த காரணமாகவும் அமைந்தது.

### திறமையான கட்டமைப்பு

மேலும், பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் கட்டமைப்பு வேறு எந்த கட்சியையும் விட பல மடங்கு மேம்பட்டதாக உள்ளது. நுழையவே முடியாது என்று கருதப்பட்ட வடகிழக்கு மாநிலங்களில் பாஜக கால் பதிப்பதற்கு பாஜகவின் திறமையான நிர்வாகிகளும், அதன் கட்டமைப்பும் தான் காரணம். 2016ம் ஆண்டு அஸ்ஸாம் சட்டசபை தேர்தலின் மூலமாக வடகிழக்கில் கால்பதிக்கத் தொடங்கிய பாஜகவின் வளர்ச்சியை தடுத்து நிறுத்த முடியவில்லை. அது மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து என அனைத்து இடங்களிலும் விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து, காங்கிரசை வேரோடு அழித்து விட்டது. ஒடிசாவில் பிஜு ஜனதாதளம் கட்சிக்கு பாஜக கடும் போட்டியாக விஸ்வரூபமெடுத்தது. எனவே பாகிஸ்தானுடனான உரசலும், இந்துக்களை ஒருங்கிணைத்ததும் மட்டுமே பாஜகவின் வெற்றிக்கு காரணம் என்று சொல்ல முடியாது. வேலைவாய்ப்பின்மை, பணமதிப்பிழப்பு அறிவிப்பு, ஜாதி மற்றும் மத ரீதியான மோதல்கள் அதிகரிப்பு போன்ற விஷயங்களில் மக்களை காங்கிரஸ் திரட்டி ஒன்றிணைக்க முடியவில்லை. ரோகித்வெமுலா தற்கொலை, விவசாயிகள் போராட்டம், தலித்துகள் போராட்டம் போன்ற மக்களும், சமூக அமைப்புகளும் முன்னெடுத்த போராட்டத்தை கூட தங்களுக்கு சாதகமாக ஒருங்கிணைத்து கொள்வதில் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. இதுபோன்ற பல்வேறு காரணங்கள்தான் பாஜகவின் வெற்றிக்கு காரணம். இதுவே நிதர்சனம்.

Rishi Village Therapy
Back Pain, Knee Pain,
Arthritis, Headache,
The Frozen body,
Orthopedics
and many more
Consulting Hours:
Mon - Saturday: 10am - 6pm . Sunday: 10am - 3pm
Physiotherapist : Dr.S.Luxmi
Tel : 07445 666 334 Email : luxmiselva2018@gmail.com
24 Hoe Street, Walthamstow, London E17 4PH

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
புடவைகள் அனைத்தும்
£9 பவுண்களிலிருந்து
அதிரடி மலிவு விலையில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலஞ்ஜ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுப்படுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 0208144 1553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட இணைப்புச் சந்தா
£89
15 மாதங்கள்
புதுப்பித்தல்
£69
15 மாதங்கள்
SET TOP BOX INCLUDED
60க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
5000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ் திரைப்படங்கள்
ஒவ்வொரு வாரமும் புத்தம் புதிய திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
ஆங்கில உபதலைப்புக்களுடன் திரைப்படங்களை
EROS NOW
4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்
ஒவ்வொரு வாரமும் புத்தம் புதிய திரைப்படங்கள்
HD தரத்தில் திரைப்படங்கள்
விளம்பர நேரவிரயம் இல்லை
SUBSCRIBING TO LYCATV IS EASY!
CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON
0207 132 2727
www.lycatv.tv

# அழியா நினைவுகளின் நீட்சியே தமிழின அழிப்பின் சாட்சி!

அநாகரிக அரசியல், பண்பற்ற அரசியல், ஒழுக்கமற்ற அரசியல் என்றெல்லாம் கேள்வியுற்றுள்ளோம். அலங்கோல அரசியல் பற்றி அறிந்திருக்கிறோமா?

இலங்கையில் இப்போது நடைபெறுவது அதுதான். கேவலமான அலங்கோல அரசியல் அங்கு இப்போது அரசோச்சுகிறது.

அலங்கோல அரசியல் என்பதன் வரைவிலக்கணம் என்னவென்று தெரிய வேண்டுமானால் இலங்கையின் போக்கையும் நோக்கையும் உற்று நோக்கினால் போதும்.

ஒரேயொரு விளக்கத்தை மட்டும் இதற்குக் கொடுத்தால் போதும். 2015ஆம் ஆண்டுத் தேர்தல்களின்போது ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே அணியில் ஒரே கொள்கையில் கூட்டாக நின்று மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் இருவரும் இணைந்தே கூட்டாக தங்களுக்கான அமைச்சரவையை உருவாக்கினார்கள்.

சொல்லப்போனால் கணவன் - மனைவி போன்று ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே நல்லாட்சி இடம்பெறும். அப்படித்தான் இயங்குவார்கள் என்ற நம்பிக்கையில் நாட்டின் சகல சிறுபான்மை இனங்களும் இவர்களுக்குத் தங்கள் வாக்குகளை வழங்கி ஆட்சிபீடம் ஏற்றினர்.

ஆனால், அடுத்த தேர்தலைச் சந்திப்பதற்கு முன்னரே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க விரும்பாதவர்களாக ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் அரசியல் குடும்பம் நடத்தினால், அரசாங்கம் என்ற இயந்திரம் என்னாகும்?

கடந்த அக்டோபரில் ரணிலை பிரதமர் பதவியிலிருந்து அதிரடியாக நீக்கி, நாடாளுமன்ற கூட்டத்தொடரை நிறுத்தி, மகிந்தவை பிரதமராக நியமித்து அரசமைப்புக்கு முரணாக மைத்திரி செயற்பட்டதோடு இவர்களுக்குள் பிய்ச்சல் பிடுங்கல் ஆரம்பமானது.

ஆனால் இறுதியில் எல்லாமே பொரிமாத்தோண்டி கதையானது. ரணில் மீண்டும் பிரதமராக சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோனது. இந்தச் சதுரங்க விளையாட்டில் மகிந்த எதிர்க்கட்சித் தலைவரானார்.

ஆக, இந்த அரசியல் சூறாவளியில் பலியான ஒரேயொருவர் தமிழரான கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். மூன்று சிங்களத் தலைவர்களும் தங்களுக்கு ஒவ்வொரு கதிரையை கைப்பற்றிக் கொண்டனர்.

மகிந்த ஜனாதிபதியாகவிருந்தவேளையில் (2005 2015) தனது தம்பி கோதபாயவை பாதுகாப்புச் செயலாளராக்கி முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலங்களையும், வணிக நிலையங்களையும் அடித்துடைத்து எரித்து அட்டூழியங்கள் புரிந்தார்.

தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதம் மூன்று தசாப்தங்களாக தலைவிரித்தாடிய காலத்தில், சிங்கள ஆட்சி பீடத்தின் சுவீகாரப் பிள்ளைகளாக முஸ்லிம்கள் செயற்பட்டது புதுக்கதையன்று.

கிழக்கிலங்கையின் கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, கிரான் ஆகிய தமிழ்க் கிராமங்களின் படுகொலைக்கான சாட்சியங்கள் உயிருடன் உள்ளனர்.

இவ்விடத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடாக வெளிவந்த ஷவிடுதலைப்புலிகள் பத்திரிகையின் 1990 ஐப்பசி கார்த்திகை மாத இதழின் முதற்பக்க முக்கிய செய்தியின் தலைப்பாக ஷமுஸ்லிம்களால் ஒரு நெருக்கடி| என்பதை கவனிக்க வேண்டும். இந்தச் செய்தியின் முதற்பந்தி பின்வருமாறு அமைந்திருந்தது:

**தமிழினத்தின் மீதான முப்பதாண்டுகால அரச பயங்கரவாத செயற்பாடுகளின்போது சிங்கள தேச அரசுகளின் சுவீகாரப் பிள்ளைகளாகவிருந்த முஸ்லிம்கள் இப்போது அவர்களின் வேண்டாத பிள்ளைகளாகியுள்ளனர். வடக்கும் கிழக்கும் இணைந்த பெருநிலப்பரப்பில் தமிழரும் முஸ்லிம்களும் நல்ல அயலவர்களாக இயங்கக் கூடாதென்பதில் குறியாகவிருக்கும் சிங்கள ஆட்சி பீடம் ஆறு கடந்த பின் அவர்களை நீருக்குள் மூழ்கடிக்க முயல்கிறது.**

“தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று ஒரு புதிய நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இதுவரை நாளும் சிங்களப் பேரினவாதத்தால் தாக்கப்பட்டு வந்த தமிழர்கள், இன்று முஸ்லிம் காடையர்களின் கொலைவெறிக்குள்ளும் அகப்பட்டு சொல்லொணாத் துயர்களை அடைந்து வருகின்றனர். சிங்கள ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழர்களுடன் சேர்ந்து போராட வேண்டிய தமிழீழ முஸ்லிம்கள் எந்தவிதமான தீர்க்கதரிசனப் பார்வையுமில்லாது சிங்களப் பேரினவாதத்துக்கு உட்பட்டு தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்”.



**இந்தச் செய்தியின் இறுதிப் பந்தி பின்வருமாறு இடம்பெற்றது:**

“சிங்கள இனவாதப் பூதத்தை திருப்திப்படுத்தி அற்ப சலுகைகளைப் பெறுவதற்காக அயலவர்களான தமிழர்களைக் கொன்றொழித்த முஸ்லிம்கள், நாளை அதே சிங்கள இனவாதப் பூதத்தால் விழுங்கப்படப் போகிறார்கள்”. எவ்வளவு தீர்க்கதரிசனமான பார்வை.

இனத்தின் விடுதலைக்காகவும், மண்ணின் மீட்புக்காகவும் தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடியவர்கள் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இதனை எழுதினார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த மாதம் 21ஆம் திகதிய குண்டுத்தாக்குதல்களை மையப்படுத்தி முஸ்லிம்கள்மீது சிங்கள தேசம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டு தமிழ் மக்கள் அதிர்ச்சியடையவில்லை.

ஒரு சிறுபான்மை இனத்தை நசுக்க இன்னொரு சிறுபான்மை இனத்தைப் பயன்படுத்துவதும், அந்த வேலை முடிந்தபின்னர் பின்னையதை நசுக்க முன்னையதின் ஆதரவைப் பெற முனைவதும் (முன்னாள் போராளிகளை இராணுவம் அழைத்து கூட்டம் நடத்துகிறது) இனவாதப்பூதம் அதேயிடத்தில் அவ்வாறே இயங்குகிறது என்பதை நிரூபிக்கிறது.

இந்த விடயங்களை இங்கு குறிப்பிடுவதால் முஸ்லிம்கள் மீது சிங்கள தேசம் மேற்கொண்டிருக்கும் எதேச்சாதிகாரப் போக்கை தமிழர்கள் வரவேற்கிறார்கள் என்று கருதக்கூடாது. அல்லது தமிழர் தரப்பு அவர்களைக் காட்டிக்கொடுக்க முன்வருமென்றும் தப்புக் கணக்கு போடக்கூடாது.

முப்பதாண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணில் சந்தித்த அனர்த்தங்களை முஸ்லிம்கள் இப்போது சந்திக்க நேர்ந்துள்ளது. சிங்களவர்கள் ஆள்பவர்களாகவும், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆளப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை இது நன்றாகவே எடுத்துக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட ஷஅயலவர்களான தமிழர்கள்| என்ற சொற்றொடர் தமிழர்களும் முஸ்லிம்களும் அருகருகே இணைந்து வாழ வேண்டியவர்களென்பதை எடுத்துக்காட்டுவது.

வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகமாக இருக்குமானால் இங்கு வாழும் தமிழரும் முஸ்லிம்களும் இப்பெரு நிலப்பரப்பின் பெரும்பான்மை இனத்தவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவர்கள். இதனை இல்லாமற் செய்யவே இதுவரை எல்லாம் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையை பௌத்த நாடு என்று மகிந்த, ரணில் இவர்களோடு இணைந்த அனைவரும் மீண்டும் மீண்டும் நினைவூட்டி வருகின்றனர். அமைச்சரான மங்கள சமரவீர இதனை மறுப்பது ஒருவகை அரசியல். தாம் பௌத்தர் அல்லர் என்றும், பௌத்த கொள்கைகளை பின்பற்றுபவர் என்றும் சில நாட்களின் பின்னர் இவர் சொல்வது மற்றொருவகை அரசியல்.

சிங்கள அரசியல் மேதாவிகளின் வாதப்பிரதிவாதங்களுக்கு சூடாகப் பதிலளித்துள்ளார் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

இலங்கை சிங்கள் பௌத்த நாடெனில் வடக்கும் கிழக்கும் தனித்தமிழர் தாயகமென்பது இவரது கூற்று.

இலங்கையின் சனத்தொகையில் எழுபத்தைந்து சதவீதம் சிங்கள் பௌத்தர்கள் என்ற முறையில் இது சிங்கள பௌத்த நாடென்றால், வடக்கு கிழக்கை சிங்கள பௌத்த நாடு என்ற கருத்தமைப்புக்கு வெளியே எடுத்து, அதற்கு தனித்துவமான ஓர் அடையாளத்தை வழங்குவது அவசியம் என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான புதிய நெருக்கடிகளை உருவாக்கும் அலங்கோல அரசியற் சூழலில் தமிழர் எதிர்நோக்கும் அரசியல் அபிலாr~கள் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கத்தில் நிறைவேறுவதற்கான சாத்தியமில்லை.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இது சாத்தியமில்லையென்று தமிழரசு கட்சியின் துணைப் பொதுச்செயலாளரும் வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்திருப்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

தற்போதைய அரசியல் பொதுவெளியில் புதிய அரசியலமைப்பு, வழிகாட்டல் குழு அறிக்கை, தெரிவுக்குழுக்களின் பரிந்துரை என்பவையெல்லாம் காற்றோடு கலந்த கதைகளாகிவிட்டன.

முள்ளிவாய்க்காலின் பத்தாவதாண்டு நினைவு நிகழ்வுகள் மௌனப் பிரகடனம் ஒன்றை தமிழர் மனதில் பதித்துள்ளது.

வலியுடன் வாழும் மக்களின் அழியா நினைவுகளின் நீட்சியே, தமிழின அழிப்பின் சாட்சியாக நின்று, இவ்வினத்தின் எதிர்கால மீட்சிக்கு உதவும். ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே–அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



**புதினம்**

தவறாது தபாலில் பெற
25 பவுண்கள் PUTHINAM
என்ற பெயருக்கு CHEQUE
உங்கள் முகவரியைக் குறிப்பிட்டு
அனுப்பி வையுங்கள்.
PUTHINAM, 38, MOFFAT ROAD
LONDON SW17 7EZ





## விமலின் பக்கங்கள்

**நூல் வெளியீட்டு விழா - அழைப்பிதழ்**

தமிழ்கூறு நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகமான மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் இலண்டன் வழக்கறிஞர் **விமல் சொக்கநாதன்** எழுதிய **விமலின் பக்கங்கள்** நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களைப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இடம் : **நாரத கான சபா** (மினி ஹால்)
டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
நாள் : 22.06.2019 | சனிக்கிழமை மாலை 6.00 மணி

விழாத் தலைமை : **Dr. கோபாலன் ரவீந்திரன்**
(Professor & Head, Department of Journalism and Communication University of Madras)

வரவேற்புரை : வழக்கறிஞர் **திரு. ஹரிசங்கர் கிருஷ்ணசுவாமி**
(நாரத கான சபா)


சிறப்புரைகள் :
**பேராசிரியர் திரு. சம்பத்குமார்**
(Professor Asian College of Journalism, Former Correspondent with BBC, Former Producer Doordarshan, Chennai)
**திரு. V. திருவேங்கடம்**
(Station Director, All India Radio, Chennai, Rtd)
**திரு. கலாநிதி வீ. ஜெய் சக்திவேல்**
(Asst Professor, Dept of Journalism and Communication)

சங்கீத சொற்பொழிவு :- **மாலினி & சிவஸ்ரீ**

நிகழ்ச்சி முன்னிலையாளர் :- **ரஞ்சினி ராஜ்மோகன்**
(ஸ்ரீலங்கா ரூபவாஹினி தொலைக்காட்சி - மூத்த ஒளிபரப்பாளர்)

விழா ஏற்பாட்டுக் குழு சார்பில் **பாலாஜி** 94443 10136

## வணங்குகிறோம்
## பிரார்த்திக்கிறோம்



**அமரர் முத்துக்குமாரு பாலதாசன்**

**தாய் மடியில்: 22.01.1936**

**இறைவனடியில்: 01.05.2019**

பரிவிற்குரிய கணவர்
பாசத்திற்குரிய தந்தை
அன்பிற்கினிய சகோதரர்
அன்பான மாமனார் பிரியமுள்ள
மைத்துனர் உயிரான பேரனார்
நட்பிற்கு இனிய நண்பர்

புலம் பெயர்ந்து லண்டனில்
வாழ்ந்தாலும், தாய் மண்ணின்
நினைவுகளைச் சுமந்து வாழ்ந்தவர்
எம்மை வாழவைத்து வாழ்வில்
உயர்த்திய எங்கள் தெய்வமே!
வணங்குகிறோம் உங்கள் ஆத்மா
சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

**உங்கள் பிரிவால் துயருறும், குடும்பத்தினர்**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

### JUNE- 2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 02 | Sunday | Karthikai Viratham & Amaavasai Viratham | கார்த்திகை விரதம் & அமாவாசை விரதம் |
| 06 | Thursday | Chathurthi Viratham | சதுர்த்தி விரதம் |
| 08 | Saturday | Sasti Viratham | சஷ்டி விரதம் |
| 11 | Tuesday | Kumbabisheka Thinam | கும்பாபிசேக தினம் |
| | | Mor: 1008 Sankabishekam | காலை:1008 சங்காபிசேகம் |
| | | Eve: Manavalakkolam | மாலை: மணவாளக்கோலம் |
| | | Sinna Murukan Thirukkalyanam, Veethi Ula | சின்னமுருகன் திருக்கல்யாணம் வீதி உலா |
| 13 | Thursday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 14 | Friday | Pirathosa Viratham | பிரதோச விரதம் |
| 16 | Sunday | Full Moon | பூரணை |
| 20 | Thursday | Sankadkara Chathurthi | சங்கடகர சதுர்த்தி |
| 23 | Sunday | Sasti | சஷ்டி |
| 25 | Tuesday | Apa Astami | அபரபட்ச அட்டமி |
| 28 | Friday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 29 | Saturday | Karthikai Viratham | கார்த்திகை விரதம் |
| 30 | Sunday | Pirathosa Viratham Mor: Ganapathy Homam | பிரதோசவிரதம் காலை: கணபதி ஹோமம் |
| | | Eve: Poorvangak Kirikaikal | மாலை: பூர்வாங்கக் கிரிகைகள் |
| | | Sri Ganapathi Veethi Ula | கணபதி வீதியுலா |



# விமலின் பக்கம்

வடபுலத்தில் அரசியல்வாதி விஜயகலா மகேஸ்வரன் ஒரு முக்கிய அரசியல் மகாநாட்டில் பேசும்போது:-

"வடபுலத்து தாய்மார் இன்று ஏராளமான கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். 6 வயதுச் சிறுமி ஒருத்தி யாழ்ப்பாணத்தில் அண்மையில் கொல்லப்பட்டிருந்தாள். விடுதலைப் புலிகள் எங்களுடன் இருந்திருந்தால் இது நடந்திருக்க மாட்டாது. நாங்கள் சுதந்திரமாக பயமின்றி வாழ வேண்டும் என்றால், தெருவில் நடக்க வேண்டும் என்றால், எங்கள் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போய் வரவேண்டுமானால் விடுதலைப் புலிகளை நாம் மீண்டும் கொண்டு வரவேண்டும்" என்று குரல் எழுப்பியிருந்தார்.

விஜயகலா என்பவர் ஒரு தாய், கணவனை இழந்த பெண். வடபுலத்து தாய்மார்களின் சிரமங்களை உணர்ந்தவர் என்பதை மறந்த சிங்கள வெறியர்கள் - துவேஷிகள், விஜயகலா மீது வெறி நாய்கள் போல பாய்ந்து கடித்துக் குதறினார்கள்.

சிங்கள வெறி ஒரு புறமிருக்க, விஜயகலா மீது தனிப்பட்ட பொறாமையும் குரோதமும் கொண்ட



அரபு கலாச்சாரமும் அரபு மொழியும் ஆதிக்கம் செய்யும் காத்தான்குடி

ரஞ்சன் ராமநாயக்கா என்ற துணை அமைச்சர் தன் இழிகுணங்களை மறைக்க முற்படவேயில்லை.

"நீ ஒரு பணக்காரி - கொழும்பில் பணக்கார பகுதியான கிறகரீஸ் வீதியில் வாழ்கிறாய் - உன் கணவரைக் கொன்றதே கொட்டியாக்கள்தானே! நீ ஏன் அவர்களுக்காக வக்காலத்து வாங்குகிறாய்?" என்று அந்த அமைச்சர் எந்த ஒரு கூட்டத்திலும் பேசவில்லை - நஞ்சைக் கொட்டியிருந்தார்.

மாறாக ஒரு செய்தியாளர் மகாநாடு ஒன்றைக் கூட்டி அங்கிருந்தே ஒரு தொலைபேசியை எடுத்து விஜயகலாவுடன் பேசினார். தொலைபேசியை (ஒலிபெருக்கி விசையைத் தட்டிவிட்டு) எல்லோருமே கேட்கும் வண்ணம் உரத்து ஒலிக்க வைத்தார். தன் உரையாடலை மகாநாட்டிலும் வேறு ஊடகங்களிலும் பல நூறு பேர் கேட்கிறார்கள் என்பதை விஜயகலா உணராவிட்டாலும் தனது கருத்தை தெளிவாக சிங்கள மொழியில் எடுத்துரைத்தார். புலிகளே உன் கணவரைக் கொன்றார்கள் என்று ராமநாயக்கா என்ற மந்திரி(ரி) குற்றஞ்சாட்டியபோது விஜயகலா பொறுமை இழக்காமல் - "நீர் கண்டீரா?" என்று நிதானமாகக் கேட்டார். இது நடந்து பல மாதங்களாகி விட்டன.

விஜயகலாவையும் அவரது கொள்கைகளையும் பிடிக்காத அவருடன் முரண்பட்ட வடபுல அரசியல்வாதிகள் பலர்கூட அவரது கருத்தை ஆதரித்து குரல் கொடுக்கத் தயங்கவில்லை.

சரி, இனி உங்கள் சிந்தனா யந்திரத்தை *FAST FORWARD* செய்து 2019 ஏப்ரல்-மே மாதத்திற்குக் கொண்டு வாருங்கள்.

ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்களுக்காக தன் உயிர் நீத்த யேசுபிரான் உயிர்த்தெழுந்ததை கிறிஸ்தவ மக்கள் கொண்டாடும் ஞாயிற்றுக்கிழமை. தேவாலயங்களில் பக்தர்கள் வெள்ளம் அலைமோதும். கொழும்பில்



மௌலவி சை ரான் பிரசங்கம் செய்த காத்தான்குடி பள்ளிவாசல்

மூன்று தேவாலயங்களிலும் கிழக்கிலங்கையிலும் பிரார்த்தனை நேரத்தில் மதவெறி மிருகங்கள் தேவனின் ஆலயத்திற்கு உள்ளேயே குண்டுகளை வெடிக்க வைத்தன. சற்றுத் தொலைவில் மூன்று 5 நட்சத்திர உல்லாச ஹோட்டல்களில் 'ஈஸ்டர்சண்டே' காலை உணவு பரிமாறிக் கொண்டிருந்தார்கள். குடும்பங்கள் பல தமது குழந்தை குட்டிகளுடன் (பலர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள்) 5 நட்சத்திர உல்லாச ஹோட்டலின் 'ஈஸ்டர் சண்டே' உணவை ரசித்து ருசித்துக்கொண்டிருந்தார்கள்.

இன்னும் சில மிருகங்கள் உணவு அருந்துவோர் மீது தமது பலத்தை - பராக்கிரமத்தை காட்டி குண்டுகளை வெடிக்க வைத்து குடும்பங்களை அழித்தன.

"அப்பாவிக் குடும்பங்கள் ஒன்றாகக் கூடி பிரார்த்திக்கும்போது ஒன்றாக அமர்ந்து உணவருந்தும்போது அவர்கள் மீது குண்டுகளை வெடிக்க வைத்து அவர்களை அழித்து விடு!" என்று எந்த ஒரு இறைவனோ சொல்லியிருந்தால் அவன் இறைவனே இல்லை. அப்படி ஒரு இறை நூல் எழுதியிருந்தால் அது இறை நூல் அல்ல.

அந்த இறை நூலை, தாம் கற்றுள்ளதாகக் கூறும் மதப் பிரச்சாரகர்கள் வழங்கும் தப்பான விளக்கங்கள்தான் இந்த இலங்கை உயிர்த்த ஞாயிறு வெறியாட்டம். திடீரென நாட்டை கௌவிக் கொண்ட கொடிய அரக்கனின் ஆட்டம் ஓய்ந்தபோது 321 உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருந்தன!

"30 வருட கால புலிப் பயங்கரவாதிகளை அடக்கியவர்கள் நாங்கள் - எதற்கும் அஞ்சமாட்டோம்" என்று ஈஸ்டருக்கு முன்பேசிக் கொண்டிருந்த சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள், சிங்கள ஊடகங்கள், இனவாதப் பிக்குகள் இப்போது பிறிதோர் ராகத்தில் தமது பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

"விடுதலைப் புலிகள் ஒரு இலட்சியத்துக்காகப் போராடினார்கள் - ஏப்ரல் 21 தாக்குதலை நடத்தியவர்களுக்கு இலட்சியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை." இப்படியெல்லாம் பாடுவது விஜயகலா போன்றவர்கள் அல்ல. சிங்கள அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள்தான்.

இலங்கையின் மொத்த ஜனத்தொகையான 22 மில்லியனில் 10 விகிதமே முஸ்லிம்கள். சிங்கள



ஒரு குடும்பம் மண்ணில் இணைகிறது



காத்தான்குடி மௌலவி சை ரான்

மக்களையும் தமிழ்மக்களையும் போல ஒரே மொழி மட்டுமே கற்கும் முட்டாள்தனம் முஸ்லிம்களிடம் இருக்கவில்லை.

சராசரி முஸ்லிம்கள் தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் கற்று இரு மொழிகளிலும் சரளமாகப் பேசுகிறார்கள். இவற்றோடு ஆங்கிலப் புலமையும் சேர மும்மொழிப் பாண்டியத்தில் இலங்கையின் எந்தப் பகுதியிலும் குடியேற முடிந்தது.

1990-களில் விடுதலைப் புலிகளினால் 75 ஆயிரம் முஸ்லிம்கள் வடபுலத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதை அடுத்து முஸ்லிம் இளைஞர்களை எட்டப்பன்களாகப் பயன்படுத்த சிங்கள இராணுவம் தயங்கவில்லை.

வடபுலத்தே விடுதலைப் புலிகளை அடக்குவதில் சிங்கள அரசும் இராணுவமும் கவனம் செலுத்திக்



குண்டு வெடித்த தேவாலயங்களில் ஒன்று

கொண்டிருந்தவேளையில், கிழக்கே முஸ்லிம் தமிழர்கள் அடர்த்தியாக வாழ்ந்த பகுதிகளில் அடிப்படைவாத - பழைமைவாத முஸ்லிம் குழுக்கள் காலூன்றத் தொடங்கின.

முஸ்லிம் இளைஞர்களைக் கவர்ந்திழுந்திருப்பது சவூதி அரேபியாவின் இஸ்லாமிய வஹாபிய பிரிவு. சவூதியிலும் பிற அரபு நாடுகளிலும் இருந்து பணம் வந்து கிழக்கில் குவிந்தது. கிழக்கு கடற்கரை நகரான காத்தான்குடி ஒரு குட்டி சவூதி அரேபியாவாக மாற்றப்பட்டது. புதிய பள்ளிவாசல்கள், கண்கவர் கோபுரங்கள், பெண்கள் அணியும் முழுநீள கறுப்பு அங்கிகள் விற்கும் கடைகள் என்பன வேகவேகமாக உருவாகின.

உயிர்த்த ஞாயிறு 21-04-19 வெடிகுண்டுத் தாக்குதலை திட்டமிட்டு நடத்திய அடிப்படைவாத தீவிரவாத சஹ்ரான் ஹாசிம் மௌலவியாக இருந்தது, காத்தான்குடியின் 60 பள்ளிவாசல்களில் ஒன்றில்தான்.

ஷங்கிரி-லா ஹோட்டலில் குண்டுத் தாக்குதல் நடத்தியவர்தான் சஹ்ரான். கிழக்கில் காவல் துறையினரைக் கொன்ற குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலி போராளி கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டார். இந்த சஹ்ரானின் காரோட்டி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தினால்தான் "அந்தக் கொலைகளைச் செய்தது நாங்கள்தான்" என்று காரோட்டி கூறினாராம். வெறும் ஐந்து வருடங்களுக்கு முன் மௌலவி மொஹமட் சஹ்ரான் ஹசீம் உருவாக்கிய ஒரு இயக்கமே இத்தகைய பெரிய தாக்குதலை - தாக்குதல்களை தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் திட்டமிட்டு நடத்தி 321 பேரைக் கொன்றமை பற்றி, சிங்கள அரசாங்கமும் படைகளும் பெரிய அண்ணன் அமெரிக்காவும் சின்ன அண்ணன் இந்தியாவும் அதிர்ச்சியிலிருந்து மீள நீண்ட காலம் பிடிக்கலாம். ●



Sky Wings Travel
Your Travel Is Our Passion...
25 YEARS of EXCELLENCE
9.7 out of 10 Rating on Trustpilot
Shows that We Value You!
Trustpilot
SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT
WORLDWIDE SPECIALS
COLOMBO Fr £404
CHENNAI Fr £381
DELHI Fr £369
KUALA LUMPUR Fr £441
SINGAPORE Fr £447
MELBOURNE Fr £632
AUCKLAND Fr £683
NEW YORK Fr £314
SYDNEY Fr £602
TORONTO Fr £312
119 Tooting High Street, London, SW17 0SY
0208 672 9111
Above fares are subject to availablity - T&Cs apply
IATA
5766 ATOL PROTECTED

செல்வ புவியரசன்

# இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த திமுகவின் வெற்றி



ராகுல் காந்தியைப் பிரதமர் வேட்பாளராக மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தபோது, பாஜகவை எதிர்த்து நின்ற மற்ற கட்சிகளின் தலைவர்கள் அதற்கு உடன்படவில்லை. முணுமுணுப்புகளும் எதிர்ப்புகளுமே எழுந்தன. பரிகாசங்களுக்கும் குறைவில்லை. இருந்தாலும், ராகுல்தான் பிரதமர் வேட்பாளர் என்ற தனது நிலைப்பாட்டிலிருந்து ஸ்டாலின் கொஞ்சமும் பின்வாங்கவில்லை. தேர்தல் முடிவிலோ, ராகுலை ஏற்காமல் தேர்தலைச் சந்தித்த எதிர்க்கட்சிகள் இந்தியா முழுவதுமே படுதோல்வியைச் சந்தித்திருக்கின்றன. மத்தியில் ஆளும் பாஜக கூட்டணி 350 இடங்களில் வெற்றிபெற்றிருக்கிறது. பாஜக மட்டுமே 303 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனாலும், தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி ஒரு தொகுதி நீங்கலாக அனைத்து இடங்களையும் கைப்பற்றியிருக்கிறது.

பலம் பொருந்திய ஆளுங்கட்சியை எதிர்க்கும்போது அதற்குத் தலைமையேற்பது யார் என்பதில் நீடித்த ஊசலாட்டமே இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகளின் படுதோல்விக்கு முக்கியக் காரணம். எல்லோரும் குறைந்தபட்ச உடன்பாட்டுடன் இணைந்து நின்று தேர்தலைச் சந்தித்திருந்தால், வெற்றிபெற முடியாமல் போயிருந்தாலும் இந்த அளவுக்கு மோசமான படுதோல்வியைச் சந்தித்திருக்க மாட்டார்கள். "தந்திரங்கள் இல்லாத வியூகங்கள் வெற்றியைத் தாமதிக்கும் வழி, வியூகங்கள் இல்லாத தந்திரங்களோ தோல்விக்கு முந்தைய வெறும் வாய்க்கூச்சல்கள்தான்" என்கிற சீன போர்க்கலை சூத்திரங்கள் ஜனநாயகத் தேர்தலுக்கும் பொருத்தமானதுதான். பாஜகவை எதிர்த்து நின்ற காங்கிரஸும் சரி, மற்ற மாநிலக் கட்சிகளும் சரி, தந்திரங்கள் இல்லாத வியூகங்களை வகுத்தார்கள் அல்லது வியூகங்கள் இல்லாத தந்திரோபாயங்களை மட்டுமே நம்பினார்கள்.

ஸ்டாலினுக்கு மட்டும் இந்த வெற்றி எப்படிக் கிட்டியது? அரசியலில் எதிர்முனையில் இருப்பது யார், தோழமைச் சக்திகள் யார் யார் என்பதில் தெளிவாக இருந்தார் ஸ்டாலின், மாநிலத்தில் அதிமுகவையும் மத்தியில் பாஜகவையும் எதிர்முனையில் நிறுத்தி, பாஜகவை எதிர்க்கும் அத்தனை கட்சிகளையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டது அவரது வியூகம். அக்கூட்டணிக்குத் தலைமையேற்று வழிநடத்துவதற்குரிய கட்டமைப்பை ஏற்கெனவே உறுதிப்படுத்தியிருந்தார் ஸ்டாலின். எதிரியை அடையாளம் காண்பதும் படைகளை ஒருங்கிணைப்பதும்தானே போர்க்கலையின் முதல் அத்தியாயம். அப்புறம்தானே படையெடுப்பு, தாக்குதல் எல்லாமும்.

### நமக்கு நாமே

2016 சட்டமன்றத் தேர்தலின்போது 89 தொகுதிகளில் மட்டுமே திமுகவால் வெற்றிபெற முடிந்தது. ஆனால், இன்னொருபுறம் தனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான அருமையான வாய்ப்பாக அத்தேர்தலைப் பயன்படுத்திக்கொண்டார். 2015-ல் மாநிலம் முழுவதும் சுற்றிச் சுழன்று அவர் மேற்கொண்ட 'நமக்கு நாமே' பயணம், கட்சியினரைத் தாண்டி பொதுமக்களிடம் அவருக்கு வரவேற்பைப் பெற்றுத் தந்தது, அரசியல்வாதிகளின் சீருடையாகவே மாறிவிட்ட வெள்ளைச்சட்டை, வேட்டியைத் தவிர்த்துவிட்டு, ஓர் இளைஞனுக்குரிய உற்சாகத்தோடு அவர் அந்தப் பயணங்களில் பங்கெடுத்துக்கொண்டார். நடைப்பயணம், சைக்கிள், ஆட்டோ, டிராக்டர் என்று எல்லா வாகனங்களிலும் ஏறி இறங்கினார். பள்ளி மாணவர்கள் முதற்கொண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வரைக்கும் கைகுலுக்கிப் பேசினார்.

பயணத்தின்போது தான் சந்தித்த ஒவ்வொருவரும் கூறிய விவரங்களை, அளித்த மனுக்களை, விடுத்த வேண்டுகோள்களை உடனுக்குடன் சமூக வலைதளங்களில் பகிர்ந்துகொண்டார். தங்களது வேண்டுகோள்கள் செவிமடுக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையே மக்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது. விவசாயிகள், தொழில்முனைவோர், கல்லூரி மாணவர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் சந்தித்து உரையாடினார். அவர்களிடமிருந்து 4 லட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்களைப் பெற்ற ஸ்டாலின், திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் அவற்றுக்கு இடம் கொடுத்திருக்கிறார். இன்னொரு பக்கம், குடும்பத்துக்குள் சகோதரர் மு.க.அழகிரிக்கும் அவருக்கும் இடையிலான வருத்தங்கள் கட்சிக்குள் எதிரொலிக்காமல் அந்தத் தேர்தலிலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். சிவகங்கை திருக்கோஷ்டியூரில் பெருமாள் கோயிலுக்கு அவர் சென்றது, திமுகவை இந்துக்களுக்கு எதிரான கட்சியாகச் சித்தரிக்கும் பிரச்சாரங்களுக்கு ஒரு மறுப்பாகவும் அமைந்தது.



### காவிரி நெடும் பயணம்

'முடியட்டும், விடியட்டும்' என்ற முழக்கத்தை முன்வைத்து நமக்கு நாமே' பயணத்தை நடத்தி முடித்தார் ஸ்டாலின். அதிமுக ஆட்சி முடிவுக்கு வரவில்லை, ஆனால், திமுகவுக்கு அது விடிவுகாலமாக அமைந்தது. தொடர்ந்து மக்களைச் சந்திப்பதை ஒரு வழக்கமாகவே மாற்றிக்கொண்டார் ஸ்டாலின். கடந்த ஆண்டு, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு அவர் காவிரிப் படுகையில் மேற்கொண்ட உரிமை மீட்புப் பயணம் தமிழக அரசியல் வரலாற்றிலேயே மிகவும் வித்தியாசமானது. நெடுஞ்சாலைகளைத் தவிர்த்துவிட்டு, முழுவதும் கிராமப்புற சாலைகளின் வழியாகவே காவிரிப் படுகையை வலம் வந்தார் ஸ்டாலின். திருச்சி முக்கொம்புவில் தொடங்கிய அவரது பயணம் ஆளுநர் மாளிகையில் முடிவடைந்தது.

காவிரி உரிமை மீட்புப் பயணத்தை திமுகவின் பயணமாக அல்லாமல் தோழமைக் கட்சிகளுடன் இணைந்தே ஸ்டாலின் நடத்தி முடித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும் இந்தப் பேரணியில் ஆர்வத்தோடு பங்கேற்றார்கள். இந்தக் கூட்டணி வெறும் தேர்தலுக்கான கூட்டணி அல்ல, கருத்தியலின் அடிப்படையிலானது என்பதையும் அவர் மக்களுக்கு உணர்த்தினார். இத்தனைக்கும் மக்கள் நலக் கூட்டணியால், கடந்த தேர்தலில் கடும் பின்னடைவைச் சந்தித்தவர் ஸ்டாலின். ஆனாலும், அவர்கள் மீது அவர் எந்தக் கசப்புணர்ச்சியையும் காட்டவில்லை என்பதே இன்று திமுக தலைமையிலான கூட்டணிக்கு வலிமை சேர்த்திருக்கிறது.

### மக்களோடு மக்களாக

தற்போது கிராம சபைக் கூட்டங்களைக் கையிலெடுத்திருக்கிறார் ஸ்டாலின். தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமல் கிராமப்புற, நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகங்கள் முடங்கிக்கிடக்கும் நிலையில், ஸ்டாலின் அதையே தனது அரசியல் ஆயுதமாக மாற்றிக்கொண்டிருக்கிறார். மக்களவைத் தேர்தல் பிரச்சாரங்களுக்கு இடையிலும் ஊராட்சி சபைக் கூட்டங்களை நடத்தியபடியிருந்தார். மக்களிடம் குறைகளைக் கேட்டார். அவற்றை நிவர்த்திக்க வாய்ப்பில்லை என்றாலும் நாங்கள் பொறுப்பேற்கும்போது கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்று மக்களுக்கு உறுதிமொழிகளை அளித்துவருகிறார். ஆளுங்கட்சிக்கு எதிரான, வலுவான பிரச்சாரங்களாக கிராம சபைக் கூட்டங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன.

ஸ்டாலின் பெற்றிருக்கும் வெற்றி என்பது வெறும் கூட்டணிக் கணக்குகளால் கிடைத்த வெற்றியல்ல. தான் சிறுகச் சிறுகச் சேகரித்த வெற்றியைத் தனது தோழமைக் கட்சிகளோடும் பகிர்ந்துகொண்டிருக்கிறார். அதற்குத் தயாராக இல்லாத மற்ற மாநிலக் கட்சிகள் தோல்வியைத் தழுவியிருக்கின்றன. ஸ்டாலின், தன்னைத் தனிப்பெரும் அரசியல் ஆளுமையாக நிறுவிக் கொண்டிருக்கிறார். ஸ்டாலினுக்கு ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான செல்வாக்குக்கு ஒரே காரணம், அவர் மக்களைச் சந்திக்கிறார், அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கிறார் என்பது ஒன்றேதான், மக்களாட்சியில் மக்களின் எதிர்பார்ப்பும் அது மட்டும்தான்.

ஆந்திர பிரதேசத்தில் ஜெகன்மோகன் ரெட்டி மேற்கொண்ட பாத யாத்திரை, அவரது வெற்றியில் முக்கியப் பங்காற்றியிருப்பதை இந்தியா முழுவதுமே ஏற்றுக்கொள்கிறார்கள். தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டுவரும் தொடர் பயணங்களும் அதற்கு இணையானது. ஜெகனின் யாத்திரை, மக்களவைத் தேர்தலில் மட்டுமின்றி மாநிலத்திலும் அவருக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்திருக்கிறது. மக்களவைத் தேர்தலில் தன்னை நிரூபித்திருக்கிற ஸ்டாலின், மக்களவையிலும் திமுகவின் செயல்பாட்டை நிரூபிக்கும்பட்சத்தில், தமிழ்நாடு சட்டமன்றம் அவருக்காகக் காத்திருக்கும்; அதற்கான போதிய அவகாசம் நிறையவே இருக்கிறது! •

# World Tour Store

SAVE UP TO **30% OFF*** ON EARLY BIRD BOOKINGS

**COLOMBO fr £449**

## Worldwide Flight Deals

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Chennai | fr £397 | Delhi | fr £359 | Toronto | fr £341 |
| Hyderabad | fr £419 | Goa | fr £458 | Bangkok | fr £398 |
| Kochi | fr £360 | Dubai | fr £295 | Singapore | fr £439 |
| Mumbai | fr £353 | Abu Dhabi | fr £312 | New York | fr £270 |

எங்கள் பயண முகவர்களுடன் தமிழிலும் பேசலாம்

**FLY NOW PAY LATER OR BOOK WITH A DEPOSIT**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

15 YEARS TRUSTED SERVICE 15 YEARS

**Wembley**
Unit 3 A, Plaza Parade, 29-33
Ealing Road, Wembley, HA0 4YA.

**Lewisham**
111b, Loampit Vale,
Lewisham SE13 7TG

3550 ATOL PROTECTED

*Above fares & offers are subject to availability. T&C's Apply.










# லண்டனில் முள்ளி வாய்க்கால் நினைவெழுச்சி நாளில் வானமும் விம்மி அழுதது!






**18.05.2009** முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடைபெற்று 10 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அதற்கான நீதி கிடைக்காத நிலையில் தமிழ்மக்கள் அனைவரும் நீதிக்கான பாதையில் எமது தேசியக் கொடியின் கீழ் அணிவகுத்துச் செல்கின்றோம் என்பதனை உலகுக்கு பறைசாற்றுமுகமாகவும் முள்ளிவாய்க்காலிலே கொல்லப்பட்ட எம் சொந்தங்களை நெஞ்சில் தாங்கியும் பிரித்தானியாவில் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்று இடம்பெற்றது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பல தமிழ் அமைப்புக்கள் இணைந்து இப் பேரணியினை நடாத்தியிருந்தனர்.

18.05.2019 மதியம் இரண்டு மணியளவில் *Green Park Station* இற்கு முன்பாக ஆரம்பமாகிய இப் பேரணி," *Free Free Tamil Eelam", "Justice Delayed Justice Denied", Commonwealth commonwealth suspend Sri Lanka", "Enough time for Sri Lanka End Ties with Sri Lanka"* போன்ற மக்களின் எழுச்சிக் கோசங்களுடன் ஆயிரக்கணக்கான மக்களுடன் பயணித்து மாலை 5 மணியளவில் பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தை வந்தடைந்தது. அதைத்தொடர்ந்து எழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றது.

பொதுச்சுடரினை 7 நாட்களும் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்ட தமிழீழ உணர்வாளர் சுஜீவன் அவர்கள் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரித்தானியக் கொடியினை தமிழ் இளையோர் அமைப்பைச் சார்ந்த செல்வி சுஜிஜீவா அவர்கள் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை களமருத்துவப் பொறுப்பாளர் திரு. மனோஜ் அவர்கள் ஏற்றிவைத்தார், அதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் எழுச்சி நிகழ்விற்கு வருகைதந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் உரைகள் மற்றும் இளையோரின் எழுச்சி உரை போன்றனவும் இடம்பெற்றது.

இவ் எழுச்சி நிகழ்வில் பத்திற்கும் மேற்பட்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்காலின் வலிகள் சுமந்த நடனம் மற்றும் அதிலிருந்து எழுச்சி கொள்ளும் விதமாக அமைந்த பறை இசை நடனம் போன்றன அரங்கேற்றப்பட்டது.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ்மக்களை நினைந்து பொதுச்சுடரினை ஏற்றியபொழுது 2009 இல் நடைபெற்ற இனப்படுகொலையை ஒரு கணம் நினைந்து வானம் கூட விம்மி அழுதது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் தமிழ்மக்கள் அனைவரும் ஒருமித்து முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நாளை எழுச்சிகொள்ளச் செய்தனர்.

அத்தோடு நேற்றைய நாளில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு நீதிவேண்டி பிரித்தானிய பிரதமருக்கு மனு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலிலே இனப்படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளை நினைத்து ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு மரக்கன்று நடுவோம் என்ற தொனிப்பொருளில் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. மேலும் முள்ளிவாய்க்காலின் வலிசுமந்த படங்கள் மற்றும் சில சித்தரிப்பு நாடகங்கள் போன்றன காட்சிப்படுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் முடிவல்ல...! தமிழீழம் அடையும் வரை தேசியத்தலைவரின் பாதையில் தேசிய அடையாளங்களுடன் ஒட்டுமொத்த தமிழினமும் பயணிப்போம் என்ற செய்தியை உலகரியச் செய்திருந்தது இம் மாபெரும் எழுச்சிப்பேரணி. ●


















வவுனியூர் இரா.உதயணன்

# மனிதம் மறந்த சொந்தங்கள்

இலையுதிர்காலம் தொடங்கியிருந்தது. மெல்லிய குளிர் கலந்த காற்று வெளியே வீசிக்கொண்டிருந்தது.

“மற்ற குளிர் நாடுகளோடு ஒப்பிடேக்க இங்க (U.K) பெரிசாக பனிக்கட்டிகள் விழுவதுமில்ல; குளிருமில்ல. பின்லாந்து, சுவீடன், ஜெர்மனி, ஐசிலாந்து இப்படிப் பல நாடுகளில அகோரமாகப் பனிக்கட்டிகளும் விழும், குளிரும் மோசமாக இருக்கும்.” - தர்மன் தனது நண்பன் சுபேனுக்கு சொல்லிக்கொண்டிருந்தான்.

அப்போது தேனீர்க்கோப்பையுடன் வந்த விமலகலா சுபேனுக்கு நீட்ட அவனும் வாங்கிக்கொண்டான்.

“எப்படி படிப்புப்போகுது?” - விமலகலா கேட்க,

“சுமாராகத்தான். வந்து ரெண்டு மாதங்கள்தானே ஆகுது. கலாநிதிப் படிப்பு நிறையப் புத்தகங்கள் வாசிக்க வேணும். அதுவும் மற்றவர்கள் என்ர துறையில செய்த ஆய்வுகள் எனது ஆய்வு பற்றிய விபரக்கோவையை கெதியில சமர்ப்பிக்கவேணும். அதற்கான வேலையைத்தான் இங்க செய்துகொண்டிருக்கிறன்." - சொல்லிவிட்டு சுபேன் விமலகலாவைப் பார்த்தான்.

விமலகலா ஊரில பத்தாம் வகுப்புவரைதான் படித்தவள். எப்படியோ ஏஜன்சியூடாக லண்டனுக்கு வந்து அவளது தூரத்து உறவினர்கள் திருமணம் பேசி தர்மனுக்கு கலியாணம் முடித்து வைத்தார்கள். தர்மனும் ஊரில சுபேனுடன் ஒன்றாகப் படித்தவன். மேற்படிப்பிற்காக லண்டனுக்கு வந்தவன்தான் சுபேன். முதன் முறையாக தர்மனின் வீட்டிற்கு இன்றுதான் வந்திருக்கிறான். தர்மன் புலம்பெயர்ந்து வந்து இருபத்தியெட்டு வருடங்களாகிவிட்டன.

முதலில் ஒரு கடையில் எடுபிடி வேலை செய்து, பிறகு பெற்றோல் ஸ்டேசனில வேலை செய்து, இரண்டு வருடங்களுக்கு முன்புதான் சொந்தமாக ஒரு கடையை வாங்கி நடத்தி வருகிறான். விமலகலாவும் அவனுக்கு உதவியாக அந்தக்கடையிலதான் வேலை செய்கிறாள்.

தர்மனுக்கும் விமலகலாவுக்கும் கஸ்டம் என்றால் எப்படி என்று நன்றாகவே தெரியும். இவ்வளவு தூரம் வளர்ந்ததற்கு காரணமே விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்தான்.

“உங்கட வாழ்க்கை இந்த நாட்டில எப்படிப் போகுது?” - சுபேனது கேள்விக்கு ஒரு நிமிடம்கூட சிந்திக்காமல் படாரென்று பதில் சொன்னாள் விமலகலா.

“எப்படி சுபேன் சொல்லுறது. எவ்வளவு கஸ்ரப்பட்டு உழைத்தாலும் ஒரு சதம்கூட மிச்சமில்ல. மகனும் பிரைவேட் பாடசாலைக்குப் போறான். ரெண்டு பேருமாக அந்தக் கடைக்குள்ள நின்று இரவு பகலென்று பார்க்காமல் கஸ்டப்பட்டுத்தான் அவனையும் படிக்க வைக்கிறம்.” - தர்மன் பதில் சொல்வதற்கு முதல் கஸ்டப்புராணத்தை சுபேனுக்குப் பாடிமுடித்தாள் விமலகலா. ஆனால், தர்மனின் வங்கிக்கணக்கில் இருக்கும் தொகைக்கும் கஸ்ரப்புராணத்திற்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லவேயில்லை. தப்பித்தவறி சுபேன் தங்கள் வீட்டில் தங்கியிருந்து பல்கலைக்கழகம் செல்ல நினைச்சாலும் என்ற கள்ளப்புத்தியுடன் இப்படியொரு பதிலை சொல்லிமுடித்தாள் விமலகலா.

ஆனால், சுபேனுக்கோ அப்படியொரு நோக்கமும் இருக்கவில்லை. விமலகலா யாருடனும் பேசிக்கொண்டிருக்கும் போது அவளது மூளையோ வேறு ஏதாவது யோசித்துக்கொண்டிருக்கும். எந்தவொரு கேள்விக்கும் தற்பாதுகாப்பாக பதில் சொல்ல அவளது மூளை பழகிவிட்டது.

தர்மன் விமலகலா சுபேனுக்கு சொன்ன பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் விமலகலாவையும் சுபேனையும் மாறி மாறிப் பார்த்தான்.

“கொஞ்சம் பொறுங்கோ வாரன். ஜீவகி உங்களிட்ட கொடுக்கச்சொன்ன பார்சலை எடுத்துக்கொண்டு வாரன்?” - சொல்லிவிட்டு விமலகலா அறையை நோக்கி நடந்தாள்.

தர்மன் சுபேனைப் பார்த்தான். “உன்ர மகள் கொழும்பில பட்டப்படிப்பு படிக்கிறாள். நீ இங்க பட்ட மேற்படிப்பு படிக்க வந்திருக்கிறாய். எவ்வளவு சந்தோசமாக இருக்குதடா.” - சுபேன் ஒரு பதிலும் சொல்லாமல் தர்மனைப் பார்த்துப் புன்னகைத்தான்.

விமலகலா பார்சலை கையிலெடுத்த வண்ணம் திரும்பி வந்தாள். அவளது நோக்கமும் தர்மனுக்கு நன்றாகவே புரியும்.

எவ்வளவு கெதியில வீட்டைவிட்டு அனுப்ப முடியுமோ அவ்வளவு கெதியில அனுப்பவேணும் என்பதுதான். அல்லாவிட்டால் தர்மன் ஏதாவது தனது நண்பனுக்கு உளறிக்கொட்டிவிடுவார் என்ற பயமும் அவளுக்கிருந்தது.

சுபேன் ஜீவகி கொடுத்து அனுப்பிய பார்சலை கையில் வாங்கிக்கொண்டு “கன காலத்திற்குப்பிறகு நாட்டுக்குப் போனனியள், எல்லா இடங்களுக்கும் போய் வந்திருப்பியள், அதுவும் குறிப்பாக உங்கட ஊருக்கும்தான் எண்டு நினைக்கிறன்”

தர்மன் வாயை திறப்பதற்குள் விமலகலா முந்திவிட்டாள்.

“அந்த வெய்யிலில எவ்வளவு கஸ்டப்பட்டுப் போனம். நுவரேலியாவுக்கும் போனபோதுதான் கொஞ்சம் குளிர்ச்சியாக இருந்தது. மகன் இனி அந்தப்பக்கம் வரமாட்டான் என்று சொல்லிப்போட்டான். கனகாலம் இங்க இருந்திட்டம். இங்கத்தைய காலநிலைக்கு பழகிப்போனதால அங்க போக அதுவும் அந்த வெயிலில நல்லாக் கறுத்துப்போனம்.”

சுபேனுக்கு அவளது பேச்சும் கதையும் சிரிப்பாகவிருந்தது. உள்மனதிற்குள் சிரித்துக்கொண்டான்.

“ஏதோ ரெண்டு பேரும் பொதுநிறமாக இருந்த மாதிரி இவ பீத்திக்கொள்ளுறா. அப்பவும் கறுப்பு இப்பவும் கறுப்புத்தான். அதற்குள்ள இவையளின்ர நினைப்பு” - சுபேன் சிரிப்பை அடக்கிக்கொண்டான்.

ஆனால், தர்மன் விமலகலாவைப் பார்த்து,

“நீ முந்தி ஒரு வடிவான பொதுநிறப் பொம்பிளைதானே. இங்க வந்துதான் கறுத்துப்போனாய் போல இருக்கு” என்று நக்கலாகச் சொல்ல,

“எனக்கு என்ன குறை” என்று சொல்லிவிட்டு சுபேனைப் பார்த்தாள்.

“உங்கட ஊருக்குப் போய் இனசனங்களைப் பார்த்தியளே.” சுபேன் மீண்டும் ஒரு கேள்வியை தூக்கிப் போட்டான்.

“சீச்சீ நாங்கள் அந்தப் பக்கமே போகேல்ல, எங்களுக்கென்று அங்க யார் இருக்கினம். உறவுகள் எல்லாம் ஒன்றில் வெளிநாடு வந்திட்டினம் அல்லது கொழும்பில வீடு வாங்கி தங்கிவிட்டினம்.”

தர்மன் இடைமறித்தான். “என்ன விமலகலா சொல்லுறாய். என்ர அக்காவும் மகளும் ஊரிலதானே இருக்கினம். அதை மறந்திட்டியோ”

“ஆமாம் எனக்கும் தெரியும். நிர்மலா அக்காவைத்தானே சொல்லுறாய்” சுபேன் சொன்னான். தர்மன் “ஆம்” என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினான்.

“அவவுக்கு ஒரு மகள்தானே. அந்தப் பிள்ளையும் இயலாதபிள்ளை. நடக்கவும் மாட்டுது.” சுபேன் மீண்டும் சொன்னான்.

“நான் என்ர உறவினர்களைப் பற்றித்தான் சொன்னனான்” விமலகலாவின் முகம் மாறிவிட்டதை சுபேனும் தர்மனும் அவதானிக்கத் தவறவில்லை.

“மகனும் ஊருக்கு வரமாட்டன் எண்டு அடம்பிடித்தான். அவனுக்கும் நாடு புதுசுதானே. வேயிலை அவனாலையும் சமளிக்க முடியேல்ல. அதனால கொழும்பில நிற்கேக்க போனில கதைத்துவிட்டு வந்திட்டம். எனக்கும் இவரின்ட அக்காவை போய்ப் பார்க்க முடியேல்ல என்ற கவலைதான். என்ன செய்யிறது. அடுத்தமுறை போகேக்க போய் பார்க்கலாம் என்று யோசிக்கிறம்.”



சுபேனின் முகம் மாறிவிட்டது. தர்மனின் முகத்தைப் பார்த்துவிட்டு தலையைக் குனிந்துகொண்டான்.

சிறிது நேர மௌனத்தின் பின்,

“நீங்கள் இன்னும் தேனீர் குடிக்கேல்ல ஆறப்போகுது” விமலகலா சொன்னாள்.

சுபேன் தேனீர்க் கோப்பையைக் கையிலெடுத்துக்கொண்டான்.

விமலகலாவின் மனது படபடவென்று அடித்துக்கொண்டது. அவளுக்கு சுபேன் இன்னும் என்ன கேட்கப்போகிறானோ என்ற பயம்.

தர்மனின் அக்கா நிர்மலா இருமுறை உதவிகேட்டு எழுதிய கடிதங்களை விமலகலா வாசித்துவிட்டு தர்மனுக்கும் தெரியாமல் கிழித்தெறிந்தது தர்மனுக்குத் தெரிந்தால் அவ்வளவுதான் என்று நினைத்தவளாய்,

“அப்பா அடுத்த தடவை போகேக்க கட்டாயம் நிர்மலா அக்காவை போய் பார்க்கவேணும். இந்ததடவை பிழைவிட்டுட்டம்” என்று நடிப்புப் போட்டாள்.

நிர்மலா பணம் கேட்டதெல்லாம் அவளுக்காகவல்ல. அவளது மகளுக்கிருக்கும் நடக்க இயலாத குறையைத் தீர்க்க வைத்தியம் பார்ப்பதற்காகவே.

ஆனால், வெளிநாடு வந்து பணத்தை சம்பாதித்தும் உறவுகளுக்கு உதவி செய்ய விரும்பாதவர்களில் விமலகலாவும் ஒருத்தி. இவ்வுலகைவிட்டு நீங்கும்போது ஒன்றையும் கொண்டு போகப்போவதில்லை என்ற நினைப்பு பலருக்கு இன்னும் வரவில்லை.

வேல் தர்மா



# ஈரானுக்கு எதிராக இஸ்ரேலின் ஏவற்பேயா அமெரிக்கா ?




அமெரிக்கா, இரசியா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய வல்லரசு நாடுகளுடனும் ஜேர்மனியுடனும் ஈரான் 2015-ம் ஆண்டு செய்த விரிவான இணைச் செயற்திட்டம் (Joint Comprehensive Plan of Action or JCPOA) என்னும் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக வெளியேறியது. பின்னர் ஈரான் மீதான தனது பொருளாதாரத் தடையை இறுக்கியது. முன்பு தடையில் இருந்து விதிவிலக்களிக்கப்பட்ட சீனா மற்றும் இந்தியா உட்பட சில நாடுகளும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடையில் உள்ளடக்கப்பட்டன.

அதன் மூலம் ஈரானின் பொருளாதாரத்தை சிதைவுறச் செய்து ஈரானின் யூரேனியப் பதப்படுத்தலை முற்றாக இல்லாமல் செய்வது தனது நோக்கம் என அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்துள்ளது.

### வளைகுடாவில் அமெரிக்காவின் அதிரடி நகர்வுகள்

ஈரானின் அரச படையான புரட்சிப் பாதுகாப்புப் படையை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா பிரகடனப் படுத்தியது. அதன் மூலம் தேவையான நேரத்தில் அவர்கள் மீது தாக்குதலை அமெரிக்கா நடத்தலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அணுவலுவில் இயங்கும் பெரு- விமானம் தாங்கிக் கப்பலான ஏப்ரஹாம் லிங்கனையும் மேலும் ஒரு சிறப்பு விமானப் படையணியையும் பாரசீக வளைகுடாவிற்கு அமெரிக்கா நகர்த்தியுள்ளது. அதில் அணுக்குண்டு வீசக் கூடிய B-52 விமானங்களும் உள்ளன. பாரசீக வளைகுடா என்பது ஈரான், ஈராக், சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம் ஆகிய நாடுகளால் சூழப்பட்ட கடற்பரப்பாகும். இதனூடாக உலக மசகு எண்ணெய் விநியோகத்தில் மூன்றில் ஒரு பகுதி பயணிக்கின்றது. பாரசீக வளைகுடாவில் இருந்து ஹோமஸ் நீரிணையூடாகவும் ஓமான் வளைகுடாவூடாகவும் அரபுக்கடலுக்குச் செல்லும் நீர்ப்பாதை கேந்திர முக்கியத்துவமானது.

### ஆறு நாட் போர்

1967-ம் ஆண்டு ஆறு நாட்கள் நடந்த அரபு இஸ்ரேலியப் போரில் அரபு நாடுகள் பெரும் பின்னடைவைச் சந்தித்தன. பின்னர் 1967-ம் ஆண்டு ஒகஸ்ட் மாத இறுதியில் சூடானியத் தலைநகர் கார்ட்டுமில் கூடிய அரபு லீக் நாடுகள் செப்டம்பர் முதலாம் திகதி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றின:

1. இஸ்ரேலுடன் சமாதானம் இல்லை.
2. இஸ்ரேலை அங்கீகரிப்பதில்லை.
3. இஸ்ரேலுடன் பேச்சு வார்த்தை இல்லை

இதை நிறைவேற்றிய சவுதி அரேபியா, எகிப்து, யேமன், குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் சவுதி அரேபியாவும் எகிப்தும் இஸ்ரேலுடன் இரகசியமாக நெருக்கமான உறவைப் பேணுகின்றன. அரபுநாடல்லாத ஈரானில் 1979ம் ஆண்டு மதவாதப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் மட்டும் இஸ்ரேல் என ஒரு நாடு இருக்கக் கூடாது என்கின்றனர். லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா அமைப்பு, காசா நிலப்பரப்பில் செயற்படும் ஹமாஸ் அமைப்பு மற்றும் பல அமைப்புக்களுக்கு ஈரான் படை, பயிற்சி, நிதி போன்றவை வழங்குகின்றது.

> **இஸ்ரேல் தொடர்ச்சியாக பலஸ்த்தீனியர்களின் நிலங்களை அபகரித்து யூதர்களைக் குடியேற்றிக் கொண்டிருக்கின்றது.**

### இஸ்ரேலின் வரலாறு

பலஸ்தீனத்தை ஆண்ட பிரித்தானியா இரண்டாம் உலகப் போரின் பின்னர் அங்கிருந்து வெளியேறும் போது அதன் ஆட்சிப் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைத்தது. ஐநா சபை பலஸ்த்தீனத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்க ஐநாவின் பலஸ்த்தீனத்திற்கான சிறப்பு ஆணைக்குழுவை அமைத்த போது அக்குழுவில் அரபுக்கள் எவரும் இடம்பெறாதபடி யூத செல்வந்தர்கள் பார்த்துக் கொண்டார்கள். அந்தச் சிறப்பு ஆணைக்குழு பலஸ்த்தீனத்தை யூதர்களுக்கு என்றும் அரபுக்களுக்கு என்றும் இரு நாடுகளை உருவாக்கியது. அதை நிராகரித்த அரபுக்கள் இஸ்ரேல் என்ற யூதர்களின் அரசை அழிக்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்ததால் பலஸ்த்தீனியர்கள் மேற்குக் கரையிலும் காசா நிலப்பரப்பிலும் அரசற்ற குடிமக்களாகினர். இஸ்ரேல் தொடர்ச்சியாக பலஸ்த்தீனியர்களின் நிலங்களை அபகரித்து யூதர்களைக் குடியேற்றிக் கொண்டிருக்கின்றது. சியோன் என்பது பலஸ்த்தீனத்தில் இருக்கும் ஒரு மலையின் பெயராக இருந்தது. இம்மலையில் யூதர்களின் அரசின் கோட்டை இருந்தது. பலஸ்த்தீனம் உதுமானியப் பேரரசின் ஆட்சியின் கீழ் 1808-ம் ஆண்டில் இருந்து 1922ம் ஆண்டு வரை இருந்தது. உதுமானியப் பேரரசு ஒரு இசுலாமிய அரசு என்றபடியால் யூதர்கள் தமக்கு என ஒரு நாடு வேண்டும் என உருவாக்கிய கொள்கை சியோனிசம் ஆகும். 1870-ம் ஆண்டிற்கும் 1897-ம் ஆண்டிற்கும் இடையில் பலஸ்த்தீனத்தில் இருந்து வெளியேறிய யூதர்களை மீண்டும் அங்கு குடியேற்றி அவர்களுக்கு என ஒரு நாடு உருவாக்க வேண்டும் என்ற முனைப்புடன் சியோனிசவாதிகள் செயற்பட்டனர். இப்போது உலகெங்கும் வாழும் யூதச் செல்வந்தர்கள் யூதத் தேசியவாதமான சியோனிசத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். Diaspora என்னும் சொல் யூதர்களை மட்டுமே குறிப்பிடும் ஒரு சொல்லாக இருந்தது. யூதர்களின் புலம்பெயர் சமூகம் உலகிலேயே மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது மட்டுமல்ல, மிக மோசமான இனக்கொலைக்கு உள்ளான சமூகமும் அதுவே. அவர்கள் தொழில்நுட்பத்துறையிலும் உளவுத்துறையிலும் உலகின் முன்னணி நாடாக இஸ்ரேலை மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவை யாவற்றிற்கும் பின்னணியில் உலகின் முன்னணி நகரங்களில் தமது நிதி நிறுவனங்கள் மூலம் உலக நிதிச் சந்தை, மூலதனச் சந்தை, பங்குச் சந்தை ஆகியவற்றில் பெரும் பங்காற்றி வரும் யூதர்கள் இருக்கின்றார்கள்.

### டிரம்பின் ஆட்சியும் இஸ்ரேலும்

இஸ்ரேலின் இருப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் ஈரானை அடக்குவதற்கு அங்குள்ள மதவாதிகளை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும். அதற்கு உகந்த அதிபரை அமெரிக்காவின் ஆட்சி பீடத்தில் யூதச் செல்வந்தர்கள் அமர்த்தியுள்ளனர். இரசிய யூதச் செல்வந்தர்கள் விளடிமீர் புட்டீன் மூலம் 2016 நவம்பரில் நடந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெறுவதை உறுதி செய்து கொண்டார்கள் எனக் கருதப்படுகின்றது. டிரம்பின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தவரும் அவரது ஆட்சியில் முக்கியமானவருமான அவரது மருமகன் ஜெரார்ட் குஷ்னர் ஒரு யூதர். இதனால் டிரம்ப் ஆட்சிக்கு வந்த பின்னர் பலஸ்த்தீனத்தில் ஓர் அரசுத் தீர்வு என்பது இல்லாமற் செய்யப்பட்டது. கிழக்கு ஜெருசேலம் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டு ஜெருசேலம் இஸ்ரேலின் தலைநகராக்கப் பட்டது. தற்போது ஈரானை அடக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. சிரியா, லிபியா, ஈராக் ஆகிய நாடுகள் அணுக்குண்டுகள் உற்பத்தி செய்ய முற்பட்ட போது அந்த ஆராய்ச்சி நிலைகளை இஸ்ரேல் குண்டு வீசி அழித்தது. ஆனால், ஈரான் தொலைவில் இருப்பதாலும் அதன் யுரேனியப் பதப்படுத்தல் நிலைகள் மலைப் பாறைகளுக்கு அடியில் ஆழமான இடத்தில் இருப்பதாலும் இஸ்ரேலால் அங்கு குண்டு வீச முடியவில்லை.

### ஈரானின் விரிவாக்கம்


ஈரான் தனது ஆதிக்கத்தை ஈராக், சிரியா, லெபனான், யேமன் ஆகிய நாடுகளில் அதிகரிப்பதை இஸ்ரேல் தனக்கு ஆபத்தாகப் பார்க்கின்றது. ஈரானை அடக்க அமெரிக்கா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இரசியா முட்டுக் கட்டை போடும் வாய்ப்பு குறைவு. 100% எரிபொருள் ஏற்றுமதித் தடை வரும் போது ஈரான் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அது சரணடையும் என அமெரிக்கா, இஸ்ரேல், சவுதி, அமீரகம் ஆகியவை நம்புகின்றன. பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட மக்கள் ஈரானிய ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய சவுதி அரேபியா இரகசியமாக தூபமிடலாம். பொருளாதாரப் பிரச்சனையைக் கருத்தில் கொள்ளாமல் இஸ்லாமின் எதிரிகளுக்கு எதிராக போராடும் படி ஈரானிய ஆட்சியாளர்கள் விடுக்கவிருக்கும் வேண்டுகோளை எத்தனை ஈரானியர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஈரானிய ஆட்சியாளர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

### போர் வருமா?

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் செய்யுமா எனும் கேள்விக்கு இல்லை என்பதே பதில். பண விரயத்தில் கரிசனையுள்ள டிரம்ப் போரை விரும்புவதில்லை. ஈரான் மீது போர் தொடுப்பதை இஸ்ரேல் விரும்பவில்லை. சவுதியும் தனது எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் ஈரானிய ஆதரவுப் போராளிகளால் தாக்கப்படுவதை விரும்பவில்லை. ஈரான் இனி எப்போதும் அணுக்குண்டு தயாரிக்க முடியாத நிலையை ஏற்படுத்த அமெரிக்காவை இஸ்ரேல் பயன்படுத்துகின்றது. அதற்கு சவுதி உட்பட பல அரபு நாடுகளும் இரகசிய ஆதரவு வழங்குகின்றன. ●

திரைப்புதினம்

## பெரிய ஹீரோக்கள் சில்க்கை சீரழித்தார்களாம்!



நடிகர்களின் பெயர்களை குறிப்பிடாமல் அவர்கள் சில்க் ஸ்மிதாவை சீரழித்ததாக குற்றம் சாட்டியுள்ளார் ஸ்ரீரெட்டி. நடிகை ஸ்ரீரெட்டி தெலுங்கு திரையுலகில் புயலை கிளப்பிவிட்டுவிட்டு சென்னையில் வந்து செட்டில் ஆகிவிட்டார். இருப்பினும் தனது 'பேஸ்புக்' பக்கத்தில் யார் மீதாவது பாலியல் புகார் தெரிவித்து வருகிறார்.

இந்நிலையில் அவரின் கவனம் மறைந்த நடிகை சில்க் ஸ்மிதா பக்கம் சென்றுள்ளது. பெரிய ஹீரோக்கள் அவரை உடல் ரீதியாக பயன்படுத்திக் கொண்டார்கள். அத்தகைய சைக்கோக்களை எப்படி லெஜண்டுகள் என்று அழைக்க முடியும். சினிமா அரசியலால் அவரை இழந்துவிட்டோம். அவர் ஒரு லெஜண்ட் நடிகை. உங்களை மறக்கமாட்டோம் சில்க் ஸ்மிதா மேடம் என்று தெரிவித்துள்ளார். சிலர் அவர் சொல்வது உண்மையாக இருக்குமானால் அந்த பெரிய ஹீரோக்களின் பெயர்களை வெளியிட்டால் நன்றாக இருக்கும் என்கிறார்கள். சிலரோ இந்த ஸ்ரீரெட்டிக்கு வேறு வேலையே இல்லை என்கிறார்கள். 17 ஆண்டுகளில் 450க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த சில்க் ஸ்மிதா கடன் தொல்லையாலும், காதல் தோல்வியாலும் மனமுடைந்து 1996ம் ஆண்டு தனது வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரின் வாழ்க்கை வரலாறு 'தி டர்ட்டி பிக்சர்' என்ற பெயரில் படமாக்கப்பட்டு சூப்பர் ஹிட்டானது. டர்ட்டி பிக்சர் படத்தில் சில்க் ஸ்மிதாவாக நடித்ததன் மூலம் வித்யா பாலனுக்கு மிகப் பெரிய பெயர் கிடைத்தது. அவர் கெரியரில் மறக்க முடியாத படமாக அது அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## ரகுல் ப்ரீத் யாரை சொல்கிறார்?

### ராணாவைக் காதலிக்கிறாரா?



**கா**தல் பற்றி ரகுல் ப்ரீத் சிங் தெரிவித்துள்ளது, அனைவரையும் அதிர வைத்துள்ளது. தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் கவனம் செலுத்தி வருகிறார் ரகுல் ப்ரீத் சிங். தெலுங்கில் புதுப்படங்களில் ஒப்பந்தமாவதும், விலகுவது அல்லது விலக்கப்படுவதுமாக உள்ளார். இந்நிலையில் அவர் காதல் பற்றி தெரிவித்துள்ளது அனைவரையும் வியக்க வைத்துள்ளது. உங்களை விட வயதில் பெரியவரை காதலிப்பீர்களா என்று ரகுல் ப்ரீத் சிங்கிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கொஞ்சமும் யோசிக்காமல் மனதில் பட்டதை தெரிவித்து அதிர வைத்துவிட்டார். காதலில் விழ காத்திருக்கிறேன். அவர் என்னை விட வயதில் பெரியவராக இருந்தாலும் சரி, சிறியவராக இருந்தாலும் சரி. எனக்கு கவலை இல்லை என்று ரகுல் ப்ரீத் சிங் தெரிவித்துள்ளார். அஜய் தேவ்கன் நடித்துள்ள பாலிவுட் படமான 'தே தே பியார் தே' படத்தில் நடித்துள்ளார் ரகுல் ப்ரீத் சிங். அந்த படத்தில் தன்னை விட ரொம்ப பெரியவரை காதலிப்பார் ரகுல். அது தான் கதையின் முக்கிய அம்சமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தன் வருங்கால கணவர் 6 அடி உயரம் இருக்க வேண்டும் என்று கூறி வந்த ரகுல் ப்ரீத், தற்போது வயது ஒரு பிரச்சனையே இல்லை என்று தெரிவித்துள்ளார். ரகுல் ப்ரீத் சிங்கும், ராணாவும் காதலிப்பதாக டோலிவுட்டில் கிசுகிசுக்கப்படுகிறது.

## சாயிபாபா ரசித்த சிவாஜி நடையழகு!

**செ**ன்னை கமலா தியேட்டர் அதிபர் வி.என். சிதம்பரம் சிவாஜியின் நெருங்கிய நண்பரும் ரசிகரும் ஆவார். அவர் சிவாஜியை ஒருமுறை புட்டபர்த்திக்கு அழைத்துச் சென்றார்.



புட்டபர்த்தி சென்றபோது பொது நுழைவுவாசல் அருகே சிறிது நேரம் அவர்களை உட்கார வைத்து பின் அழைத்து சென்றனர். நீண்ட தூரம் நடக்க வேண்டியிருந்தது. பிரத்யேக வழியாக உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

புட்டபர்த்தி சாய்பாபாவிடம் இருவரும் சென்றபோது பாபா தெலுங்கில், "மெயின் நுழைவு வாயிலிலிருந்து நடக்க வைத்து விட்டேனே என்று கோபம்தானே உனக்கு. சிவாஜியின் நடிப்பில் ரொம்ப ரசிக்கத்தக்கது அவருடைய நடைதான் என்று எல்லாரும் சொன்னார்கள். எனக்கு உன் நடையை பார்க்கனும்னு ஆசை. அதனால்தான் உன்னை இவ்வளவு தூரம் நடக்க வைத்தேன்" என்றார்.

சிவாஜிக்கு தெலுங்கு நன்றாகப் புரியும். பாபா சொன்னதை கேட்டு நெகிழ்ந்து விட்டார்.



## முன்னர் குறை கூறிய நயன் மீண்டும் முருகதாஸ் படத்தில்!

**'த**ர்பார்' படமாவது நயன்தாராவுக்கு திருப்தி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏ.ஆர். முருகதாஸ் இயக்கிய கஜினி படத்தில் சிறு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் நயன்தாரா. தற்போது அதே நயன்தாரா, முருகதாஸ் படத்தில் ஹீரோயினாக நடித்து வருகிறார். கஜினி படத்தில் நடித்தது குறித்து நயன்தாரா தெரிவித்ததை தேடி எடுத்து, படித்து அது குறித்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். கஜினி படத்தில் நடித்ததுதான் நான் என் கெரியரில் எடுத்த மோசமான முடிவு. என்னை ஒழுங்காக காட்டவில்லை. அதனால் அந்த படத்தில் நான் மோசமாக தெரிந்தேன் என்று நயன்தாரா முன்பு பேட்டி ஒன்றில் தெரிவித்தார். கதாபாத்திரம் என்னிடம் தெரிவித்தது போன்று படத்தில் வரவில்லை. என்னிடம் ஒன்றை தெரிவித்துவிட்டு, படத்தில் வேறு விதமாக காட்டியுள்ளனர். இருப்பினும் இது குறித்து நான் குறை கூற விரும்பவில்லை. இது எனக்கு ஒரு பாடம் என்றார் நயன்தாரா. கஜினி சம்பவத்தை அடுத்து எத்தகைய கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடிக்க வேண்டும் என்பதில் தெளிவாக உள்ளேன் என்று நயன்தாரா அப்பொழுது தெரிவித்தது பற்றி தற்போது பேச்சு கிளம்பியுள்ளது. தர்பார் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷை நடிக்க வைக்க விரும்பினார் ஏ.ஆர்.முருகதாஸ். ஆனால், ரஜினி தான் கீர்த்தி வேண்டாம், நயன்தாராவை ஒப்பந்தம் செய்யுங்கள் என்று கூறியிருக்கிறார். கஜினி போன்று இல்லாமல் தர்பார் படம் நயன்தாராவுக்கு திருப்தி அளிக்கும் அனுபவமாக இருக்கும் என்று நம்புவோமாக.

## 'மொன்ஸ்ட'ரில் எஸ்.ஜே.சூர்யாவுடன் பிரியா பவானி சங்கரின் அனுபவம்



'மொன்ஸ்டர்' படத்தில் எஸ்.ஜே.சூர்யாவுடன் நடிக்க முதலில் தான் தயங்கியதாக நடிகை பிரியா பவானி சங்கர் தெரிவித்துள்ளார்.

எஸ்.ஜே.சூர்யா, பிரியா பவானி சங்கர், கருணாகரன் உள்ளிட்டோர் நடித்துள்ள படம் மொன்ஸ்டர். 'ஒரு நாள் கூத்து' திரைப்படத்தை இயக்கிய நெல்சன் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்துள்ள 'மொன்ஸ்டர்' படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் எஸ்.ஜே.சூர்யா, பிரியா பவானி சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். விழாவில் பேசிய பிரியா, எஸ்.ஜே.சூர்யாவுடன் நடிக்க முதலில் தயங்கியதாகக் கூறினார். இதுகுறித்து அவர் பேசியதாவது: "இந்த படம் என்னுடைய படம். எனவே யாருக்கும் நான் நன்றி சொல்லப் போவதில்லை. இதை நான் என்னுடைய சொந்தப்படமாகத்தான் நினைக்கிறேன். எஸ். ஜே.சூர்யா படம் என்றதும் முதலில் நான் தயங்கினேன். நானும் அவர் படங்களை பார்த்திருக்கிறேன் அல்லவா. இது எனக்கு செட்டாகுமா என நெல்சனிடம் கேட்டேன். அவர் கதையை சொன்ன பிறகு தான் இந்த படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டேன். படப்பிடிப்பு மொத்தம் 25 நாட்கள் நடந்தது. அத்தனை நாட்களும் கலகலப்பாக சென்றது. எஸ்.ஜே.சூர்யாவை பார்த்து எந்த அளவுக்கு நான் பயந்தேனோ, அதற்கு நேர்மாறாக அவர் நடந்துகொண்டார். எஸ்.ஜே.சூர்யா கோபக்காரர் என உதவி இயக்குனர் கூறினார். ஆனால், ஒரு நடிகராக அவர் அப்படி இல்லை. படப்பிடிப்பின் போது எஸ்.ஜே.சூர்யா நிறைய கதை சொல்லுவார். அவர் உதவி இயக்குனராக இருந்ததில் இருந்து, இப்போது நடிகராக வலம் வருவது வரையிலான கதைகளை சுவாரஸ்யமாகக் கூறுவார். அவர் பேசும் போது சிரிக்காமல் இருக்கவே முடியாது" என பிரியா கூறினார்.



## நயன்தாரா விக்னேஷ் திருமணம் என்று நடக்கும்?

**இ**யக்குனர் விக்னேஷ் சிவனுக்கும், நயன்தாராவுக்கும் இடையே காதல் மலர்ந்தது. இருவரும் ஒன்றாக வெளியில் சுற்றும் புகைப்படங்களை தங்களது சமூகவலைதளப் பக்கங்களில் வெளியிட்டு வருகின்றனர். ஆனால், எப்போது திருமணம் என்ற கேள்விக்கு மட்டும் இருவரும் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றனர். நயன்தாரா நூறு படங்களில் நடித்து முடித்த பிறகு தான் திருமணம் என்று நிபந்தனை விதித்திருப்பதாகவும் அதற்கு விக்னேஷ் சிவனும் சம்மதம் சொல்லி விட்டதாகவும் இடையில் தகவல்கள் வெளியானது. ஆனால், அதற்கு விக்னேஷ் சிவனின் தாயார் சம்மதிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. இந்நிலையில், தற்போது இருவீட்டாரும் பேசி விரைவில் அவர்களது திருமணத்தை நடத்த திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தாண்டு இறுதியில் திருமண நிச்சயதார்த்தமும், அதனைத் தொடர்ந்து அடுத்தாண்டு திருமணமும் நடைபெறும் எனக் கூறப்படுகிறது. நயன்தாரா தற்போது ரஜினியுடன் தர்பார் படத்திலும், அட்லி இயக்கத்தில் விஜய் நடிக்கும் இன்னும் பெயரிடப்படாத படத்திலும் நடித்து வருகிறார். இப்படங்களை முடித்த பிறகு அவரது திருமணம் நடைபெறும் என்கின்றனர். விக்னேஷ் சிவனும் இரண்டு படங்களை இயக்க இருக்கிறாராம். திருமணம் பற்றிய பேச்சுக்காகத் தான் சமீபத்தில் இருவீட்டாரும் சந்தித்துள்ளனர். எப்படியோ இந்தா அந்தா என்ற பிரபுதேவாவுடன் திருமணம் கடைசியில் நடக்காமல் போனது. அது போன்று நயன்தாரா கையில்தான் எல்லாம்! பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# எங்கள் விடுதலை போராட்ட கதையை தமிழகத் தமிழரால் உருவாக்க முடியாது!




“எம் விடுதலை போராட்டத்தையோ, எம் மக்களின் கதையையோ தமிழகத் தமிழர்களால் எக்காலத்திலும் உருவாக்க முடியாது. தமிழகத்தில் இருக்கக்கூடிய படைப்பாளிக்கு அது ஒரு கதை. ஈழத்திலிருந்து வரக்கூடிய இயக்குநருக்கு அது ரத்தமும் சதையுமான வாழ்க்கை. எங்கள் சினிமாவை எங்களால்தானே உருவாக்க முடியும்”-இயக்குநர் ரஞ்சித் ஜோசப்பின் பேச்சில் அத்தனை ஆதங்கம். ஈழத்தமிழர்களின் தற்போதைய வாழ்வைச் சொல்லும் ‘சினம் கொள்’ திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

இது இந்தியத் தயாரிப்பில் எடுக்கப்பட்ட முதல் முழுநீள ஈழ சினிமா. முழுக்க ஈழ நிலப்பரப்பில் எடுக்கப்பட்ட திரைப்படத்தில் நடித்தவர்கள் அனைவருமே ஈழத் தமிழர்கள். இந்தியாவில் தணிக்கை பெற்று ‘U’ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ‘சினம் கொள்’, தேசிய விருதுத் தேர்வுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

**“நீங்கள் யார், ஈழத்தில் எந்த ஊர்... உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?”**

“பிறந்து வளர்ந்தது, இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள நீர்வேலி. யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் அங்கிருந்து 91-ம் ஆண்டு கொழும்புக்கு இடம்பெயர்ந்தோம். கொழும்பிலிருந்து 93-ம் ஆண்டு என் 16-வது வயதில் கனடாவுக்கு அகதியாகச் சென்றோம். ஸ்கூல், காலேஜ் அனைத்தும் கனடாவில்தான். பிலிம், டெலிவிஷனில் டிகிரி கோர்ஸ் சேர்ந்தேன். முடித்துவிட்டு குறும்படங்கள் எடுத்தேன். பிறகு கனடாவில் உள்ள தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றில் வேலை செய்தேன். 2005-ம் ஆண்டு இறுதியில் திரைக்கதை பற்றிய லெக்சர் கொடுப்பதற்காக வன்னிக்கு அழைக்கப்பட்டேன்.

நான்கைந்து மாதங்கள் வன்னியில் தங்கியிருந்தேன். அப்போது அரசியல் துறை சார்ந்தவர்களுடன் கதைக்கும்போது, ‘சினிமா என்ற இந்த ஊடகத்தை விடுதலைப் போராட்டத்துக்கு எப்படிப் பயன்படுத்தலாம்’ என்று பேசினோம்.

அந்தவகையில்தான் தமிழ்நாடு சென்று இயக்குநர் ஒருவரிடம் உதவி இயக்குநராகச் சேருவது என்று முடிவெடுத்தேன்”.

**“யாரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தீர்கள்?”**

“2007-ல் இந்தியா வந்து கவிஞர் அறிவுமதி அண்ணன் மூலம் இயக்குநர் சசி சாரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்து, “பூ” படத்தில் வேலை செய்தேன். இன்று எங்களுடைய மண் சார்ந்து, மொழி சார்ந்து ஒரு படம் எடுத்திருக்கிறேன் என்றால் அதற்கு கனடாவில் கற்ற சினிமாவைவிட சசி சாரிடம் கற்ற அனுபவங்கள்தான் முக்கியமான காரணம்.”

**“ ‘சினம் கொள்’ எந்தப் புள்ளியில் தொடங்கியது?”**

“இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களைப் பற்றி ஆவணப்படம் செய்யணும், இங்கு வருகிறீர்களா? என்று 2017-ல் ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் என்னை அழைத்தார். 2005-க்குப் பிறகு நான் ஈழம் பக்கமே போகவே இல்லை. திரும்ப உள்ளே போகும்போது ஒருவேளை கைது செய்யப்படலாமோ என்ற அச்சம். என்னதான் நடக்கிறதென்று பார்ப்போம் என்று துணிந்து போனேன். அங்கு டிஸ்கஷனின் போது, ‘இதை ஏன் நாம் முழுநீளப் படமா பண்ணக்கூடாது’ என்ற எண்ணம். அதற்கு இலங்கைப் பணத்துக்கு ஒரு கோடி ரூபாய். இந்தியப் பணத்துக்கு 40 லட்சம் தேவை என்பது புரிந்தது. நண்பர்களும் உதவ முன்வந்தார்கள். ‘சினம் கொள்’ தொடங்கிவிட்டோம்.

இறுதிக்கட்டப்போரில் கைது செய்யப்பட்ட ஒரு போராளி, ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு விடுவிக்கப்படுகிறான். ‘போராட்டம் மௌனிக்கப்பட்ட 2009-க்குப் பிறகு ஈழத்தமிழனுடைய நிலை என்ன?’ என்ற கேள்வியை அவன் பார்வையில் மூன்று விதமான கருத்துகளோடு முன்வைக்கிறேன். ஒன்று, ‘எந்நேரத்திலும் சுடப்படுவாய், செத்துப் போகத் தயாராகவே இரு’ என்று மக்களை பய உணர்வோடே வைத்திருப்பது. அடுத்து, தமிழ் நிலப்பரப்பில் கஞ்சா, ஆல்கஹால், நீலப்படம் போன்ற பண்பாட்டுச் சிதைவுகள், மூன்றாவது, போராளிகளின் தற்போதைய நிலை. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போராளிகளின் பொருளாதார நிலை பரிதாபகரமாக உள்ளது. ஒருவேளைச் சாப்பாட்டுக்கே அல்லல்படுகிறார்கள். விடுவிக்கப்பட்ட போராளிகளில் இதுவரை 100-க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். ‘என் இறுதிக்காலத்தில் மாவீரர்களின் குடும்பங்களுக்காகவும் காயப்பட்டு உடல் அவயங்களை இழந்த போராளிகளுக்காகவும் வாழ்வதுதான் என் இலக்கு’ என்று தலைவர் பிரபாகரன் சொல்லியிருக்கிறார். அதற்கு சர்வதேசரீதியில் ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி வைத்திருந்தார்.



ரஞ்சித் ஜோசப்

இன்று அவர் இல்லை என்ற சூழலில் அவர் கட்டியெழுப்பிய அந்தப் பொருளாதாரம் என்ன ஆனது? வெளிநாடுகளில் உள்ள அந்தப் பொருளாதாரக் கட்டமைப்புகள் அனைத்துமே அதற்கான பொறுப்பாக இருந்தவர்களின் சொந்தச் சொத்தாக மாறிவிட்டன என்பதே உண்மை. ‘சினம் கொள்’ பட வில்லனே அப்படி ஒரு புலம் பெயர்ந்த தமிழர்தான். இப்படியான பிரச்னைகளை ஓரளவுக்கேனும் சர்வேதச சமூகத்தின் முன் இந்தப் படம் வைக்கும்.

வசனம் மற்றும் பாடல்களை எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதியிருக்கிறார். இசை என்.ஆர்.ரகுநாதன். ஒளிப்பதிவு மாணிக்கம் பழனிக்குமார். படத்தொகுப்பு அருணாசலம். ‘ஆண்டவன் கட்டளை’ படத்தில் நடித்த அரவிந்தன்தான் ‘சினம் கொள்’ நாயகன். நாயகி, நர்வினி டேவிட். டென்மார்க்கில் வசிக்கும் ஈழப் பெண். இவர்களுடன் தமிழக நடிகர் தனஞ்செயனும் நடித்திருக்கிறார்.”

**“ஈழத்தில் படப்பிடிப்பு நடத்த அனுமதி கிடைத்ததா?”**

“ஸ்க்ரிப்டை இலங்கைத் திரைப்படக் கூட்டுஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளுமா என்ற தயக்கத்திலேதான் கொடுத்தோம். படப்பிடிப்பு நடத்த அனுமதித்தனர். 15 நாள்கள் ஷூட்டிங் முடித்திருந்த நிலையில் திடீரென்று ஒருநாள் இலங்கை பிலிம் போர்டில் இருந்து ‘ஷூட்டிங்கை நிறுத்துங்கள். மீறிச் செய்தால் கேமராவைப் பறிமுதல் செய்வோம், கைது செய்வோம்’ என்று சொன்னார்கள். நீண்ட முயற்சிகளுக்குப் பிறகு, ‘ஷூட் பண்ணும்போது எங்கள் கண்காணிப்பாளர் ஒருவர் உங்களுடனேயே இருப்பார். அவரிடம் காட்சிகளைச் சொல்லி அனுமதி பெற்ற பிறகே ஷூட் செய்ய வேண்டும்’ என்ற நிபந்தனையுடன் அனுமதித்தார்கள். அப்படித்தான் படத்தை முடித்தோம்.”

**“2005-க்குப் பிறகு 12 வருடங்கள் கழித்து 2017-ல் ஈழம் சென்றீர்கள். எப்படி இருந்தது அந்த உணர்வு?”**

“எத்தனையோ ஆயிரம் குடும்பங்களில் தலைவன் கிடையாது, தலைவி கிடையாது, பிள்ளைகள் கிடையாது. மீதம் இருப்பவர்களுக்கும் கை, கால்கள் கிடையாது. தமிழர் பகுதிகளில் இன்று தமிழ் இரண்டாம் நிலைக்குப்போய், எங்கும் சிங்களம்தான். எங்கு பார்த்தாலும் ராணுவம். சுதந்திரமாக இருக்கிறோம் என்ற எண்ணம் உங்களுக்கு வராது. யாரோ ஒருவர் உங்களைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார் என்ற எண்ணம்தான் வரும்.”

**“இலங்கையில் சமீபத்தில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?”**

“என் பார்வையில் இது ஒரு திட்டமிடப்பட்ட சதி. தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் சிங்களப் பேரினவாத அரசு சில முஸ்லிம்களைப் பயன்படுத்திக்கொண்டது. சிங்களவர்களைத் தவிர தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் எனச் சிறுபான்மை இனங்கள் நிம்மதியாக வாழ முடியாது என்ற சூழலை இலங்கை அரசாங்கம் உருவாக்கியுள்ளது என்பதே உண்மை.”

**- ம.கா.செந்தில்குமார்.**

மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**



# செல்பி SELFIE



செல்பி யுகம். கலியுகம் கரைந்து, செல்பி யுகமாக மாறிவிட்டது. கலியுகத்தில் கடவுளே அவதாரமெடுத்தாலும், அவரும் செல்பி எடுப்பார். Likeக்காக ஏங்குவார் மக்களும் அவரை வைத்துச் செல்பி எடுத்து *Trending* ஆக்க விடுவார்கள். அந்தளவுக்கு செல்பி, சுய - புகைப்பட ஆர்வம் உலக மக்கள் அனைவரையும் ஆட்கொண்டுவிட்டது.

கால் நூற்றாண்டுகளாக உலக மக்கள் வாழ்வில் செல்போன் எனும் அலைபேசி நீக்கமற நிறைந்து விட்டது. தொலைபேசியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி அலெக்ஸான்டர் கிரகாம் பெல் கூட தனது தற்போது உயிரோடு இருந்தால் கண்டுபிடிப்பின் ஆளுமை கண்டு அதிர்ச்சி அடைந்திருப்பார். தாய் தந்தை, சகோதரன் சகோதரி, உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அப்புறப்படுத்தி விட்டது அலைபேசியின் வரவு. படுக்கை அறையிலும், கணவன்-மனைவிக்கிடையே கூட மூன்றாவது நபராக நிரந்தரமாகக் குடிபுகுந்துவிட்டது இந்த செல்போன்.

நம் கையில் உள்ள கருவியை *(Mechine / Equipment)* அதனுடைய பன்முக செயல்திறனையும் *(Multi Skilled)*, செயல் ஆற்றலையும் *(Performance)*, குறைவாக மதிப்பிட்டு *(Under Estimate)*, அலைபேசி *(Mobile Phone)* என்றே இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறோம்; சொல்லிக் கொண்டிருக்கிறோம். *Mobile Phone* என்பது கையில் எடுத்துச் செல்லக்கூடிய கம்பியில்லா தொலைபேசிக்கு சூட்டப்பட்ட நாமகரணம். சாதாரண *Mobile Phone* என்பது முதலாம், இரண்டாம், உலகப் போர்களில் பயன்படுத்தப்பட்ட அந்தக்கால அணுகுண்டின் ஆற்றலுடன் மட்டுமே ஒப்பிடலாம்.

ஆனால், இன்று நமது கையில் தவழும் நவீன 'ஐ போன்' போன்ற கருவிகள் பல மடங்கு வீரியமானவை; பன்முக செயலாற்றல் *(Multi Skilled)* திறனுடையவை. நடைமுறையில் அமெரிக்க அதிபரையே சமாதானப் பேச்சுவார்த்தை நெருக்கடிக்கு ஆளாக்கிய கொரிய தீப கற்பகத்தில் *(Korea)* பரிசோதனை செய்யப்பட்ட நவீன அணுகுண்டுக்கு சற்றும் குறையாத ஆற்றல் பெற்றது. நொடிப் பொழுதில் பேரழிவை உண்டாக்கும் ஆற்றல் பெற்றது.

சில வருடங்களுக்கு முன்பு இந்தியாவில், மும்பையில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலுக்கு மூளையாகப் பயன்படுத்தப்பட்ட *Black Berry* செல்போன் முற்றிலுமாக தடை செய்யப்பட்டது இன்றளவும் இந்தியாவில் *Black Berry* போனுக்குத் தடையை நீக்காது இருப்பதும், செல்போன்களின் தீவிரவாத செயல் ஆற்றலுக்கு சான்று. நீங்கள் கையில் வைத்திருப்பது கையடக்க கணனி *(Hand Held Computer)*. இனிமேலும் இதனை *Mobile Phone* என்று அழைப்பதைத் தவிர்த்து, *Mobile Com* என்று அழைப்பதே பொருத்தமாயிருக்கும். தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும், அதன்மூலம் உறவுகளை மேம்படுத்தவும் உருவாக்கப்பட்ட அலைபேசி இன்று புற்றுநோய் போல் அசுரவளர்ச்சி பெற்று மனித உறவுகளுக்கிடையில், சந்தேகத்தையும் விரிசலையும், ஏன் விவாகரத்துக்களையும் கூட உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

நாள்தோறும் புதுப்புது உயர்ரக *(Latest Model Mobile Phones)* அலைபேசிக் கருவிகள் சந்தையில் தொடர்ச்சியாக அறிமுகமாகிக் கொண்டே இருக்கின்றன. *Mobile Phone* வருகைக்குப் பிறகு *Camera, Watch, Calculator, Radio* போன்ற சாதனங்களின் தேவையும் விற்பனையும் பெரும் சரிவைச் சந்தித்துள்ளன. அனைத்துச் சாதனங்களும் அலைபேசிக்குள் அடங்கிவிட்டன. புதிய ரக *Mobile Phone* மொடல்களில் காமிரா தொழில்நுட்பமே பிரதானமாக மேம்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரே ஒரு காமிரா என்றிருந்த காலம் மலையேறி, முன்புறக் காமிரா, பின்புறக் காமிரா *(Front and Rear Camera)* என்பதுகூட பழம் கருவியாகி தற்போது நவீன ஐந்து




காமிராக்கள் வரை பொருத்தப்பட்ட அலைபேசி கருவிகள் விற்பனைக்கு வந்துள்ளன. காமிரா, தொழில்நுட்பம் வளர வளர சாதாரணமானவர்கள்கூட ஹொலிவுட் காமிராமேன் போன்று சிறப்பான படப்பிடிப்பாளர்களாக முன்னேறிவிட்டார்கள். புதிய புதிய இடங்களுக்கு உல்லாசப் பயணம் சென்றால்கூட இடங்களைக் கண்டுகளிப்பதைவிட *Mobile Phone* வாயிலாக படங்களைச் சுட்டுத் தள்ளுவதிலும் *(Photo Shoot)* பின்னர் இணையத்தில் பதிவேற்றி *Like*கள் வாங்குவதிலும் லயித்துத் திரிகிறார்கள். தன்னை முன்நிறுத்தி தன்னைத்தானே படம் பிடித்துக்கொள்ளும் *Selfie* வசதி செல்போன் வருகையால் நமக்குக் கிடைத்த வரம். செல்பி தொழில்நுட்ப *(Selfie Technology)* வருகைக்குப்பின், தற்போது உலகெங்கும் ஒரு விநாடியில் பத்து லட்சத்து 55 ஆயிரம் சுயபடங்கள் *(Slfie)* எடுக்கப்படுவதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை விரைவாக அதிகரிக்க பெரும் சாத்தியங்கள் உள்ளன. ஆபத்தான இடங்களில் சாகச செல்பி முயற்சியில் உயிரிழப்போர் எண்ணிக்கையும் நாள்தோறும் கூடிக்கொண்டே போகிறது. ஒரு மலை உச்சியிலோ அல்லது ஒரு திரைப்பட நடிகருடனோ செல்பி எடுப்பதற்காக ஒருவர் எவ்வளவு முயற்சி செய்திருப்பார். எவ்வளவு சிரமப்பட்டிருப்பார். எவ்வளவு கஷ்டம், எவ்வளவு அவமானம் பட்டிருப்பார். எவ்வளவு நேரம் செலவு செய்திருப்பார் என்று அந்தப் படத்தைப் பார்க்கும் எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஒரு வெற்றியின் பின்னால், நூறு முயற்சிகள் தோல்வியில் முடிந்திருக்கும். வெற்றி மட்டுமே வெளியில் தெரியும். புகைப்படமாகப் பரிமாறப்படும், இந்த செல்பி படங்களைப் பார்த்து, தானும் அதுபோல அல்லது அதைவிடச் சிறப்பாக படம் பிடிக்க ஆவல் கொண்டு சூடு போட்டுக் கொண்டவர்கள் வரலாறு வெளியே தெரிவதில்லை. செல்பி முயற்சியின் விபரீதம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. இது ஒருபுறம் இருக்க, உலகெங்கும் பதிவிடப்படும் புகைப்படங்களில் *(Photos)* *96* சத விகிதமான படங்கள் மறுமுறை பார்க்கப்படுவதில்லை. வெறும் *4* சதவீத படங்கள் மட்டுமே இரண்டாவது முறைக்கு மேல், பார்க்கப்படுகிறது என்று புள்ளிவிபரம் குறிப்பிடுகின்றது. மீண்டும் பார்க்கப்படாத *96* சதவிகித புகைப்படங்களின் எண்ணிக்கை பல நூறு கோடிகளைத் தாண்டும். இன்று அனைத்தும் குப்பைகளாய் குவிந்து கிடக்கின்றன. இதற்காக செலவழிக்கப்பட்ட காலமும், பொருளும் எவ்வளவு வீண் விரையம். சிந்திக்க வேண்டாமா? நம் செயல் திறனை ஆக்கபூர்வமாக்க முயற்சிக்க வேண்டாமா?

செல்பி யுகத்தினால் மருத்துவத் துறையில் ஏற்பட்ட தாக்கம் என்ன? 'செல்பி மனநிலை' நேரில் காணும் மனிதர்களை நம்ப மறுக்கின்றது; சந்தேகிக்கின்றது; புகைப்படங்களை பெரிதும் நம்புகின்றது; ஆச்சரியப்படுகின்றது; கொண்டாடுகின்றது! எல்லாவற்றுக்கும் ஆதாரம் *(Evidence)* தேடுகின்றது. சந்தேகம் பெருக்கெடுக்கின்றது. எந்த மனிதனும் தான் ஆரோக்யமாக இருப்பதை ஒப்புக்கொள்வதே இல்லை. ஏதாவது வியாதி இருப்பதாகக் கூறினால், சந்தோஷத்துடன் மருந்துகளை விழுங்கத் தொடங்கிவிடுகின்றான். இதுவே செல்பி மனிதனின் பிம்பம்.

மனிதன் பஞ்சபூதங்களால் கட்டமைக்கப்பட்டவன். இயற்கையாய் உருவாகி, இயல்பாய் வாழ்ந்து, இயற்கையோடு மறைந்து போய் விடக்கூடிய உடலமைப்பைப் பெற்றவன். நோயின்றி ஆரோக்கியமாக வாழ ஆசீர்வதிக்கப்பட்டவன். செயற்கையாகத் தயாரிக்கப்படும் பொருட்கள் எல்லாம் அச்சு அசலாக ஒரே மாதிரி இருக்கும். இயற்கையான மனிதனின் உருவத்திலும், செயற்பாட்டிலும் ஒருவரோடு ஒருவர் ஒத்திருக்க மாட்டார். வேறுபாடுகள் ஏராளம். பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா நிலையிலும் சந்தேகம். குழந்தை பிறந்தவுடன் பேசவோ நடக்கவோ சிறிது காலதாமதமானாலும் சற்றே சிந்திக்க மறந்து ஏதோ வியாதி என்று சந்தேகித்து, மருத்துவரை நாடி ஓடுகின்றோம். பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சி, சற்று முன்னே பின்னே வந்தாலும் அதற்கும் சந்தேகம்-மருத்துவ ஆலோசனை. திருமணம் செய்து அவசரமாகக் குழந்தை பிறக்காவிட்டாலும் அவசரப்பட்டு மருத்துவ ஆலோசனை. நாற்பது வயதினை எட்டிவிட்டாலோ, டயபட்டிஸ், *Blood Pressure*, கொலஸ்ரோல் ஏன் வரவில்லை? என்று சந்தேகம்! வியாதிகளை வரவேற்கும் விதமான மருத்துவப் பரிசோதனை. அறுபது வயதைத் தொட்டு விட்டாலோ மாரடைப்பு மற்றும் மரண பயம், தொடர் மருத்துவமனை வாசம். குழந்தைப் பருவம் முதல் தொடர்ச்சியாக உட்கொள்ளும் மருந்துகளின் உபயமாக உண்டாகும் சிறுநீரக செயலிழப்பு *(Kidney Failure)*, கல்லீரல் பாதிப்பு *(Liver Cirrhoesis)*, புற்றுநோய் *(Cancer)* போன்ற வியாதிகளின் படையெடுப்பு, வாழ்நாள் முழுவதும் நோயுற்று இருக்கும் அவலம். என்ன தீர்வு? நான் நோயாளியா? எனக்குள்ளது வியாதியா அல்லது இயற்கையான மாற்றமா? இந்த சிந்தனை ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகோலும்.

ஆழ்ந்த அவதானமும் *(Carefull Assesment)*, நம்பிக்கையான ஆலோசனையும் *(Confident Advice)* பக்க விளைவுகளற்ற மருத்துவமும் *(Safe Medication)* ஒருங்கிணைந்த ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியத்தையும், அமைதியையும், ஆனந்தத்தையும் வாரி வழங்கும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**

# மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை

## MRT

## Menstrual Regulation Treatment



ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation





ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects



அதீத ரத்தப்போக்கு
Over Bleeding




கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility




## சிறப்பு சிகிச்சைகள்

பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்




பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயபட்டிஸ் (Diabetes)




உடல் எடை அதிகரித்தல்
Obesity



முகப்பரு
Pimples



தலைவலி
Headache



சரியான தூக்கமின்மை
Sleepless



முடிகொட்டுதல்
Hair Fall

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

## HOMOEO CARE

இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

0044 7833341693 homoeocare www.homoeocare.com homoeocare@rediffmail.com

உ
சிவமயம்







# உயர்வாசற்குன்று முருகன் கோயில்

**BRITTANIA HINDU (SAIVA) TEMPLE TRUST**

Registered Charity No: 269067
200A Archway Road, London N6 5BA | Tel:0208 348 9835
Email: Secretary@highgatehillmurugan.com |Web: www.highgatehillmurugan.org

**மூன்றாவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகத்தின் பத்தாவது மகோற்சவ விழா**

# பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் - 2019

**முருகப்பெருமான் அடியார்களே!**

இலண்டன் மாநகரில் மூத்த கோயிலாக அமைந்து விளங்கும் உயர்வாசற்குன்றினிலே கோயில் கொண்டருள் புரியும் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானின் கருணையினால் மேற்படி கோயிலின் மகோற்சவ விழா நிகழும் விகாரி ஆண்டு ஆனி மாதம் 17 ஆம் நாள் (01.07.2019) திங்கட்கிழமை காலை மிருகசீரிட நட்சத்திரமும் சதுர்த்தசி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய நன்னாளிலே கொடியேற்ற வைபவ விழாவுடன் தொடங்கி 14ம் நாள் (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலையிலே தேர்த்திருவிழாவும், 15ம் நாள் (15.07.2019) திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் மாலை கொடி இறக்கமும் நடைபெற்று செவ்வாய்க்கிழமை (16.07.2019) திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவுறத் திருவருள் கூடியுள்ளது.

## 02.07.2019 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 13.07.2019 சனிக்கிழமை வரை

*காலை 08.15 மணி : சங்கல்பம்*
*காலை 08.30 மணி : அபிஷேகம்*
*காலை 09.45 மணி : பூஜை*
*காலை 10.30 மணி : கொடித்தம்பப் பூஜை*
*காலை 11.15 மணி : வசந்தமண்டப பூஜை தொடர்ந்து திருவீதியுலா*
*பகல் 12.30 மணி : மகா பிரசாதம்*

*மாலை 05.45 மணி : சாயரட்சைப் பூஜை*
*மாலை 06.45 மணி : கொடித்தம்பப் பூஜை*
*மாலை 07.15 மணி : வசந்த மண்டபப் பூஜை தொடர்ந்து திருவீதியுலா.*
*இரவு 09.30 மணி : மகாபிரசாதம்.*

## - மகோற்சவ நிகழ்வுகள் -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30.06.2019 | ஞாயிறு | காலை | 09.30 | மணி | - கணபதி ஹோமம் மாலை பூர்வாங்கக் கிரிகைகள் |
| 01.07.2019 | திங்கள் | காலை | 11.30 | மணி | - கொடியேற்ற வைபவம் மாலை 7.00 மணி திருவிழா |
| 08.07.2019 | திங்கள் | காலை | 05.00 | மணி | - ஆனி உத்தரம் , ஸ்ரீ நடேசர் அபிஷேகம் |
| 08.07.2019 | திங்கள் | மாலை | 07.45 | மணி | - கைலாய வாகனம் புறப்பாடு |
| 09.07.2019 | செவ்வாய் | மாலை | 07.00 | மணி | - மாம்பழத் திருவிழா |
| 10.07.2019 | புதன் | மாலை | 07.45 | மணி | - மஞ்சம் புறப்பாடு |
| 12.07.2019 | வெள்ளி | மாலை | 06.00 | மணி | - வேட்டைத் திருவிழா |
| 13.07.2019 | சனி | மாலை | 07.45 | மணி | - சப்பறம் புறப்பாடு |
| 14.07.2019 | ஞாயிறு | காலை | 11.00 | மணி | - சுவாமி தேர் ஏறி வீதி உலா வருதல் |
| 15.07.2019 | திங்கள் | காலை | 10.00 | மணி | - தீர்த்தத் திருவிழா, இரவு 7.30 மணி கொடி இறக்கம் |
| 16.07.2019 | செவ்வாய் | மாலை | 07.00 | மணி | - திருக்கல்யாண விழா – பொது உபயம் |
| 17.07.2019 | புதன் | மாலை | 07.00 | மணி | - வைரவர் மடை |

அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாய் வருகை தந்து, ஆலய நடைமுறைகளுக்கு அமைவாக வழிபாட்டிற் கலந்து கொண்டு, புண்ணியப் பேறு பெறுவதுடன் தாயகத்தில் நிலையான சாந்தியும், சமாதானமும், அமைதியும் ஏற்படவும், எல்லோரும் செல்வங்கள் அனைத்தும் பெற்று நல்வாழ்வு வாழவும் வழிபாடு செய்வோமாக.

குறிப்பு: இம் மகோற்சவ விசேட நாட்களில் பூஜை நேரத்தில் மாற்றம் ஏற்படலாம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

JR Print

- ஆலய நிர்வாகம் -



உ

# ஈழபதீஸ்வரர் ஆலயம்

**Eelapatheeswarar Aalayam**
**(Shive Temple)**
**Pavitt Hall, Union Road, Wembley HA0 4AU. Tel: 0208 902 3238**
**www.eelapatheeswarar.com**

## பிரும்மோற்சவ விஞ்ஞாபனம் 2019
## (02.06.2019 - 19.06.2019)

***சிவ மெய்யடியார்களே!***

**எல்லாம் வல்ல ஸ்ரீ பர்வதவர்தினி அம்பிகா சமேத ஈழபதீஸ்வர பெருமானின் ஆலய பிரும்மோற்சவ விழா மங்களகரமான விகாரி வருடம் வைகாசி மாதம் 20ம் நாள் 03.06.2019 திங்கள் கிழமை அன்று ரோகினி நட்ஷத்திரமும் பிரதமை திதியும் கூடிய சுபதினத்தில் அன்று காலை 10.30 மணியளவில் கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பித்து 15 தினங்கள் பிரும்மோற்சவ விழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.**

### பிரும்மோற்சவ நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 02.06.2019 | ஞாயிறு | காலை 9.00 மணி | கணபதி ஹோமம் |
| | | மாலை 6.00 மணி | சாந்தி வழிபாடு, விநாயகர் வீதி உலா |
| **03.06.2019** | **திங்கள்** | **காலை 10.30 மணி** | **கொடியேற்றம்** |
| | | மாலை | விநாயகர் யாக ஆரம்பம் |
| 05.06.2019 | புதன் | காலை | விநாயகர் யாக நினைவு |
| | | மாலை | முருகன் யாக ஆரம்பம் |
| 08.06.2019 | சனி | காலை | முருகன் யாக நிறைவு |
| | | மாலை | பக்தி முக்தி பாவனோற்சவம், சிவமஹாயகம் ஆரம்பம் |
| 12.06.2019 | புதன் | மாலை | மாம்பழத் திருவிழா |
| 14.06.2019 | வெள்ளி | மாலை | பஞ்சமுகார்சனை கைலாய வாகன காட்சி |
| 15.06.2019 | சனி | மாலை | சப்பறத்திருவிழா |
| **16.06.2019** | **ஞாயிறு** | **காலை** | **சித்திர தேரில் வீதி உலா (10.30 மணிக்கு தேர் புறப்படும்)** |
| 17.06.2019 | திங்கள் | காலை 10.00 மணி | தீர்த்தோற்சவம் மஹாயாக நிறைவு<br>கொடியிறக்கம் |
| 18.06.2019 | செவ்வாய் | மாலை 07.00 மணி | திருக்கல்யாணம் |
| 19.06.2019 | புதன் | மாலை | வைரவர் மடை |
| 21.06.2019 | வெள்ளி | காலை | கும்பாபிஷேகம் தினம், 108 வலம்புரி சங்காபிஷேகம் |

### பிரும்மோற்சவ நிகழ்ச்சி நிரல்

| காலை | மாலை |
|---|---|
| 08.30 அபிஷேகம் | 6.00 பூஜை |
| 10.00 பூஜை | 6.30 ஸ்தம்ப பூஜை |
| 10.45 ஸ்தம்ப பூஜை | 7.00 கலை நிகழ்ச்சிகள் |
| 11.30 வசந்த மண்டப் பூஜை | 7.30 வசந்த மண்டபப் பூஜை |
| 12.00 சுவாமி திருவீதி உலா | 8.00 சுவாமி திருவீதி உலா |
| 01.00 பிரசாதம் வழங்குதல் | 9.30 பிரசாதம் வழங்குதல் |

## விசேட நாட்களில் பூஜை நேரம் மாற்றப்படும்

**சிவ அடியார்கள் அன்பர்கள் அனைவரும் பிரும்மோற்சவ விழாவில் பங்குபற்றி பூஜைக்கு தேவையான பொருட்களைக் கொடுத்து சிவபுண்ணிய பேறு பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டுகிறோம்.**

**பிரும்மோற்சவ குருக்கள் : சிவாகம கிரியாரத்தினா சிவஸ்ரீ சுரேஸ்வரகுருக்கள்**

**ஆலயகுருமார் : சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ ராஜசேகரக்குருக்கள் / சிவாகம கிரியா துரந்தகர் சிவஸ்ரீ ஹரிஹர சுப்ரமணியகுருக்கள்**

இங்ஙனம் **ஆலய தர்மகர்த்தாக்களும், நிர்வாக சபையினர், திருவிழா உபயகாரர்களும்**



ஏ.ஜே.ஞானேந்திரன்

## உருளும் உலகில்
## மக்களைப்(44) பெற்ற மகராசி

**ஆ**று தடவைகள் இரட்டைக் குழந்தைகள், 4 தடவைகள் ஒரேயடியாக 3 குழந்தைகள், மூன்று தடவைகள் ஒரே சூலில் 4 குழந்தைகள் - நம்ப முடியவில்லைத்தான். ஆனால், உண்மை. ஆப்பிரிக்க நாடான உகாண்டாவின் 39 வயதான ஒரு பெண்தான் இப்படி பிள்ளைகளைப் பெற்றெடுத்துள்ளாள். பனறி நிறையக் குட்டிகளைப் போடும் என்பது நாமறிந்த ஒன்று. ஆப்பிரிக்க பெண்களும் பொதுவாக அதிக பிள்ளைகளைப் பெறுவதும் நாமறிந்ததே. ஆனால், ஆதிசயிக்கத்தக்க வகையில் இப்படிப் பிள்ளைகளைப் பெற்றிருக்கிறாள் இவள். 12 வயதில் திருமணமான மரியம் நபரான்ஸி என்ற இவள், 20 தடவைகள் பிள்ளைகளைப் பெற்றுள்ளாள். சில பிள்ளைகள் இறந்து போக, இப்பொழுது இவள் வளர்க்கும் பிள்ளைகளின் தொகை 38. மொத்தமாகப் பெற்றெடுத்தவை 44. இவளைவிட 28வயது மூத்த கணவன், மனைவி பிள்ளைகளைப் பெறும் வேகத்திற்கு அஞ்சியோ அல்லது வேறு காரணமோ தெரியவில்லை, மனைவியை விட்டு ஓடிப் போய்விட்டான். தற்போது இவளது குழந்தைகள் 2 வயதிலிருந்து 23 வயது வரை இருக்கின்றன. நான்கு தகரக் கொட்டில்களில், ஒன்றுக்கு நான்கு என்று பற்பல வேலைகளைத் தினமும் செய்து, தன் குடும்பத்தை ஓட்டுகிறாள் இவள். உணவுக்காக தினமும் 25 கிலோ சோள மா தேவைப்படுகிறதாம். மாமிசமும் மீனும் இவர்களுக்கு ஆடம்பரப் பொருட்களாகி விட்டன....





## 27 வருடத்தில்
## கலைந்த “தூக்கம்”

முனிறா அப்துல்லா என்ற அந்த அரபுப் பெண் விழிப்பாய் இருந்த நாட்களில் அமெரிகக ஜனாதிபதியாக இருந்தவர் ஜேரர்ஜ் புஷ். சோவியத் ஒன்றியம் உடையும் விளிம்பில் இருந்த காலமும் அதுதான். வளைகுடா யுத்தம் முடிவடைந்த அந்தத் தருணம்-அதாவது 1991இல் முனிறாவின் வயது 32. இவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குடியரசின் பிரஜை. ஒரு விபத்தில் சிக்கிக் கொண்ட இவர், சுயநினைவை இழந்து விட்டார். 27 வருட இடைவெளியின் பின்னர் கடந்த வருடம் ஜூன் மாதந்தான் சுயநினைவுக்கு திரும்பியிருக்கிறார். ஜேர்மனியின் மூனிச் நகரின் மருத்துவமனையொன்றில்தான் இதுகாலவரையில் இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. தன்னம்பிக்கையை இழக்கவில்லை. அம்மா ஒரு நாள் கண் திறப்பாள் என்று தான் பூரணமாக நம்பி இருந்ததாக, 32 வயதான மகன் ஓமார் கூறியுள்ளார். விபத்து நடந்த சமயம் இவரது வயது 4. இப்படி சுயநினைவு மீளப் பெறுபவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் என்கிறார் இவருக்கு சிகிச்சை அளித்து வரும் ஜேர்மனிய மருத்துவர். கடந்த வருடம் படுக்கையில் இருந்தவர், தன் மகனின் பெயரைச் சொல்ல ஆரம்பித்தபின், படிப்படியாக குணமாக ஆரம்பித்துள்ளார் என்று ஆச்சரியத்துடன் குறிப்பிடுகிறார் மருத்துவர். இரு வாரங்கள் கழித்து குரான் வாசகங்களை வரிசையாக ஒப்புவிக்க ஆரம்பித்தாராம் இந்தப் பெண்...



## உஷார் பேர்வழியாகும் பச்சைக்கிளி

*போதை வஸ்து கும்பல் கடத்தலில் சம்பந்தப்பட்ட இருவரை அதிகாரிகளிடமிருந்து தப்புவிக்க, வீட்டிலிருந்த கிளியொன்று எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. பிரேசிலின் பியாயுய் என்ற பிராந்தியத்திலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீட்டுக்குள் நுழைந்த அதிகாரிகளைக் கண்டதும், “மம்மி பொலிஸ்” என்று, இந்தக் கிளி பிரேசில் மொழியில் கீச்சிட்டு மேல்மாடியில் இருந்தவர்களை உஷார்படுத்தி உள்ளது. என்றாலும் அதன் முயற்சி தோல்வியிலேயே முடிந்துள்ளது. வீட்டிலிருந்த ஒரு பதின்ம வயதுப் பெண்ணையும், இன்னொரு ஆணையும் போதை வஸ்து பொதிகளோடு கைது செய்துள்ளார்கள். கிளியையும் கைது செய்து கொண்டு போக இவர்கள் தவறவில்லை. ஆனால், இந்தக் கிளி பொலிஸ் நிலையத்தில் வாயே திறக்கவில்லை. இதனால் பொலிஸாரின் கதை சிருஷ்டிக்கபட்டதோ என்றுகூட சந்தேகம் எழுந்துள்ளது. சட்டத்தோடு விளையாட நன்கு பயிற்சியளிக்கப்பட்ட கில்லாடிக் கிளி என்கிறார்கள் பொலிஸ் அதிகாரிகள். ஒரு செய்தியின்படி, இங்குள்ள ஒரு வனவிலங்குகள் காப்பகம் ஒன்றில், கிளி தன்னிச்சையாக பறந்து காட்டுக்குள் செல்ல பயிற்சியளித்து வருகிறார்கள் என்று சொல்லப்படுகின்றது. 2010இலும் இதேபோல பொலிஸாரைக் கண்டதும் “ஓடு ஓடு” என்று கீச்சிட்ட கிளியொன்றை கொலம்பியாவில் பிடித்திருந்தார்கள். பொலிஸாரால் பிடிக்கப்பட்ட இப்படியான உஷார் பேர்வழிப் பறவைகள் தொகை இன்றுவரையில் 1700!*

## கிழங்கில் ஒரு தங்கும் விடுதி

அமெரிக்காவில் உலகின் மிகப்பெரிய உருளைக்கிழங்கைக் கொண்டு 2 படுக்கைகள் கொண்ட தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள இடாஹோ என்ற மாகாணத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டில் 28 அடி நீளம் 12 அடி அகலம் 12 அடி உயரத்தில் 6 தொன் இராட்சத உருளைக்கிழங்கு விளைவிக்கப்பட்டது. இது தான் உலகிலேயே மிகப்பெரிய உருளைக்கிழங்கு ஆகும். இந்த உருளைக்கிழங்கு தற்போது 2 படுக்கைகள், மின்சார வசதி கொண்ட தங்கும் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது. இது வாடிக்கையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது. இதில் ஒரு நாளைக்கு தங்க 200 டொலர்கள் வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இந்த அறைக்குள் குளியலறையும் உள்ளடக்கம். ஓர் இரவுக்கு 200 டொலர் என்ற கணக்கில் - இந்த விடுதியை எவரும் பதிவு செய்து கொள்ளலாம். அமெரிக்காவின் இடாஹோ மாகாணத்தில் இராட்சத கிழங்குகள் உற்பத்தியாகின்றன. 1800களிலிருந்து கிழங்கு விளைச்சலுக்கு பிரபல்யமான இங்கு ஒரு வருட கிழங்கு உற்பத்தி 13 பில்லியன் இறாத்தல்கள்.!





## ஆட்டமும் தேட்டமும்

இன்றைய நாட்களில் விளையாட்டுகள் என்பன தொழில்களாக மாறியிருக்கின்றன. உழைப்பும் அபரிதம். டென்னிஸ் புகழ் அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸின் பிரமாண்டமான ஆடம்பர பங்களா அண்மையில் 8.1 மில்லியன் டொலர் தொகைக்கு விற்பனையாகி உள்ளது. நீச்சல் குளம், புற்றரையுடனான பெரிய தோட்டம் என்று மிடுக்கோடு நிற்கின்றது இந்த ஆடம்பர வாசஸ்தலம். 2017 ஒக்டோபர் தொடக்கம் 12 மில்லியன் டொலரே இதன் விற்பனை விலை என்றிருந்த செரினா காலப்போக்கில் 11.99 மி, 9.99 மி. என்று இறங்கி, இறுதியில் 8 மில்லியனுக்கு விற்றுள்ளார். இப்படிக் குறைத்து விற்றாலும் இந்த 37வயதான டென்னிஸ் வீராங்கனைக்கு நஷ்டமில்லை என்கிறார்கள். 2006இல் இவர் இதை வாங்கிய விலை 6.62 மில்லியன் டொலர்கள். 37 வயதான இந்த வீராங்கனை இதுவரையில் 23 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளை வென்றிருப்பதோடு, மார்கிரெட் கோட் என்பவரின் உலக சாதனையை (24) எட்டிப் பிடிக்க இன்னும் ஒரேயொரு கிராண்ட் ஸ்லாம் போட்டியில் வென்றாக வேண்டும். உலக தரப்படுத்தலில் 11ஆம் இடத்தில் நிற்கும் இவர் இன்னமும் விளையாடிக் கொண்டுதான் இருக்கிறார்.

# விஞ்ஞானி



இந்தியாவில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து-அரசாங்க உதவியால் பட்டணத்தில் படித்து-அதி திறமையாக சித்தியடைந்து-பட்டம் பெற்று- மூன்று வருடங்களுக்கு முன்- அமெரிக்காவில் இயங்கும் பிரபல ஸ்தாபனமொன்றில் தலைமை விஞ்ஞானியாகப் பதவியேற்றுச் சென்ற முப்பது வயதுடைய குமரன்-பதவியேற்ற பின் இப்பொழுது முதன் முறையாக தன் பெற்றோரைப் பார்க்க இந்தியாவிற்கு வந்திருக்கிறார்.

அமெரிக்க வாழ்க்கை முறைக்குப் பழகிப் போன குமரனுக்குத் தன் பெற்றோர்களின் வாழ்க்கை முறைகளைப் பார்த்தபோது மனத்திற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

அதற்குப் பரிகாரமாக தகப்பனாருக்கு ஒரு காரும் அதை ஓட்டுவதற்கு ஒரு சாரதியையும் ஒழுங்கு செய்தார். சமையல் போன்ற வீட்டு வேலைகள் யாவற்றையும் கவனிப்பதற்கு தாயாருக்கு ஒரு வேலைக்காரியை ஒழுங்கு செய்தார். அதி நவீன தொலைக்காட்சி பெட்டி ஒன்றை வீட்டில் பொருத்துவதற்கு முன்பணம் செலுத்தினார்.

வாழ்க்கையை சுலபமாக்கும் எத்தனையோ ஆடம்பரப் பொருட்கள்-நவீன வசதிகள்-சொகுசு சாதனங்கள்-விடுமுறையில் வந்த விஞ்ஞானி தனது பெற்றோருக்கு கொடுத்த பரிசுகள்.

பெற்றோர்களின் பிரச்சனைகளை-சிரமங்களை தீர்த்து- அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்த சந்தோஷத்தில் லீவு முடிந்ததும் அமெரிக்கா திரும்பினார் விஞ்ஞானி.

ஒரு வருடம் வெகு விரைவாக கடந்து விட்டது.

ஒரு நாள் தந்தையிடமிருந்து வந்த கடிதத்தை ஆவலுடன் பிரிக்கிறார் விஞ்ஞானி.

அன்புள்ள மகனுக்கு!

கடந்த சில மாதங்களாக எனக்கும் அம்மாவிற்கும் ஒரு வகை நெஞ்சு வலி. நேற்றுத்தான் டாக்டரைப் பார்க்க சென்றிருந்தோம். இருவருக்குமே போதிய உடற்பயிற்சி இல்லாததால் இரத்தத்தில் கொழுப்பு அதிகமாக இருக்கிறதாம். இது தவிர இரத்தோட்டம் மெதுவாக இருப்பதனால் சில சில உடற் தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்.

அதனால் தான் இப்போது காரில் ஒரு இடமும் செல்வதில்லை. முன்பு போல நடந்தே செல்கிறேன். அம்மாவும் தனது வேலைக்காரியை வேலையிலிருந்து நிறுத்தி விட்டு வேலைகளை தானே கவனித்துக் கொள்கிறாள். விரைவில் நாம் சுகமடைந்து விடுவோமென நினைக்கிறேன்.

கடிதத்தை படித்து முடித்த குமரனுக்கு-எங்கோ-எப்போதோ-படித்தது ஞாபகத்திற்கு வருகிறது:

ஒரு பிரச்சனையைத் தீர்க்க முயன்று ஒன்பது பிரச்சனைகளை புதிதாக உருவாக்கும் கண்டறியாத விஞ்ஞானம்!

# எதிர்நீச்சல்

அந்த ஆற்றங்கரையிலுள்ள மிகப் பெரிய பாறை ஒன்றின் மீது-நீட்டி நிமிர்ந்து-தனது இரு கைகளையும் கோர்த்து தலைக்கு அடியில் வைத்து-வானத்தைப் பார்த்தபடியே மல்லாக்கப் படுத்திருக்கிறான் பார்த்திபன்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித நடமாட்டமே இல்லை. அருகில் ஆறு ஓடும் சத்தம் மட்டும் சுருதி பிசகாது காதுகளில் ஒலிக்கிறது. வானத்தில் வெகு உயரத்தில் ஒரு தனி பருந்து தன் இறக்கைகளை நன்றாக விரித்து காற்று வீசும் திசையில் சுகமாக மிதக்கிறது. திடீரென மிக பலமாக வீசிய காற்று உலர்ந்த இலை ஒன்றை கண்ணுக்கெட்டாத தூரத்திற்கு எடுத்துச் செல்கிறது.

பார்த்திபன் படுத்திருந்த பாறை இப்பொழுது போதி மரமாகிறது!

எதற்காக அந்த பருந்து தன் இறக்கைகளை தன் இஷ்டத்திற்கு அடித்து தான் விரும்பிய திசையில் பறக்க முயற்சிக்கவில்லை? அப்படி முயற்சித்தால் எவ்வளவு முட்டாள்தனமான காரியம் அது!



ஆதியுமின்றி அந்தமுமின்றி-எல்லைகளற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் இந்த பிரபஞ்சம் கூறு போட முடியாத ஒரு முழுமை. வானத்தில் மிதக்கும் அந்த பருந்து- காற்று தூக்கிச் சென்ற அந்த சருகு- பாறையில் படுத்திருக்கும் இந்த பார்த்திபன்-இவையெல்லாம் அந்த முழுமையிலிருந்து பிரிக்க முடியாத அதன் பகுதிகள்.

இந்தப் பகுதிகள் தனியாக இயங்க முடியாது- இயங்க முயற்சிப்பது முட்டாள்தனம். அந்த முழுமையின் நெறி வழுவாத இயக்கத்தினால் தான் இந்த பகுதிகளின் வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது.

பிறந்ததிலிருந்து இன்று வரை எத்தனை முட்டாள்கள்-வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் எதிர்நீச்சல் போடு என்று எனக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அதை கேட்டு அதன்படி நடக்க முயற்சித்த எத்தனை முட்டாள்கள் இங்கு சந்தோஷமாக வாழ்ந்து கிழித்திருக்கிறார்கள்.

எதற்காக இங்கு ஒருவன் நீந்த வேண்டும்? இங்கு எதில் அவன் வெற்றி பெறப் போகிறான்? முட்டாள்தனமாக ஒருவன் நீந்த முற்பட்டால் அவனுக்கு இங்கு கிடைப்பது அளவிலாத் துன்பங்களும் துயர்களும் மாத்திரமே.

வாழ்க்கையை புரிந்தவர்கள் முதலில் நீந்துவதை கைவிட வேண்டும். வாழ்க்கை அழைத்துச் செல்லும் இடத்திற்கு உல்லாசமாக-மகிழ்ச்சியாக-அந்த பருந்து போல- மிதந்து செல்ல வேண்டும். அந்த பயணத்தை- அந்த இயக்கத்தை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த வாழ்க்கை ஒரு பண்டிகை! அப்படி வாழ்பவன் ஒரு புத்தன்!

# ஆண்டிகள்

வறுமையில் வாடும் மூன்றாம் உலக நாடுகளை எவ்வாறு முன்னேறச் செய்யலாம் என்பதை ஆராயும் முகமாக பிரபல உலக ஸ்தாபனங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மகாநாடு ஒன்றில் உலக வங்கியின் சார்பில் கலாநிதி வரதன் பேசிக்கொண்டிருக்கிறார்.

மிகப் படித்தவர் அவர். சபையில் இருப்பவர்களும் மெத்தப் படித்தவர்கள்.

சபையோர்களே!

மூன்றாம் உலக நாடுகளில் வாழும் மக்கள் வறுமையில் வாடுவதன் காரணம் அவர்களின் அறியாமையே. அந்த அறியாமையை மட்டும் நாம் போக்கி விட்டால் அதன் பின் நாடுகளுக்கிடையில் வேற்றுமையே கிடையாது. மக்களின் அறியாமையைப் போக்குவதற்கு இந்த நூற்றாண்டில் நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு அரிய சாதனம்-கம்ப்யூட்டர். உலக ஸ்தாபனங்கள் தங்களால் முடிந்த அளவு பணத்தைச் செலவு செய்து வறிய நாடுகளில் இருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கம்ப்யூட்டர் கிடைக்க ஒழுங்குகள் செய்ய வேண்டும். அதன் பிறகு பாருங்கள் அவர்களின் முன்னேற்றத்தை! ஒவ்வொரு வளர்முக நாடும் இன்னொரு அமெரிக்காவாகிவிடும்!



சபையோர்களின் கரகோஷத்தால் அந்த மண்டபமே அதிர்கிறது. பூரித்து புளகாங்கிதமடைகிறார் கலாநிதி.

அன்று மாலை கலாநிதி வரதன் வீட்டிற்கு வரும்போது அவரின் 10 வயதுச் சிறுமி ஒரு புத்தகத்தைக் கையில் பிடித்தபடியே-விழுந்து விழுந்து-புரண்டு புரண்டு சிரித்துக்கொண்டிருக்கிறாள். அவளின் சிரிப்பிற்கு காரணம் அவள் புத்தகத்தில் படித்த ஒரு கதை. உரக்கப் படிக்கிறாள் சிறுமி. அதை மீண்டும் ஒரு முறை தனது தகப்பனாருக்காக.

முன்னொரு காலத்தில்- மத்திய கிழக்கு நாடு ஒன்றில்- வெப்பம் மிக அதிகமான பாலைவனமொன்றில்-கல்வியறிவற்ற ஒரு பணக்கார வியாபாரி வாழ்ந்து வந்தான். பாலைவனத்தையும் தனது வியாபாரத்தையும் தவிர வேறு எதுவுமே அறியாத அந்த வியாபாரி முதல் முறையாக எஸ்கிமோக்கள் வாழும் துருவ பிரதேசத்திற்கு விஜயம் செய்தான். தன்னைச் சுற்றியிருக்கும் பனிக்கட்டிகளையும்-எஸ்கிமோக்களின் பனிக்கட்டி வீடுகளையும் அவர்களின் வாழ்க்கை முறைகளையும் பார்த்த வியாபாரிக்கு ஒரே சந்தோஷம்- குஷி. அங்கிருந்தபடியே தனது மனைவிக்கு ஒரு கடிதம் எழுதினான்.

ஆருயிரே!

இன்றிலிருந்து பாலைவன வெப்பத்தால் நாம் பட்ட துன்பங்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வந்து விட்டன. நான் நாடு திரும்பியதும்-இயற்கையாகவே பனிக்கட்டி விளையும் இந்த இடத்திலிருந்து பனிக்கட்டிகளை கப்பலில் இறக்குமதி செய்து பாலைவனத்தில் நமக்கென குளு குளு என ஒரு வீடு பனிக்கட்டிகளால் கட்டப் போகிறேன்!

கதையை வாசித்துக் காட்டிவிட்டு-முட்டாள்-மடையன்-படிப்பறிவற்றவன்-சிந்திக்கத் தெரியாதவன் என்றெல்லாம் கூறி விழுந்து விழுந்து-புரண்டு புரண்டு சிரிக்கிறாள் சிறுமி.


மடம் கட்டும் ஆண்டிகள்! அவர்கள் உலக வங்கியில் மட்டுமா இருக்கிறார்கள்?

# அன்புடன் அழைக்கிறோம்

**இலக்கிய சங்கமம் நிறுவனர் சிவதணிகாசலம் எழுத்தில்**
**அமுது புலவரின் வாழ்க்கை வரலாறும்**
**இலக்கிய சங்கமத்தின் இலக்கிய தடங்களும் அடங்கிய**




## ‘செவாலியர் இளவாலை அமுது’



## நூல் வெளியீடு

நாள்: 02.06.2019 ஞாயிறு மாலை 2.30 - 9.00
இடம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்
5 CHAPEL ROAD, EALING W13 9AE

தமிழோடு தமிழுக்காய் நூற்றாண்டு வாழ்ந்து தமிழான தமிழ் கங்கை மூதறிஞர்
செவாலியர் அமுது புலவரின் நூற்றாண்டு விழாக் காண வாரீர்!

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய

# சர்வதேச சிறுகதைப்போட்டி - 2019 முடிவுகள்



கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்



கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

## பரிசு பெற்றவர்கள்

**1 முதலாம் பரிசு - (தாள் திறவாய்)**
- இலங்கை ரூபாய்கள் - 50,000

(சுந்தரேசன் நந்தகுமார் வெருகம்பாக்கம் சென்னை - 600092)

**2 இரண்டாம் பரிசு - (மலர்)**
- இலங்கை ரூபாய்கள் - 30,000

(டதின் இராசசிங்கம் கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் இலங்கை)

**3 மூன்றாம் பரிசுகள்** - இரண்டு
- தலா இலங்கை ரூபாய்கள் - 20,000

(ஒரு முழு நாவல்)

(இரட்ணசிங்கம் விக்னேஷ்வரன் வீரவநல்லூர் திருநெல்வேலி தமிழ்நாடு)

(உறவின் தேடல்)

(விமலாதேவி பரமநாதன் றுஸ்லிப் மிடில்செக்ஸ் இங்கிலாந்து)

பாராட்டுப் பரிசுகள் - (7) இலங்கை ரூபாய்கள் தலா 5000

(நான் யார்) தேவகி கருணாகரன் நியூசவுத்வேல்ஸ் - 2065 அவுஸ்ரேலியா

(கமழி) கோவிந்தராயு அருண்பாண்டியன் அண்ணாநகர் மேற்கு, தமிழ்நாடு

(இடுக்கண் களைவதாம்) சுமதி பாலையா காமராசர் நகர் பாண்டிச்சேரி -605006

(காணாமலே) ஹரண்யா பிரசாந்தன் பற்றிமாகிரிவீதி மட்டக்களப்பு இலங்கை

(கனடாவில் அம்மா) இராமேஸ்வரன் சோமசுந்தரம் சோலேஸ் றோட், மார்க்கம் கனடா

(நிர்ப்பந்தம்) இதயராஜா சின்னத்தம்பி ஸ்ரீசரணங்கார வீதி, தெகிவல இலங்கை

(போ வெளியே) அருண்சந்தர் றோட்1011 அல்சல்மானியா Kingdom of Bahrain

ஊக்கப் பரிசுகள் - (5) இலங்கை ரூபாய்கள் தலா 3000

(சுயகௌரவம்) சசீலா ராஜ்குமாரன் வரோதயநகர் திருகோணமலை இலங்கை.

(களவும் கற்று மற) பரமேஸ்வரி இளங்கோ ஹேகித்த வத்தளை இலங்கை

(தீக்குருவி) மொகமட்ராபி பாலையூற்று திருகோணமலை இலங்கை

(மெல்ல திறந்தது கதவு) ஜெயபால் நவமணிராசையா அண்ணா நகர், சென்னை-600101

(ஐந்தறிவு விதவை) அண்ணாதுரை பாலு ராஜபாளயம் விருதுநகர் 626117 தமிழ்நாடு

போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் முதற்கண் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தி அதன் மூலம் சிறந்த ஆக்கங்களை வெளிக் கொண்டு வந்து தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்ப்பதற்காகவே இந்தப் போட்டியை நடத்தினோம். இதற்கு உதவியாக இருந்த நன்கொடையாளர்களுக்கும், ஊடகங்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும், பங்குபற்றியவர்களுக்கும், நடுவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துக்களுடன்**
**குரு அரவிந்தன்** - தலைவர்
**ஆர். என். லோகேந்திரலிங்கம்** செயலாளர்
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்



ப.வை. ஜெயபாலன்



# காந்தீயம் டாக்டர்.ராஜசுந்தரம் நினைவுகள்

# இலங்கை எரிகிறது!

**1948** முதல் இலங்கை தமிழரசுக் கட்சியின் அறப்போராட்டம் முதலாக 2009இல் முடிவுக்கு வந்த விடுதலைப் புலிகளின் மறப்போராட்டம் வரை போக உரிமைப்போருக்கு உயிரைப் பறிகொடுத்தவர்கள் ஏராளம். அந்த வரிசையில் இந்த வரலாற்றின் அத்திவாரக் கற்களுக்குள் அமுங்கிப்போன ஒப்பற்ற தியாகிகளில் ஒருவர் டாக்டர் இராஜசுந்தரம். உயரிய சிந்தனையாளன். ஓயாத சேவையாளன். பரந்துபட்ட சமூக நோக்கு. தமிழ் இனத்தின் பொருளாதார, சமூக, கலாசார மேம்பாட்டுக்காக அவர் தன் நண்பரான கட்டிட வரைபட கலைஞர் எஸ்.ஏ.டேவிற் ஐயாவுடனும் பிற சில நண்பர்களுடனும் இணைந்து ஆரம்பித்த காந்தீயம் நிறுவனம், ஆறு ஆண்டுகளே இயங்கியது. ஆயினும் அதிக சாதனைகள் செய்து குவித்தது. சிங்கள இனவெறி அரசாங்கம் இதன் துரித செயற்பாடு கண்டு திகைத்தது. திட்டமிட்டு காட்டுமிராண்டித்தனமாக காந்தீயத்தை சிதைத்தது; அழித்தது. Dr.இராஜசுந்தரத்தின் உயிரையும் பலி எடுத்தது.

1942ம் ஆண்டு 23ம் நாள் பங்குனி மாதம் பிறந்தவர் Dr.இராஜசுந்தரம். கொக்குவில் நாமகள் ஒழுங்கை இவர் பிறப்பிடம். தந்தை தாயார் அரச பாடசாலைகளில் ஆசிரியப் பணியாற்றிய சோமசுந்தரம்-தங்கம் தம்பதியர். ஐந்து ஆண்கள், ஒரு பெண் என இவர்கள் அறுவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்றவர். மாணவ பராயத்திலேயே கல்லூரியின் சாரண அணி தலைவராக திகழ்ந்தவர். ஊரில் இளம் விவசாயிகள் சங்கம் உருவாக்கி பசுமை திட்டம் அமைக்க உழைத்தவர். உறவினர், ஊரவர்களுடன் அன்பாக பழகும் சுபாவம் இவரிடம் இயற்கையாக அமைந்திருந்தது. வைத்திய துறையை கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்தவர்.

இவரது காதல் மனையாள் சாந்தினி காராளசிங்கம். காராளசிங்கம் பொதுநல சேவையாளர். இரத்தினபுரி மாவட்டம் கேலிங்கொடவில் ஒரு இந்து ஆலயத்தை அமைக்கும் பணியில் முன்நின்றவர். அங்கு பணியாற்றிய இராஜசுந்தரம் அப்பணிக்கு உதவியவர். சந்திப்புகள் காதலாக மலர்ந்தது. இறுதிவரை



இராஜசுந்தரத்துடன் ஒன்றிநின்று குடும்ப பொறுப்பை கவனித்தவர் டாக்டர். சாந்தி.

1977ம் ஆண்டு இராஜசுந்தரம் சாந்தினி தம்பதிகள் லண்டனில் இருந்து இலங்கைக்கு திரும்பினார்கள். வவுனியாவை தம் வாழ்விடமாக்கி மன்னார்வீதியில் வவுனியா நகருக்கு அண்மையாக தம் இல்லத்தையும் இல்லத்தோடு ஒட்டியதாக 'சாந்தி கிளினிக்' என்ற தம் சொந்த மருத்துவமனையையும் அமைத்தனர்.

தனியார் வைத்திய நிறுவனம் என்ற போதிலும் அது தர்ம ஸ்தாபனம் போன்றே இயங்கியது. ஏழைகளுக்கும் மருத்துவம், குறைவான கட்டணம், நிறைவான சேவை. இன மத பாகுபாடற்ற வைத்திய சேவை. ஏராளமான சிங்களவர்களுக்கும் இவர்களே குடும்ப வைத்தியர்கள்.

1977 இனக்கலவரத்தால் புலம்பெயர்ந்தவர்களுக்கு குறிப்பாக மலையக தமிழர்களுக்கு சேவை ஆற்ற வேண்டும் என்ற எண்ணக்கருவே காந்தீயம் குடியேற்ற திட்டங்களை ஆரம்பிக்க காரணமாயின. TRRO என்ற அகதிகள் புனர் வாழ்வுக் கழகம், இடம் பெயர்ந்த அகதிகளுக்காக இயங்கிக் கொண்டிருந்த காலம். அதன் ஆணிவேராக தொழிற்பட்டவர்கள் திரு. கே.சி.நித்தியானந்தா, கே.கந்தசாமி ஆகியோர். இவர்கள் பராமரிப்பில் அமைந்த அகதி முகாம்களில் இருந்த மலையக அகதிகளுக்கான நிரந்தர குடியிருப்பு திட்டங்களை உருவாக்க காந்தீயம் முன்வந்தது.

உளுந்து விளையும் வன்னியில் சுய தேவையை பூர்த்தி செய்து தன்நிறைவுடன் வாழ வழிவகுக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. முன்னய சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் அரசாங்கத்தால் விவசாய அபிவிருத்திக்கென பெரும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட 500 ஏக்கர் திட்டங்களில் டொலர் பாம், கென்ஸ் பாம் என்பன காந்தீயத்தால் பொறுப்பேற்கப்பட்டன. கல்லாறு, மணியர்குளம், நாவலர் பண்ணை என திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

ஒரு ஏக்கர் முதலாக மூன்று ஏக்கர் வரையாக ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் நிலம், குடிசை அமைக்க அடிப்படை உபகரண கொடுப்பனவுகள், விதைகள், உரங்கள் விநியோகம், ஆழ் கிணறுகளும் நீர் இறைக்க இயந்திரங்களும், ஒவ்வொரு கிராமங்களுக்கும் ஒரு தொண்டர். மத்திய தொடர்பகம். இரவு நேர முதியோர் கல்வி. பகல் நேரங்களில் பாலர், சிறுவர்களுக்கான ஆரம்ப கல்வி, இலவச பால், திரிபோஷா மா விநியோகம். படித்த இளம் யுவதிகள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், காந்தீயத்தின் முழுநேர, பகுதிநேர தொண்டர்களானார்கள். குடியிருப்பாளர்களுக்கு உதவுவது இவர்கள் பணியானது.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று காந்தீயம் ஏழு தமிழ் மாவட்டங்களிலும் கிளைகளை உருவாக்கியது. ஒவ்வொரு மாவட்டங்களிலும் பின்தங்கிய கிராமங்களுக்கு கிராமிய கிளைகள் அமைக்கப்பட்டன. சிறுவர் பாடசாலை மூலமான இலவச கல்வி இதற்கான தொண்டர், ஆசிரியைகள், மாதர் அமைப்பு, அந்த அமைப்பின் ஊடாக கோழி வளர்ப்பு, பயன்மர நடுகை திட்டங்கள் என சுயமான உழைப்பில் தன்நிறைவு காணும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நொவிப் கெயர், பிரட் போத வேன்ட், கிறிஸ்டியன் எய்ட் என உலக நிதி வழங்கும் அற அமைப்புகள் காந்தீய திட்டங்களுக்கான நிதியை வழங்கின.

ஒவ்வொரு வாரமும் ஒரு மாவட்ட நிர்வாக கூட்டம். செயற்பாடுகளை கண்காணித்தல் என்று இராஜசுந்தரம், எஸ்.ஏ.டேவிற் ஐயா, இளையவர்கள் ஓயாமல் உலா வருவார்கள். வவுனியாவில் மத்திய பணிமனை. கிளிநொச்சி குருகுலத்தில் பெண் தொண்டர்களுக்கான தொண்டர் பயிற்சி. ஒவ்வொரு தமிழ் மாவட்ட கிளைகளின் கிராமங்களில் இருந்தும் வரும் ஐந்து பெண் தொண்டர்களை கொண்ட 35 பயிற்சியாளர்களும் தங்கி பயிற்சி பெறும் பட்டறை.

தமிழ் பிரதேசங்களில் உள்கட்டுமானங்கள் பொருளாதார, சமூக, கலாசார நோக்குகளுக்கான இலக்குகளை அடைய வெற்றிகரமாக கட்டி எழுப்பப்பட்ட வேளை. அரசாங்கத்தின் இனவெறி பார்வையில், காந்தீயம் அழிக்கப்பட வேண்டிய இயக்கம் என்ற தெரிவுக்கு உள்ளானது. 1983ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் திகதி காந்தீயத்தின் சிறுவர் ஆதரவு இல்லம் அமைந்திருந்த சின்னபுதுக்குளத்தில் இராஜசுந்தரம் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து காந்தீய மத்திய குழு தலைவராக இயங்கிவந்த எஸ்.ஏ.டேவிற் ஐயா தன் கொழும்பு YMCA வாசஸ்தலத்தில் கைதானார். கைது செய்யப்பட்டு பனாகொடையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் இராஜசுந்தரமும் ஒருவர். நீதிமன்ற உத்தரவை அடுத்து இராஜசுந்தரத்தை மே மாத நடுப்பகுதியில் பரிசோதித்த மருத்துவ அதிகாரி Dr.S.L.Salgal "Dr.இராஜசுந்தரம் சித்திரவதை காரணமாக உட்காயங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும், அவரது இடது கை விலகி செயற்பாடு இழந்து இருப்பதாகவும் செவிப்பறை உடைந்து செவிப்புலன் ஒரு காதில் ஊறுபட்டு உள்ளதாகவும் மேலதிக வைத்திய சோதனைகளும் சிகிச்சையும் தேவை என தன் மருத்துவ அறிக்கையில் குறிப்பிட்டார்.

இனக்கலவரம் அரசாங்கத்தின் ஆதரவோடு ஏற்படுத்தப்பட்ட 1983 யூலை மாதம் இவர் சிறை வைக்கப்பட்டிருந்த வெங்கடை சிறையிலேயே திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, ஜெகன் போன்ற மாவீரர்களுடன் தமிழ் கைதிகளில் இவரும் ஒருவரானார். விடுதலை இயக்கங்களை ஒன்றிணைக்க முயற்சித்தது, உமா மகேஸ்வரன், சந்ததியான் ஆகியோர் இந்தியாவுக்கு தப்ப முயற்சித்தது என்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஆதாரத்தை தேடிக்கொண்டிருந்த அரசாங்கம் சக சிறைக்கைதிகள், சிறைப்பாதுகாவலர்களை ஏவி, இரும்பு பாளங்கள், குழாய்கள், கோடரி, வாள் சகிதம் 35 சிறை கைதிகளை யூலை 25இல் பலி எடுத்தது. பாதுகாப்பு என்ற பெயரில் இவர்களை மேல்மாடி சிறைக்கு மாற்றி கதவை பூட்டிய சிறை பாதுகாவர்கள் 27ம் நாள் யூலை 1983ம் நாள் சிங்கள கைதிகளின் சிறைக் கதவை திறந்துவிட்டு எங்கோ மறைந்தார்கள். இவர்களின் சிறைக்கதவு பூட்டை உடைத்த கைதிகளை சமாதானப்படுத்த, அவர்களை அன்போடு அணுகிய இராஜசுந்தரம் ஒரு கைதியால் இரும்புக் கம்பி தாக்குதலில் தலைக்கும் கழுத்துக்கும் இடையில் தாக்கப்பட்டு இரத்தம் பெருக்கெடுத்து ஓட தரையில் சரிந்து இறந்தார்.

கண்ணகி திருகி எறிந்த தன் முலை கந்தகமாக மாறி மதுரையை எரித்ததுபோல இலங்கை எரிந்தது; இன்றும் எரிகிறது. இராஜசுந்தரம் முதலானோரின் தியாகம் என்றோ ஒரு நாள் தமிழர் கனவை வெற்றி கொள்ள வைக்கும். ●

குமரேசன்

# நியூயோர்க் நகர வீதியில் ஒரு யாழ்ப்பாண தோசை கடை!



நியூயோர்க் நகரம் என்றதும், மாடமாளிகைகள், கூடகோபுரங்களாக நிரம்பி நிற்கும் மன்ஹட்டன் பகுதிதான் பலருக்கும் நினைவு வரும். இரட்டைக் கோபுரங்கள் இங்கேதான் இருந்தன. பரந்துவிரிந்த நியூயோர்க் நகரின் பென் ரயில்வே ஸ்டேஷன் அருகே கிறிஸ்டோபர் தெருவில் உள்ள சாதாரண தோசை கடையில் எப்போதும் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கும். தமிழ் முகங்களுக்கு மத்தியில் வெள்ளையர்களின் முகங்களும் இங்கே தோசைகளுக்காகக் காத்துக் கிடப்பது வழக்கம். பர்கருக்காக 10 நிமிடம் காத்திருக்காத வெள்ளையர்கள், தமிழரின் கைப்பக்குவத்தில் தயாராகும் தோசைகளைச் சாப்பிட மணிக்கணக்கில் காத்திருப்பதைப் பார்க்கலாம். உலகின் பல நாட்டு மக்களும் வசிக்கும் நியூயோர்க்கில் அமெரிக்கன், மெக்ஸிகன், ஐரோப்பியன், *Street Food*களுக்கு மத்தியில் நம் ஊர் தோசையையும் போட்டி போட வைத்துள்ளார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பழனிச்சாமி திருக்குமார். நியூயோர்க்கில் தோசை கடை வைத்த கதையை, திருக்குமாரே சொல்கிறார்...

“இலங்கையைச் சேர்ந்த எனக்கு, என் பாட்டிதான் விதவிதமான தோசை சுடும் வித்தையைக் கற்றுத்தந்தார். என் பாட்டியின் கைப்பக்குவத்தில் தயாராகும் தோசைகளை, இலங்கையில் மக்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். இலங்கையில் பிரச்னை முற்றியபோது நியூயோர்க் நகருக்கு வந்தேன். ஆரம்பத்தில் இங்கே பெட்ரோல் பங்க்கில், வாட்ச்மேன் வேலை பார்த்தேன். தோசை கடை வைக்க வேண்டும் என்பது என் ஆசை. கையில் கொஞ்சம் சேமிப்பு இருந்தது. தெருவோரக் கடை வைக்க லைசென்ஸ் கிடைத்ததும் 13,000 டொலர், முதலீட்டில்





இந்தக் கடையைத் தொடங்கினேன். வங்கியிலிருந்து கடன் வாங்கினேன். என் வெற்றிக்கு, கடின உழைப்புதான் காரணம். நியூயோர்க்கில் பனி பெய்தாலும், குளிரடித்தாலும் என் கடையில் சுடச்சுட தோசை கிடைக்கும். ஒருநாள்கூட விடுமுறையில்லை. அமெரிக்கா வந்து 25 ஆண்டுகளாகிவிட்டது. என் தோசை கடை, தற்போது 18-வது ஆண்டில் பெருமையுடன் இயங்கிவருகிறது” என்கிறார்.

மும்பையை விட நியூயோர்க் நகரில் மக்கள்தொகை குறைவுதான் என்றாலும், மும்பைவாசிகள் போலவே நியூயோர்க்வாசிகளும் படு பிஸியானவர்களே. நியூயோர்க் பென் ரயில்வே ஸ்டேஷன் அருகே, ஓய்வுக்காகக்கூட ஒரு நிமிடம் நின்றுவிட முடியாது. அலை அலையாய் வரும் மக்கள் கூட்டம், உங்களை அடித்துக்கொண்டு போய்விடும். இதுபோன்ற பிஸியான பகுதியை உலகில் பார்ப்பது அரிது. அலுவலகம் போகும்போதும் சரி... வரும்போதும் சரி, கடும் நெரிசல் காணப்படும். இவ்வளவு பிஸியான மக்கள் நிறைந்த நகரில் பல நாட்டு *Street Food* கடைகளும் வளர்வதற்குக் காரணம் அவர்களின் நேரமின்மைதான். அதில், தமிழர் திருக்குமாரின் கடையும் முக்கிய அடையாளத்தைப் பெற்றுள்ளது.

வெள்ளையர்கள், கறுப்பின மக்களும்கூட திருக்குமாரின் கடைக்கு வந்து மசாலா தோசையைச் சாப்பிட்டுவிட்டு ‘பேஷ் பேஷ்’ என்று சொல்லிச் செல்வர். வெள்ளையர்கள் அதிகளவு பச்சைக் காய்கறிகளை விரும்பிச் சாப்பிடுவார்கள். அதனால், அவர்களுக்கு வழங்கும் தோசை மீது கூடுதலாக பச்சைக் காய்கறிகள் இருக்கும். திருக்குமார் அந்த ரகசியம் தெரிந்து செயல்படுகிறார்.

ஒரு தோசை, 8 அமெரிக்க டொலர். அமெரிக்காவில் பர்கர் விலை இதைவிட அதிகம். நியூயோர்க்கில் நீங்கள் நல்ல உணவு சாப்பிட நினைத்தால், கிட்டத்தட்ட 40 டொலர் செலவு செய்ய நேரிடும். இதனால், அக்கம்பக்கத்தில் வாழும் தமிழர்களுக்கும் கேரள மக்களுக்கும் திருக்குமாரின் கையேந்தி பவன் ஒரு வரப்பிரசாதம். ஊத்தப்பம், போண்டா, இட்லிகளும் இங்கே கிடைக்கும். நம்ம தமிழ் மக்களின் உணவுகளைப் பிரபலப்படுத்தும் வகையில் ‘புதுச்சேரி ஸ்பெஷல்’, ‘ஜாஃப்னா ஸ்பெஷல்’ போன்ற பெயரில் சிறப்பு உணவுகளையும் தயாரித்து விற்கிறார் திருக்குமார். இவரின் கைப்பக்குவத்தில் தயாராகும் சிங்கப்பூர் நூடுல்ஸூம் நியூயோர்க்வாசிகளை எச்சில் ஊறவைக்கும் ரகம். ‘நியூயோர்க் சென்றால் எங்கே என்ன சாப்பிடுவது?’ என்ற வழிகாட்டிப் புத்தகங்களில் 42 நாடுகளில் ‘தோசா மேன்’ என்ற பெயரில் திருக்குமாரின் கடையும் பெயரும் இடம்பிடித்துள்ளன. நியூயோர்க் வரும் ஜப்பானியர்கள் பலரும், இவரின் கடைக்கு தவறாமல் வந்து தோசையை ஒரு பிடி பிடித்துவிட்டுச் செல்வதோடு, வீட்டுக்கு பார்சலும் கட்டிச் செல்கிறார்கள். “ஆசையாய்ச் சாப்பிடுவதைப் பார்க்கும்போது எனக்குப் பெருமையாக இருக்கும். அப்போதெல்லாம் எனக்குள்ளே ‘என்னோட பாட்டுக்கு இந்தப் பாண்டிய நாடே அடிமையப்பா’ என்ற பாலையாவின் வசனம்தான் நினைவுக்கு வரும். இந்தத் தொழிலை விரும்பிச் செய்கிறேன். மக்கள் என்னோட கடையில் வயிறாரச் சாப்பிட வேண்டும் என்பதுதான் என் லட்சியம். நியூயோர்க்கில் இருக்கும் தமிழ்நாட்டு ஹோட்டல்களைவிட, என் கடை தோசையில் அதிக ருசி இருக்கும். ஆனால், விலை அவற்றுடன் ஒப்பிடுகையில் வெகு குறைவு. ஏனென்றால், பணத்தைவிட வாடிக்கையாளர்களின் மனநிறைவுதான் எனக்கு முக்கியம்” என்று கூறும் திருக்குமாரின் கடைக்குப் போவது எப்படி?

நியூயோர்க், பென் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து 15 நிமிடங்கள் நடந்தால், கிறிஸ்டோபர் தெரு வந்துவிடும். அங்கே போய் ‘நியூயோர்க் தோசைக்கடை எங்கே?’ எனக்கேட்டால், குழந்தை கூட காட்டிவிடும். ஆமாங்க... கடையின் பெயரே...*N.Y.Dosas*-தான்! •

---


## 26 வயது பிரபல பாடகிக்கு 68 வயது நடிகருடன் காதல்!

பொப்பாடல் உலகில் மிகப்பெரும் ரசிகர்களை கொண்டவர் செலீனா கோம்ஸ். இவர் பல பாடகர்களை காதலித்து வருவதாக வதந்திகள் வந்தது.

ஏன், பிரபல பாப் பாடகர் ஜெஸ்டின் பீபருடன் சில நாட்கள் லிவிங்டுகெதரில் இவர் இருந்ததாக கூட செய்திகள் வந்தது.

இந்நிலையில் தற்போது எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும்படி இவர் ஹாலிவுட் நடிகர் பில் முர்ரே என்பவரை காதலித்து வருவதாகவும், விரைவில் திருமணம் செய்யவிருப்பதாகவும் ஆங்கில ஊடகங்களில் செய்திகள் வருகின்றனது.

செவினாவின் வயது 26 இருக்க, முர்ரேவின் வயது 68, இதை அறிந்த பல ரசிகர்களுக்கு தான் பேர் அதிர்ச்சி, இவர்கள் இருவரும் ஜோடியாக கேன்ஸ் திரைப்பட விழாவிற்கு வந்தனர்.



---

## காதலை வர்ணிக்கும் கவியாகி!



கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

கருவாகி உருவாகி
தொட்டில்ப் பருவமாகி
பிள்ளை இளமையாகி,

காதலாகி காதலனாகி
தன் காதலை வாழ்வாக்கி
அதை வர்ணிக்கும் கவியாகி...,

நீல விழியழகி
முழுநிலவை விட முகவழகி
நெற்றிப் பிறையழகி
குங்குமப் பொட்டழகி,

மஞ்சள் உடலழகி
மல்லிப்பூ மனதழகி
முந்தானை மேலழகி
பின்புறம் கீழழகி,

கற்பூரக் குணத்தழகி
கற்பில் நீயும் கண்ணகி
நூலிழை இடையழகி
நூதனமான பெண்ணழகி,

பிறப்பு மச்சைத் தொடையழகி
பிறந்து வந்தாள் எனக்கழகி
ஒரு பக்கம் உனைத் தாங்கி
இரு கையால் உனை வாங்கி,

என் வாழ்க்கை நீயாகி
உன் விருப்பம் எனதாகி
வாழ்வோட்டம் பலதாகி
வாழ்க்கை முழுதும் ஒன்றாகி,

பிள்ளை குட்டி என்றாகி
பலனும் பயனும் நன்றாகி
இளமை முதுமைக் காலமாகி
பேரனும் பேத்தியும் உண்டாகி,

குறித்த ஆயுளும் முடிவாகி
இறப்பும் மோட்சமும் பயமாகி
இனிமேல் வாழ்க்கையும் பாரமாகி
இருப்பதை விட இறப்பதே மேலாகி,

இறப்பாகி இறுதிக்கும் இறுதியாகி
இறுதியில் இறைவனே கதியாகி
இறப்பாகி இறுதிக்கும் இறுதியாகி
இறுதியில் இறைவனே கதியாகி...!





டாக்டர். என்.ஜெகநாதன்

# சோதிடம் – சுபாவம்



பூமியினது சுழற்சி நேரம், சுற்றுப்பாதைக் காலம், நாள், வருடம் எனவும், சந்திரனின் சுற்றுவட்டம் மாதம் என்பதாகவும் கணக்கிட்ட எம் முன்னோர்கள் புத்திசாலிகளே! கிரகங்களின் நிலையமைப்பு, பெயர்ச்சியின் ஒழுங்குமுறைகளின் மூலமாக கணிக்கப்படுவதே சோதிட சாஸ்திரம். மேலும் நட்சத்திரங்கள் வானத்தில் தென்படுவதான கூட்டமைப்பும் அதில் உள்ளடங்குகிறது.

சுபாவம் அல்லது மனப்பான்மை எனக்குறிப்பதை எண்ணப்போக்கு, செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள் என்ற தொடரின் விளைவு என ஏற்கிறார்கள். அதைத் திருப்பிப் பார்த்தால் சுபாவத்தின் இறுதி விளைவாக எண்ணப்போக்கு அமைவதையும் கவனிக்கலாம். எது எவ்வாறாக அமைவதானாலும் குறைபாடுள்ளதாக இவை அமைவதை 'பாவம்' என்றுதான் சொல்லவேண்டும்.

திடம்/உறுதி என்பது நிலைதவறாமை எனப் பொருள்படுவது. மன உறுதி வேண்டும் என்று கருதினாலும் அது அசையமாட்டாத தூண் போலல்லாது வளைந்து விடக்கூடிய வில் போல அமையவும் வேண்டியதே. இல்லையேல் நாம் தகர்ந்து விடவும் நேரிடலாம்.

பிறப்பு, வாழ்வு, இறப்பு யாவும் முன்னதாக நிச்சயிக்கப்பட்டதுதான் என்பது ஒரு நம்பிக்கையே. இந்த மனவெண்ணம் கொண்டவர்களின் நம்பிக்கைக்கென எத்தனையோ உள்ளன. எமது வாழ்வு, இறைவனது சோதனை என்பதும் அவற்றில் ஒன்று. அது வேதனை தருமாயின் சோதிடம் நாடுவது அவர்களது சகஜம். அது பாவம் அமைந்துள்ளதானது என்று சோதிடர் சொல்லிவிட்டால் 'பாவ நீக்கம்' செய்யவும் நாடுவார்கள்.

எமது எதிர்காலம் பற்றி அறிந்துவிட்டால் அதற்கென திட்டம் வகுக்கலாம்தான். எதிர்பார்த்ததற்கு மாறாக எதிர்காலம் அமைந்துவிடின் திட்டம் பொடிப்பொடியாகி விடும். அதிருப்தி அடைய வேண்டியதுதான். கடந்துவிட்டகாலம் மனதை கவலையில் ஆழ்த்தும்போது, அது உமது போதாத காலம், கிரகங்களின் நிலை/ பெயர்ச்சியின் விளைவு என சோதிடர் சொன்னால் மனம் ஆறுதல் அடைகிறது.

இந்த வேதனைகளைத் தவிர்த்து வாழ்வு எமது சாதனைக்குரியது என மனத்திடம் கொண்டுவிட்டால் சோதிடம் கண்டுகொள்ள வேண்டியதில்லை. பயிர் விளைவிக்க பிரதேசத்தின் காலநிலை மாற்றம் பற்றிய அறிவு மட்டும் போதாது. மண்ணைக் கிளறி வளமாக்க வேண்டும். மனதை அலசி வளப்படுத்தாமல் மனவளம் காண முடியாது.

ஜாதகத்தை முன்வைத்து, மனம் அல்லது வேறு உடலுறுப்புகள் இயக்கத்திற்கு உரித்தான நேரங்களால் தாக்கப்படலாம் என சோதிடம் அறியத்தர உள்ளது என்பதற்கு பல விளக்கங்கள் உள்ளன. புண்பட்ட மனம் பண்பட்ட மனதை விட நோய்களின் தாக்கத்திற்கு இடமளிக்கிறது.

ஜாதகத்தில் ஒரு கண்டம் உள்ளது; பஞ்ச பூதங்களில் ஒன்றான நீர் மூலமான, ஆபத்திற்கு இடமுண்டு என சோதிடர் கூறிவிட்டால் நீச்சலில் இறங்குவதை தவிர்க்கலாம். ஆனால், நீச்சல் பயிற்சியின்மையே சமயத்திற்கு உதவ முடியாமல், நீரில் வீழ்ந்தால் மூழ்கிவிடவும் ஆகலாம். நீச்சல் பயின்றுள்ளோம் எனத் திடம் கொண்டவன் நீரோட்ட வேகம் / ஆழம் பற்றி சிந்திக்காமல் நீந்துவதும் ஆபத்திற்கானதே.

சோதிடரின் திறமையில் சோதிடம் தங்கிவிடும் என்பது பலரது எண்ணம். சோதிடரின் திறமையில் மனம் செலுத்துவது ஏன்? மனத்திடம் என்பதை வளமுடன் அமைப்பதற்கு எமது திறமையே அவசியம். பிடிவாதம், இறுமாப்பு, முன்கோபம் என்ற சுபாவம் கொண்ட மனம் வளமடைய, அவை நீங்க வேண்டும்.

ஜாதக அமைப்பிற்கான பிறப்பு நேரம் முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்டதானது என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? மருத்துவமனை, மருத்துவச்சி வசதிகள், பிரசவ தாமதம்/ குறுக்கீடு, அறுவை சிகிச்சையால் பிரசவம் எனப் பலவிதமாக பிறப்பு நேரம் நிச்சயிக்கப்படுகிறது. கருத்தரித்து விடும் நேரம் என்பது குறித்த ஒரே நேரத்தில் நிகழ்வதாகிறது. இது ஜாதக அமைப்பிற்கென எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அறிந்து கொள்வதும் இலகுவல்ல.

பிறக்கும் தருணத்தில் சிசுவின் மூளை முழு விருத்தி அடைந்திருப்பதில்லை. மனம் என்பதும் அவ்வாறுதான். கருப்பையின் பாதுகாப்பிலிருந்து வெளியுலகம் வந்த கணம் கிரகங்களின் ஈர்ப்பு விசைகளின் நேரடியான தாக்கங்கள் மூளை, மன விருத்தியில் பங்கேற்பதற்கு வாய்ப்புண்டு. இதன் பிரதிபலிப்பு, கிரகங்களின் நிலையமைப்பு, பெயர்ச்சிகளில் தங்கிவிடுவதும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவற்றிற்கேற்ப சிந்தனைத்திறன் / மனவெண்ணம் ஆற்றும் விதம் மாறுபடக்கூடியதை எமது செயற்பாடுகள் காட்டுவன. படிப்பு வகையில் தெரிவு, வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்தல், திரவியம் சேர்க்க திரைகடல் தாண்டுவது என பலவிதங்களில் இவை அமைகின்றன.



சுபாவம் எவ்வாறானது என்பதை ஜாதகம் கிரகிக்கக் கூடியதாக உள்ளது என்பதில் சந்தேகமில்லை. வாழ்வில் ஏற்படும் இடைஞ்சல்களுக்கு சுபாவம் இடமளிப்பதையும் கிரக நிலையமைப்புக்கள் / பெயர்ச்சிகள் பிரதிபலிக்கின்றன.

இறைவனது அனுக்கிரகம் மூலம் கிரகங்களின் விளைவு பாரதூரமாக தமக்கு அமைவதை தவிர்க்கலாம் என்ற நம்பிக்கை பலர் மத்தியில் உள்ளது. சுபாவம் வளம்பெறவென எத்தனிப்பதே புத்தியானது. அதை மேம்படுத்துவது 'பாவமாக' அமையும் துர்குணங்கள் நீங்குவதற்கான வழிமுறையாகும் என்பதில் சந்தேகமில்லை. சுபாவம் எது ஊழ்வினைப் பலன் (பாவம்) என்ற நம்பிக்கை புத்தியை கைவிடத்தூண்டியும் விடலாம்.

திருடுபவன் செய்வது ஒரு பாவம்; திருட்டு பறிபோனவன் பலரையும் சந்தேகித்து பழி சுமத்துவது புல பாவங்களாகிறது என்பார்கள். வாழ்வு 'பறிபோனதாக' அமையக் காரணம் ஊழ்வினை, கிரகங்கள், ஏதோ சாபம் என்றெல்லாம் மனம் தடுமாறுவதை பழி சுமத்துவதில் பந்தயம் (BLAME GAME) என்றே கூறலாம்.

மரபியல் வழியான (GENETIC) காரணிகள் உடலமைப்புடன் சுபாவத்தில் பங்கேற்பதாக அறிந்துள்ளோம். வளர்ப்பு முறை, சகவாசம் என்பனவும் முக்கியத்துவம் வகிப்பன. காளை வயது ஆளை மாற்றிவிடுவது உட்சுரப்புகள் (HORMONES) மூளையைக் 'கடத்தி' விடுவதாக அமைகிறது. குடும்ப பாரம் மனதைக் கலக்கி விடலாம்.

இவ்வாறான வேறுபடக்கூடிய முறைகள் வாழ்வை அமைக்குமாயின் யாவும் ஜாதகத்தில் தங்கிவிடுவதாக ஏற்றுக்கொள்வதா? அதுதான் என்விதி என்ற பிடிவாதமும் (சு)பாவம்தான். முன்னெச்சரிக்கைக்கு ஜாதகம் உதவலாம். அதை எமக்கு சாதகமாக கொள்ளாது பாதகமாக கொள்வது மடமை. படிப்பில் சித்தியடைய வாய்ப்பில்லை, வேலைவாய்ப்பதில்லை என இவற்றைக் கைவிடாமல், பன்மடங்கு முயற்சிப்பதே உசிதமானது.

கிரகதோஷம் நீக்கவென அல்லது கடவுள் கிருபைக்கென பூஜை, யாகம் செய்வது அந்த நம்பிக்கைக்கு வலுவூட்டுவதே! தன்னம்பிக்கையை வலுவூட்டும் எந்த முயற்சியும் வரவேற்கத்தக்கதே!

இக்கட்டான சூழ்நிலைகளில்தான் சுபாவம் பூரணமாக வெளிப்படுகின்றது. மனம் வேதனைப்படுவதோ அல்லது சாதனையால் பூரிப்பதோ அதில் தங்கிவிடுவதே! சோதிடம் கண்டு கிரகிக்கவுள்ளவை எமக்கு ஊகமாக அமைவன; மனவளம் கொண்டு பெறவுள்ளவை எமக்கு யோகமாக அமைவன.

நட்பு வளர்வதற்கு ஜாதகத்தில் ஒத்திருக்க வேண்டியதில்லை. திருமண வாழ்வு சுமுகமாக அமைய ஒருமுகமாக எண்ணமாற்றல் மட்டும் போதாது. சோதனைகளை எதிர்நோக்கும்போது ஒத்ததான எண்ணம் வேதனையை அதிகரிக்குமேயன்றி அதிலிருந்து விடுபட உதவாது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வேறுபட்டதான சுபாவமுடையவர்களிலும் காணக்கூடியதே! எதிர்சக்தி (+VE/-VE)கள் கவர்வன. ஒரே ரகமானவை எதிர்ப்பன. அதிர்வுகள் ஒத்ததாயின் ஒலிஎழுச்சி (RESONANCE)யாகுமேயன்றி ஒலி தணிக்கப்படமாட்டாது.

ஜாதகப் பொருத்தமுள்ள விவாகங்கள் நிலைத்துவிடுமென்று இல்லை. பழியைச் சோதிடம் மீது சுமத்துவானேன்? மனோதிடம் வளமாக அமைய உன்னையே நீ அறிந்து கொள்ள முடியுமாயின் வருந்த வேண்டியதில்லை. பொருந்திவிடுவதில் தம்பதிகள் வெற்றி காணலாம்.

திடமாக சொல்லக்கூடியது சோதிடம் எனின், பாவமாக அமைவதும் சுபாவத்தில் உள்ளதே. ●

# 40 பிறெனற் தமிழ் சங்கத்தின் ஆவது ஆண்டு நிறைவு மாணிக்க விழா







பிறெனற் தமிழ் சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவு மாணிக்க விழா -புத்தாண்டு விழா கடந்த 11-05-2019 சனிக்கிழமை வெம்பிளி பிரெஸ்ட்டன் மனோர் பாடசாலை மண்டபத்தில், மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு 40 வருடங்களாக ஈழத் தமிழ் நாடக உலகில் தனி முத்திரை பதித்து வரும் திரு, திருமதி பாலேந்திரா பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். கௌரவ விருந்தினராக முன்னாள் ஹரோ மேயர் கவுன்சிலர் திரு. சுரேஷ் கிருஷ்ணா அவரது மனைவி கவுன்சிலர் திருமதி சசிகலா அவர்களும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக திரு&திருமதி-(கலாநிதி) சுகுமார் அவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பிரதம, சிறப்பு விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றல், தமிழ் வாழ்த்து - அகவணக்கம் என குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்ச்சிகள் ஆரம்பித்து, இந்த சங்கத்தால் வாராந்தம் அல்பேட்டன் பாடசாலையில் நடத்தப்படும் தமிழ் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. சங்கத்தலைவர் ஜசோராணி தயாபரன் அவையோரை வரவேற்க, போஷகர் வைத்திய கலாநிதி திரு.தெய்வேந்திராவும் விருந்தினர்களை கௌரவித்தார். திரு, திருமதி பாலேந்திரா அவர்களது 40ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் நாடக சேவையையும், 30 வருடங்களுக்கு மேலாக பிறெனற் தமிழ் சங்க நிகழ்ச்சிகளுக்கு தொகுப்பாளராக பணியாற்றிவரும் திருமதி ஆனந்தராணியையும் பாராட்டி வாழ்த்து மடல் அவர்களுக்கு வழங்கப்பட்ட்து.

தொடர்ந்து பிரதம விருந்தினர் திரு. பாலேந்திரா உரையாற்றினார். அவரது உரையில்,

"எம்மவரிடையே எமது பாரம்பரியக் கலைகள், விளையாட்டுகள்,சமூக ஒன்றுகூடல்கள் மூலம் சமூகப் பிணைப்பை இறுக்கமாக உருவாக்க உழைக்கும் ஒரு முன்னோடி அமைப்பாக பிறென்ற் தமிழ் சங்கம் 40 ஆண்டுகளாக விளங்குகிறது. தொடர்ந்து 40 ஆண்டுகள் இந்த நாட்டில் இப்படி இயங்குவது இலகுவான காரியமல்ல. இவர்களது பிறென்ற் தமிழ் பாடசாலையும் தொடர்ச்சியாக இயங்கி வருகிறது. தமிழரின் சித்திரை வருடப் பிறப்பை ஒட்டி வருடாந்த கலை விழாக்களை பிறென்ற் தமிழ் சங்கம் நடத்தி வருகிறது. எமது நாடகங்கள் பலவற்றை தொடர்ந்து தமது கலைவிழாக்களில் மேடையேற்றுவதுடன் இந்த நாட்டில் நாம் சிறுவர் நாடகங்களை தயாரிப்பதற்கு முதல் களம் அமைத்தவர்கள் இவர்களே. பிறென்ற் தமிழ் பாடசாலை மாணவர்களைக் கொண்டு 1990 இல் இருந்து 2004 வரை பல சிறுவர் நாடகங்களை தயாரித்து பல இடங்களிலும் மேடையேற்றியுள்ளோம். லண்டனில் கடந்த 16 வருடங்களாக நாம் நடத்தி வரும் லண்டன் தமிழ் நாடகப் பள்ளிக்கு அடித்தளமாக இது அமைந்தது. 90களில் எம்மிடம் சிறுவர்களாக நாடகம் பயின்றவர்கள் சிலர் இப்போது தமது பிள்ளைகளை - அடுத்த பரம்பரையினரை- எம்மிடம் நாடகப் பயிற்சிக்கு அனுப்புவதும், அவர்களில் பலர் இன்று மேடையேறும் எமது "அமைதி பூங்கா" நாடக நிகழ்வில் பங்கு பெறுவதும் எமக்கு மகிழ்ச்சி." என்று தெரிவித்தார்.



தொடர்ந்து பேசிய கவுன்சிலர் திரு. சுரேஷ் கிருஷ்ணா பிறெனற் தமிழ் சங்கத்தின் சாதனைகளை பாராட்டி வாழ்த்தினார்.

பிறெனற் தமிழ் பாடசாலை தமிழ் ஆசிரியர் புஷ்பமாலா சிவசுப்ரமணியம் தயாரித்த " மரம் யாருக்கு சொந்தம்" நாடகமும், நடன ஆசிரியர் வாசுகி அருணன் அவர்களது மாணவியர் நடனமும் சிறப்பாக இருந்தன. தொடர்ந்து திரு. பாலேந்திரா நெறிப்படுத்திய தமிழ் அவைக்காற்று கலைக் கழக, பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோரால் நடத்தப்படும் லண்டன் தமிழ் நாடகப் பள்ளி மாணவர்கள் நடித்த " அமைதிப் பூங்கா " சிறுவர் நாடகம் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற்றது. சுமார் 20 சிறுவர்கள் நடித்த இந்த நாடகத்தில் பின்னணி வாத்திய இசையை அதே வயதொத்த தர்சினி (கீபோர்ட்), ரொஷான் (மிருதங்கம்) ஆகியோர் வழங்கியமை பாராட்டுக்குரியது. பாடல்களை விஜயகுமாரி பரமகுமரன், கலாநிதி தர்ஷினி சிவசுதன், ஆனந்தராணி பாலேந்திரா ஆகியோர் பாடினர். ஈழத்து நாடகாசிரியர் திரு ஜோன்சன் ராஜ்குமார் எழுதிய இந்த நாடக தயாரிப்புக்கு திருமதி ஆனந்தராணி பாலேந்திரா உதவி நெறியாளராக பணியாற்றினார்.

இடைவேளையை தொடர்ந்து லண்டனில் புகழ் பெற்ற "ராகாஸ்" இசைக்குழுவின் பின்னணியில் லண்டன் வாழ் இளையோர் - அபீனா, கிஸனா, லக்ஸ்மிதா, லவாங்கி, லக்சான்யா, நிரூஜா, நிவேதா, பிரார்த்தனா, சாரங்கா, சாசுவா, சுருதி, தரன்யா மற்றும் திரு. ஸ்ரீதரன் ஆகியோர் திரையிசை பாடல்களை பாடி சபையோரை கவர்ந்தனர்,

புலம்பெயர் சூழலில் விடாமுயற்சியுடன் தொடர்ந்து 40 ஆண்டுகள் சிறப்பாக இயங்கும் பிறெனற் தமிழ் சங்கத்தினை பாராட்டியபடி நல்லதொரு கலை நிகழ்வினை ரசித்த மனநிறைவுடன் அவையோர் வீடு திரும்பினார். ●







# சிவசக்தி சிவநேசனின் மூன்று முத்துக்கள்

## வழங்கிய தமிழோடு நாம்





சமீபத்தைய லண்டன் பயணத்தின்போது 2019 தமிழ் சித்திரைப் புத்தாண்டினை முன்னிட்டு புலம்பெயர் இளையோரினால் அல்பேட்டனில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த "தமிழோடு நாம்" என்ற இன்னிசை நிகழ்ச்சியில் ஓர் அதிதியாக கலந்துகொண்டிருந்தேன். தெலுங்கு மற்றும் கன்னட கீர்த்தனைகளையும் வர்ணங்களையுமே பெரும்பாலும் உள்ளடக்கியிருக்கும் கர்னாடக இசைக்கச்சேரிகளுக்கு மத்தியில் ஒரு நிகழ்வு முழுதும் தமிழில் கேட்டது இதுவே முதல் தடவை.

பிரபல கர்நாடக இசை ஆசிரியர் சிவசக்தி சிவனேசனின் சிரேஷ்ட மாணவிகளான சாருகா வாசுதேவனின் கணீர்க் குரலில் "கணேசா சரணம்" முதல் கொண்டு அடுத்து வந்த சங்கரி ராஜேந்திரன், சிவகாமி சிபி ஆகியோரின் தெய்வீகக் குரலில் பாரதியாரின் "திக்குத்தெரியாத காட்டில்", மும்மூர்த்திகளில் ஒருவரான பாபநாசம் சிவம் அருளிய "என்ன தவம் செய்தனை" மற்றும் எம்.எஸ்சுப்புலட்சுமி ஐக்கிய நாடுகளின் அமர்வொன்றில் பாடுவதற்காக ராஜாஜியினால் பிரத்தியேகமாக எழுதித்தரப்பட்ட "குறையொன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா" போன்ற எனது மனதுக்கு மிகவும் நெருக்கமான பாடல்களை இளம்தலைமுறையின் வழி மிகவும் தெளிவான மொழி உச்சரிப்புடன் மீண்டும் கேட்கமுடிந்தது நெகிழ்ச்சியான ஒரு தருணமாக இருந்தது. இவர்களுக்கு அனுசரணையாக புல்லாங்குழல் Dr. அரவிந்தன் பகீரதனும் மிருதங்கம் Dr. அபிராம் சகாதேவனும் வீணை பைரவி ராஜேந்திரனும் பக்கவாத்தியம் இசைத்திருந்தார்கள்.

பொதுவாகவே பாரதியாரின் பாடல்கள் எவ்வளவு கேட்டாலும் திகட்டாதவை. அதிலும் "சின்னஞ்சிறு கிளியே" பாடல் முழுதும் தனியே புல்லாங்குழலில் கேட்கக் கிடைத்தது நிகழ்வின் இன்னோர் சிறப்பம்சம். வைத்திய நிபுணர்களாக இருந்துகொண்டு இசைக்கும் தமிழுக்கும் தம்மை அர்ப்பணித்து இந்த நிகழ்வுக்குத் துணை நின்ற அரவிந்தன், அபிராம் போன்றோர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தமிழ்நாட்டில் வருடந்தோறும் ஒழுங்கு செய்யப்படும் "சென்னையில் திருவையாறு" கர்நாடக இசை நிகழ்வில் பரத் சுந்தர் போன்றவர்களினால் தமிழ் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலுமே எமது நாட்டில் நாட்டுப்புற, மெல்லிசை அல்லது காத்தவராயன் கூத்து போன்ற நிகழ்வுகளிலேயே தமிழ் பாடல்களைப் பெரும்பாலும் கேட்கமுடிகிறது.

அந்த வகையில் பல்வேறு நாடுகளின் புலம்பெயர் சமூகங்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருப்பவள் என்ற முறையில் எமது புலம்பெயர் சமூகங்களில் தமிழ் மொழிப் பயன்பாடு குறித்த எனது அதிருப்தியினைப் போக்கும் வண்ணமாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கலாநிதி நித்தியானந்தன் இந்த மூன்று இளையவரின் ஆசிரியையான ஸ்ரீமதி சிவசக்தி சிவனேசனை பாராட்டினார். தமிழோடு நாம் என்ற இந்த தமிழ் இசை நிகழ்விற்கு தனது மூன்று மாணவிகளையும் சிறப்பாக தயார்ப்படுத்தியதோடு நில்லாது சிறந்த சங்கீத இசை கலைஞர்களை உருவாக்கிய குருவையும் அதற்கு ஆதரவாக இருந்த பெற்றோரையும் அவர் பாராட்டினார்.

இந்த நிகழ்வுக்கு வந்திருந்த ஈழத்துப்பாடகர் திரு. மாணிக்கம் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த நிகழ்வு பற்றி கூறுகையில், மூன்று கன்னியர்கள் சங்கரி, சாருகா, சிவகாமி ஆகியோர் தமிழ்ப்பாடல்களை முறையாக கற்று கர்நாடக இசை மாலையாக சென்றவாரம் மாலை அல்பேட்டன் பாடசாலை மண்டபத்தில் தந்தார்கள். மூவரும் மிகவும் திறமையான கலைஞர்களாகவே எனக்குப் பட்டனர்.

சுருதி தாளம் எள்ளளவும் பிசகவில்லை, பக்கவாத்தியங்களாக மிருதங்கம் புல்லாங்குழல் வீணை இசைக்கப்பட்டன. மிருதங்கவாசிப்பு பாடகர்களுக்கு அனுசரணையாக அற்புதமாக அமைந்திருந்தது ஆனந்தராணியின் அறிவுப்பு நிகழ்ச்சியை மேலும் மெருகூட்டிற்று A.G.S-இன் ஒலியமைப்பு சங்கீதத்தை தெளிந்த நீரோடையாக்கிற்று. இந்த இளம் இசைக்கலைஞர்களுக்கு இன்னும் பல மேடைவாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது சங்கீத விரும்பிகளின் கடமையாகும் என்ற அவரின் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன்.

இலங்கை மக்களுக்கு உதவிடும் புலம்பெயர் தொண்டு நிறுவனங்களான புற்று நோயாளர் காப்பகம் மற்றும் ஏடு நிறுவனம் ஆகியவற்றுக்கு நிதி சேர்க்கும் முகமாக இந் நிகழ்வு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ●



## வாசகர் கடிதம்

### ஈஸ்டர் ஞாயிறு அரசியல் பின்னணி

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த அநியாயமான அப்பாவி மக்களின் படு கொலைகள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை. இத்தினத்தில் வழிபாடுக்கு அரசியல்வாதிகள் ஏன் செல்லவில்லை என்று 'பனங்காட்டான்' எழுப்பியுள்ள கேள்விக்கணைக்குப் பதில் சொல்லவே முடியாது. இதற்குப் பின்னணியில் 'அரசியல்' திருவிளையாடல்கள் நடந்துள்ளன என்பதை நாசூக்காகச் சொல்லிருக்கிறார். முன்கூட்டியே கிடைத்த எச்சரிக்கைத் தகவல்களுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததற்கு என்ன காரணம்? என்று கட்டுரை முடிவில் தொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு இன்று வரை பதில் இல்லையே!

**- ஆர்.கே.செல்வரத்தினம்**
*Sutton*

### இலவசம் ஆனால், தரமான விடயங்கள்

'புதினம்' 24 பக்கங்களாக வெளிவந்திருப்பதை அவதானித்தேன். என்ன நடந்தது? நிரம்ப விடயங்கள் இருந்தாலும், விளம்பரங்கள் பற்றாக்குறையே பக்கங்கள் குறைப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று எண்ணுகிறோம். இலவசமாக பத்திரிகையை நீங்கள் வெளியிட்டாலும், தரமான விடயங்களை வெளியிடுவதில் மிகக் கவனமாக இருந்து வரும் உங்களுக்கு விளம்பரங்கள் போதியளவு கிடைக்காவிட்டால், மிகக் கஷ்டமான நிலை ஏற்படும். விளம்பரங்கள் இல்லாவிட்டால், இலவச பத்திரிகை நடத்தவே முடியாது. தொடர்ந்து தரமான 'புதினம்' வரவேண்டும் என்று விரும்புகிறோம். இத்தோடு சிறிய நன்கொடையை அனுப்பியுள்ளேன். தொடர்ந்து நடாத்துங்கள். முடிந்த உதவியை செய்யக் காத்திருக்கிறோம்.

**- ச.குமாரவேலு**
*KINGSTON*

### உண்மைகளை சொல்கிறது

டாக்டர் என்.ஜெகநாதனின் எழுத்துக்களை விரும்பிப் படிக்கிறேன். மிக ஆழமான அவரின் ஆராய்வு உண்மைகளைச் சொல்கிறது. இரண்டு முறை படிக்கும் போதுதான் அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிய முடிகிறது.

**அ.சுந்ததாஸ்**
*HAYES*

### திருமுருகன் பணி

தாயகத்தில் சிவபூமி, துர்க்கை ஆலயம், ஆன்மிகச் சொற்பொழிவுகள் மூலமாக செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆற்றுகிற பணிகளை அறிந்து மகிழ்கிறேன். நாவற்குழியில் திருவாசக அரண்மனை அமைவு பற்றி கட்டுரை படித்தேன். நேரில் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மனதுக்குள் உள்ளது. நாட்டு நிலைமைதான் சரியாக இல்லையே! பார்ப்போம்.

**- கு.ராமச்சந்திரன்**
*SOUTHALL*

### தமிழக சினிமாவில் பழைய ஈழக்கலைஞர்

ஈழத்துக் கலைஞர் விஜயசிங்கம் தமிழகத்தில் எம்.ஜி.ஆர்., ரஜினி, கவுண்டமணி போன்ற பெரும் நடிகர்களுடன் தேவரின் பண்ணையில் கொடிகட்டிப் பறந்திருக்கிறார் என்பதை அறிந்து பெருமைப்பட்டேன். வி.சி.குகநாதன், பாலு மகேந்திரா போன்றவர்களின் வரிசையில் ஒருவராகத் திகழ்ந்த அவரைப்பற்றி படங்களுடன் வந்த கட்டுரை நன்றாக இருந்தது.

**- சு.விநாசித்தம்பி**
*WIMBLEDON*

# புறங்காட்டா போர்முனையின் நடுகல் முள்ளிவாய்க்கால்!




2009இல் இறுதிப்போரில், 6 மாதக் குழந்தையாக தாயின் மடியில் பால்குடித்துக் கொண்டிருந்தபோது ஒரு கை இழந்த சிறுமி ராகினி மே 18 முள்ளி வாய்க்கால் 10வது நினைவேந்தலை சுடரேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இடம்பெற்ற எழுத்தில் வடிக்க முடியாத, ஒவ்வொரு ஆன்மாவையும் உலுக்கியெடுத்த, திட்டமிட்ட கோரக் கொலைகளை உலகம் முழுவதும் வாழும் மக்கள் நினைத்து உருகி நிற்கும் வேளையில் இதனை எழுத வேண்டியுள்ளது.

மண்ணையும் மக்களையும் காப்பதற்கு ஓரினம் போராட நேர்ந்த வேளையில், அரச பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டியிருந்ததால், விடுதலை வேட்கை கொண்ட இனம் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது தவிர்க்க முடியாதது.

இனவாதமும் பயங்கரவாதமும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேளையில், அப்பாவிப் பொதுமக்களுக்கும், அவர்களின் காவலர்களுக்கும் என்ன நடைபெறும் என்பதற்கு முள்ளிவாய்க்கால் நிலையான சாட்சி.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கப்பட்ட தென்கின்றனர் சிலர். முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன என்கின்றனர் வேறு சிலர். மௌனம் என்பது பலமான ஒரு மொழி என்பது உண்மையானால், முள்ளிவாய்க்கால் மௌனம் என்பது விடுதலைப் போராட்டத்தின் முடிவல்ல என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வர்.

தனது இனத்தின் இருப்புக்காக தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை வேண்டிப் போராடிய ஆயிரமாயிரம் போராளிகளும், அவர்களுக்குப் பலமாகவும் அரணாகவும் நின்று சர்வதேசத்திடம் நீதி கேட்ட பொதுமக்களும், சாட்சியமில்லாத யுத்தத்தில் வகைதொகையின்றி இளையோர் - முதியோர் - சிறுவர் - பாலகர் என்ற பேதமின்றி ஏன் கொல்லப்பட்டனர் என்பதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

பத்தாண்டுக்கு முன்னைய அந்தப் பேரழிவின் சூத்திரதாரிகள் சர்வதேசத்துக்கு பொறுப்புக் கூற மறுக்கிறார்கள். அனைத்துலக ஆதரவுடனான கலப்பு நீதி விசாரணையை ஒப்புக் கொண்டுவிட்டு அதனையும் மறுக்கிறார்கள்.

நடந்தவைகளை மறப்போம், நல்லிணக்கத்தோடு வாழ்வோம் என்று எலிக்குப் பூனை கதை சொல்வதுபோல ஏமாற்று நாடகம் நடைபெறுகிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்ட வேளையில் கொல்லப்பட்டவர்கள், விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள், சிறையில் அடைக்கப்பட்டவர்கள் பற்றிய எண்ணிக்கையைக்கூட சொல்ல மறுத்து வருகிறது சிங்கள பௌத்த ஏகாதிபத்திய அரசு.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிலிருந்து இன்றைய மைத்திரிபால சிறிசேன வரை ஒரு கொள்கை சிங்கள தேசத்தால் நேர்த்தியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

சிங்களவர் ஆளும் இனம், தமிழர் ஆளப்படும் இனம் என்பதுவே அந்தக் கொள்கை. (அன்று சிங்கள அரசுகளுடன் இணைந்து தமிழரை அழித்தொழிப்பதில் ஈடுபட்ட முஸ்லிம்களும் இப்போது ஆளப்படும் இனமாக மாற்றப்பட்டுள்ளதை ஒரு தசாப்தத்துக்குள் காண நேர்ந்துள்ளது)

2009ல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து நாற்பதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போனார்கள் என்று புள்ளிவிபரத்தோடு கணக்கு காட்டிய அப்போதைய மன்னார் ஆயர், அதனை ஒரு சாட்சியமாக ஐக்கிய நாடுகள் அவைக்கும் சமர்ப்பித்தார்.

அவரை ஒரு பொய்யராகச் சித்தரித்த சிங்களப் பேரினவாதம், பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லையென்று மறுத்து வருகிறது. இந்த நிலையில் இவர்களிடமிருந்து எவ்வாறு பொறுப்புக்கூறலை எதிர்பார்க்க முடியும்?

கடந்த பத்தாண்டுகளும் தாயகத் தமிழர் மேய்ப்பரில்லாத இனக்குழுமமாக வாழ்ந்து வருகின்றனர் என்பது கண்கூடு.

தமிழர் தாயகமெங்கும் சிங்கள இராணுவம் வியாபித்திருக்கிறது. தமிழ் மண்ணைப் பொறுத்தளவில் இது நில ஆக்கிரமிப்புப் படையாகியுள்ளது. இலங்கை இராணுவத்தின் மொத்த எண்ணிக்கையில் எழுபது வீதமானவர்கள் தமிழ் மண்ணில் தங்கியுள்ளனர்.

கமத்தொழிலும் கடற்றொழிலும் இவர்கள் வசமாகியுள்ளன. தங்களுக்கு உறுதுணையாக சிங்களக்

> **புறமுதுகுகாட்டி ஓடாது, சங்க காலம் போன்று போர்முனையில் நேருக்கு நேர் நின்று போராடி உயிர் கொடுத்த போராளிகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்தவர்கள் படுகோழைகள். இவர்களை இயக்கிய சிங்கள அரசும் அவ்வாறானதே. யுத்தம் மௌனிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழரின் குருசேத்திரம். புறமுதுகு காட்டாத போர்முனையின் நடுகல்லாக விளங்குகிறது முள்ளிவாய்க்கால்.**

குடும்பங்களை இராணுவ முகாம்களுக்கருகில் குடியேற்றியுள்ளனர். தமிழ் மண்ணில் விவசாயம் செய்து உற்பத்திப் பொருட்களை தமிழர்களுக்கே விற்று பணம் சேர்க்கும் வியாபாரம் வேறு.

புதுக்குடியிருப்பில் மட்டும் 400க்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் இப்போது வசித்து வருவதாக அங்கு சென்றிருந்த கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை தெற்குடன் இணைக்கும் ஏ-9 நெடும்பாதையில் கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமிடையில் சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமான சிங்களக் குடும்பங்கள் கடந்த ஒரு தசாப்தத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகமானவர்கள் சிறைவாசம் அனுபவித்த பாரிய குற்றவாளிகள்.




அண்மையில் நீர்கொழும்பில் இடம்பெற்ற தாக்குதல்களின்போது தப்பிய பெருமளவான பாகிஸ்தானிய, சிரிய தேச குடும்பங்களை வவுனியாவில் குடியேற்றியதுகூட தமிழ்மண் அபகரிப்பின் ஓர் அங்கமே.

முல்லைத்தீவில் கொக்கிளாய் முகத்துவாரத்துக்கருகில் தமிழருக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் காணியை சிங்களவர் குடியேற்றத்துக்கு வழங்க வவுனியாவின் அரசாங்க அதிபரான சிங்களவர் நடவடிக்கை எடுத்து வருவதை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் எதிர்த்துள்ளனர்.

மன்னார் ஓலைத்தொடுவாய் உவரி பகுதியில் சுமார் 508 ஏக்கர் காணியை கிழக்கு மாகாண ஆளுனர் ஹிஸ்புல்லாவுக்குச் சொந்தமான தனியார் நிறுவனமொன்று எடுத்துக் கொண்டதை மன்னாரின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

யுத்த காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்த தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் அடாத்தாக பறிக்கப்பட்டுள்ள சம்பவங்களில் இதுவுமொன்று. இலங்கையில் ஏப்ரலில் நடைபெற்ற கிறிஸ்தவ தேவாலயங்களின் தாக்குதல்களில் சம்பந்தப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் திருகோணமலை மாவட்டத்துக்குமிடையில் எல்லைப்புறங்களிலுள்ள மணலாறு, நாயாறு, டொலர்பாம், கென்பாம், கொக்குத்தொடுவாய், தென்னைமரவாடி, குச்சவெளி ஆகிய தூய தமிழ்க் கிராமங்களில் பல்லாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

1958ல் ஆரம்பமான இனரீதியான தாக்குதல், தமிழர் சொத்தழிப்பு என்பவை சிங்கள அரசாங்கங்களின் அனுசரணையுடன் இன வன்முறை, இனப்படுகொலை என விரிந்து முள்ளிவாய்க்காலில் தமிழின அழிப்பானது, எம் கண்முன்னால் இடம்பெற்ற கொடூர வரலாறு.

இதற்கு நீதி கேட்டு உலகின் மூலைமுடுக்குகளிலும், சந்திகள் சந்தைகளிலும் தமிழர்கள் முழங்காலிட்டு கரங்கூப்பி ஓலமிட்டுக் கதறி அழுதும், வீதிகளை மறித்தும் இதுவரை நீதி கிடைக்கவில்லை, எந்த நியாயமும் கிடைக்கவில்லை.

கொலைகாரர்களே விசாரணையாளர்களாகவும், நீதி வழங்குபவர்களாகவும் மாறியுள்ள கலிகாலம் இது. தமிழர் தரப்பிலுள்ள சிலர் இதற்குத் துணை போவதை என்னென்று சொல்வது?

வடமாகாணசபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இலங்கையிலே இடம்பெற்றது தமிழினப் படுகொலை என்று ஒரு தீர்மானத்தை ஓராண்டுக்கு முன்னரே துணிச்சலாக நிறைவேற்றினார்.

இது தவறான முன்னெடுப்பென்று சட்டவாதங்களை சிங்களவர் எவரும் குரல் கொடுக்கவில்லை. குரல் கொடுத்த ஒரேயொருவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனே.

கனடிய மண்ணில் மார்க்கம் நகரசபையும், பிராம்ரன் நகரசபையும் தமிழினப்படுகொலையை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன. ரொறன்ரோ நகர முதல்வர் ஜோன் ரோறி தமிழினப் படுகொலையை பிரகடனம் செய்துள்ளார்.

ஒன்ராறியோ சட்டசபையில் ஸ்காபரோ - றூஜ்பார்க் தொகுதி உறுப்பினர் விஜே தணிகாசலம் முன்மொழிந்த தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரம் என்னும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு கடந்த மாதம் 16ஆம் திகதி எதிர்ப்பேதுமின்றி சகல கட்சிகளினதும் ஆதரவோடு நிறைவேறியுள்ளமை ஒரு வரலாற்று நிகழ்வு. மூன்றாம் வாசிப்பில் இது நிறைவேறுமாயின் சட்டமாகும்.

கனடிய மத்திய அரசு இதுவரை இதுபற்றி எந்த முடிவுக்கும் வருவதாகத் தெரியவில்லை. கனடியத் தமிழர் சமூகம் ஒட்டாவா நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த மாதம் முள்ளிவாய்க்கால் நினைவையொட்டிய இரண்டு நிகழ்வுகளை நடத்தியது.

ஆனால், இனஅழிப்பு என்ற வார்த்தைப் பிரயோகத்தை இவர்கள் தவிர்த்து விட்டதாக சமூகச் செயற்பாட்டாளர்கள் கவலை தெரிவித்தனர். ஒரு நிகழ்வில் தமிழ் மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட அட்டூழியம் என்று குறிப்பிடப்பட்டதை சிலர் சுட்டியுள்ளனர். இனப்படுகொலையையும் இனசங்காரத்தையும் இனம் மீதான அட்டூழியம் என்று குறிப்பிடுவது பெரும் தவறு.

புறமுதுகுகாட்டி ஓடாது, சங்க காலம் போன்று போர்முனையில் நேருக்கு நேர் நின்று போராடி உயிர் கொடுத்த போராளிகளையும், அப்பாவிப் பொதுமக்களையும் கொன்று குவித்தவர்கள் படுகோழைகள். இவர்களை இயக்கிய சிங்கள அரசும் அவ்வாறானதே.

யுத்தம் மௌனிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழரின் குருசேத்திரம்.

புறமுதுகுகாட்டாப் போர்முனையின் நடுகல்லாக விளங்குகிறது முள்ளிவாய்க்கால். •

# பிரித்தானிய தமிழர் பேரவையின் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு



உலகின் பார்வை ஈழத் தமிழர் பக்கம் திரும்புகின்றது. தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இன அழிப்பு, சர்வதேச விசாரணை மூலம் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும், அவர்கள் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள், என்று பல்வேறு கட்சிகளை சார்ந்த சக்தி வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைத் தளத்தில் உலகளாவிய மதிப்புடையோர், சர்வதேச ஊடகத் துறையில் பிரபல்யமானவர்களின் குரல்கள் லண்டன் மாநகரின் மத்தியிலுள்ள ட்ரபால்கர் சதுக்கத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையின் ஒருங்கிணைப்பில் இடம் பெற்ற 10ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவு தினத்தில் எதிரொலித்தது.

ஸ்ரீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளை நினைவு கூறும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் பிரித்தானியா தமிழர் பேரவையினரால் *18* மே *2019* அன்று லண்டனிலுள்ள ட்ரபால்கர் சதுக்கம் *(Trafalgar Square)* என்னும் இடத்தில் பெருந்திரளான மக்கள் பங்களிப்புடன் நினைவு கூரல் நிகழ்வு இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான ஏனைய இன மக்களும் இந்த நிகழ்வில் பார்வையாளர்களாக இணைந்திருந்தனர்.

எம் மக்கள் மீதான இனப்படுகொலைக்கான நீதியையும் எமக்கான ஒரு இறுதி தீர்வையும் சர்வதேசத்திடம் வேண்டி முள்ளிவாய்க்கால் நினைவு தினம், முக்கியமான தலைவர்களின் பிரசன்னத்துடனும் தமிழ் மக்களுக்கு அவர்களின் ஆதரவை வெளிப்படுத்தும் செய்திகளுடனும் செறிவான கருப்பொருளுடனும் முன்னெடுக்கப்பட்டது. தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் வெவ்வேறு வடிவங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதனை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்கொணரும் முகமாகவும் தமிழர்களுக்கான நீதியையும் இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையில் உள்ள காலதாமதத்தை வெளிக் கொண்டு வருவதற்காகவும் ‘தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்கு சமம்’ என்னும் கருப்பொருளுடன் 10ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினம் நினைவு கூரப்பட்டது. மௌன அஞ்சலி செலுத்தி சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களின் செய்தியும், தமிழர்கள் மீதான இனப்படுகொலை தொடர்பான பல ஆவணப்படங்களை தயாரித்து எம் மீதான இனப்படுகொலையினை வெளி உலகுக்கு கொண்டு வந்தவருமான ஊடகவியலாளர் கெலம் மெக்ரே அவர்களின் உரையும், நில அபகரிப்பு போன்ற விடயங்களை ஆவணப்படுத்தி உலகின் முன் வெளிப்படுத்தும் அமெரிக்காவிலுள்ள பிரபல்யம் வாய்ந்த ஓக்லாண்ட் நிறுவனத்தின் *(Oakland institute)* நிறுவனரும் நிர்வாக இயக்குனருமான அனுராதா மிட்டல் *(Anuradha Mittal)* அவர்களின் செய்தியும் கனேடிய பாராளுமன்ற உறுப்பினரும், கனேடிய பாரம்பரியம் மற்றும் பன்முக கலாச்சார பிரதிநிதி அமைச்சரான கரி ஆனந்தசங்கரி அவர்களின் காணொளியும் காண்பிக்கப்பட்டது.

பிரித்தானிய பிரதான எதிர்க்கட்சியான தொழில் கட்சியின் நிழல் நிதி அமைச்சரான ஜோன் மெக்டோனல் *(Rt Hon John Mcdonnell)* மற்றும் 2009ம் ஆண்டு பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சராக இருந்து இலங்கையில் போரை நிறுத்துவதற்கு முயற்சி செய்த டேவிட் மிலிபாண்ட், சேர் எட் டேவி *(Rt Hon Sir Ed Davey MP)*, தெரசா வில்லியர்ஸ் *(Rt Hon Theresa Villiers MP)* போன்றோர்களின் ஆதரவு செய்திகளும் இடம்பெற்று அனைத்து கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரைகளுடன் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

இனப் படுகொலைகளின் ஆதாரபூர்வமான விடயங்களை காட்சிப்படுத்தும் கண்காட்சியொன்றை இளையோர்கள் அங்கு பல்லின மக்களுக்கு விளக்கமளித்தனர். அங்கு வந்த பல வெளிநாட்டவர்கள் அதனைப் பார்வையிட்டது மட்டுமல்லாது விளக்கங்கள் கேட்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்டனவற்றை புகைப்படமாக எடுத்துச் சென்றனர்.



இன அழிப்பு தொடர்பான முக்கியமான விடயங்களை வெளிக் கொண்டு வரும் முகமாக பல்வேறு விடயங்களை தாங்கிய ஒளித் திரையுடனான வாகனப் பவனி “நிகழ்வு” நடைபெற்ற இடங்கள் உட்பட *8* மணித்தியாலத்திற்கு மேல் லண்டன் மாநகரைச்சுற்றி வலம் வந்தது குறிப்பிடத் தக்கது.

இந் நினைவு தினத்தில் மேலும் சிறப்பம்சமாக பிரித்தானியாவாழ் தமிழ் சிறார்கள் மற்றும் இளையோர்களினால் இனப் படுகொலை தொடர்பான விடயங்களை அங்கு பிரசன்னமாகியிருந்தோர் மத்தியில் வெளிக்கொணரும் முகமாக மேடை நாடகங்களும் நாட்டிய நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் இளையோர் செயற்பாட்டாளரும் இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்கால் வரை வந்து தனது சிறுபராயத்தில் தாங்கள் சந்தித்த அவலங்கள் மற்றும் சிறிலங்கா இராணுவத்தின் கொடூரத் தாக்குதல்கள் பற்றிய தங்கள் அனுபவத்தை பகிர்ந்துகொண்டது மட்டுமன்றி இதற்கான சரியான தீர்வை பெற பாதிக்கப்பட்ட நாம் எப்படியான வேலைத் திட்டங்கள் மூலம் எமக்கான விடுதலையை பெற முடியும் என்பதனை தெளிவு படுத்தினார். ஏனைய இளைய செயற்பாட்டாளர்கள் முள்ளிவாய்க்காலில் நடந்த இனப் படுகொலையை சர்வதேசத்தின் முன் கொண்டு சென்று எம் மக்களுக்கு நீதியையும் நிரந்தர பாதுகாப்பினையும் பெற்றுக் கொடுப்போமென உறுதி எடுத்தனர்.

அங்கே சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அரசியல், மனித உரிமை, ஊடகவியல் பிரமுகர்கள் வெளிப்படையாக நீதிக்கும் தமிழ் மக்களின் உரிமைக்குமாக குரல் கொடுத்தமை எம் மக்களின் கதறலும் கண்ணீரும் அவர்கள் கொடுத்த அளப்பரிய தியாகங்களும் வீணாகி விடாது, என்றோ ஒரு நாள் அவர்களின் கனவுகளும் அபிலாசைகளும் கை கூடி வரும் எனும் நம்பிக்கைக்கு வலுவூட்டியுள்ளது.

*The Rt Hon John McDonnell MP, The Rt Hon Sir Ed Davey MP, The Rt Hon Theresa Villiers MP, The Rt Hon Joan Ryan MP, Paul Scully MP (APPG for Tamils - Chair), Virendra Sharma MP, Bambos Charalambous MP, Siobhan Benita - LibDem Mayoral Candidate* ஆகியோர் நேரடியாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்கு பற்றினர். மற்றும் *Garee Anandasangaree, MP for Scarborough Rouge Park, Parliamentary Secretary to the Minister of Canadian Heritage and Multi Culturalism, Janet Daby MP, Stella Creasy MP, The Rt Hon Alistair Burt MP, The Rt Hon Robert Halfon MP, Lord Popat, Iain Stewart MP, Steve Baker MP, The Rt Hon Tom Brake MP,*

*The Rt Hon Grant Shapps MP, John Mann MP* ஆகியோர் தங்கள் செய்திகளை பிரித்தானிய தமிழர் பேரவைக்கு அனுப்பி வைத்தனர்.

பிரித்தானிய தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் ரவிக்குமார் உரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. ●





சிவபரிமேலழகர்

# தன் தாய்ப்பால் சுவையறியாத சொந்த மைந்தன்!

# என் தமிழ்ப்பால் சுவையறியத் தந்த வேந்தன் !!









பிறந்தது ஆயிரத்து தொழாயிரத்து பதினெட்டாம் ஆண்டு. இன்று எமது எண்ணத்திலும் உள்ளத்திலும் வாழ்கின்ற, கனகசுந்தரம் எனப் பெயர் கொண்டு, தனது பதினாறாவது வயதிலேயே வேந்தனார் என, தனது பெயரையே தூய தமிழிற்கு பெயர் மாற்றிய தமிழ் மேதாவி பிறந்து நூறு வருடங்கள். வித்துவான், ஆசிரியர், புலவர், கவிராயர், சொற்பொழிவாளர், கட்டுரையாளர் எனப் பன்முகம் கொண்ட பாமர வேந்தனுக்கு பாரெங்கும் விழாக் கோலம். நூற்றாண்டு விழாவும் புத்தக வெளியீடுகளும் கடந்த ஆண்டிலேயே தொடங்கி இவ்வருடம் 28.04.2019 அன்று றிக்மன்ஸ்வேத் வாட்டேர்ஸ்மீற் கலையரங்கில் மாலை 4 மணி தொடக்கம் மண்டபம், வித்துவான வேந்தனாரின் அபிமானிகளால் நிறைந்திருக்க, நாற்பத்து எட்டு ஆண்டுகள் பூவுலக வாழக்கையுடன், ஐம்பத்து இரண்டு ஆண்டுகள் அமரத்துவ வாழ்க்கையும் சேர்ந்து, வித்துவான் வேலணை வேந்தனாரின் நூற்றாண்டு விழா மிகவும் நேர்த்தியான முறையில், மிகவும் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது. இவ்விழாவினை, அன்னாரது இளைய மகன் இளஞ்சேயும் அவரது குடும்பத்தினரும், தமது அயராத கடின உழைப்பு மற்றும் திண்ணிய மனத்துடன் அரும்பாடுபட்டு ஒழுங்கு செய்திருந்தார்கள்.



வித்துவான் வேந்தனாரின் நூற்றாண்டு விழாவானது, அமரரின் மகள் திருமதி கலையரசி சின்னையா, மருகர் திரு. சின்னையா அவர்களினால் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி, செந்தமிழ்த்தாய் வாழ்த்துடன் அகவணக்கமாக வேந்தனாரின் குழந்தைப் பாடல்கள் இடம்பெற்றன. தொடர்ந்து இளையவர்களால் நாதஸ்வர தவில் இசையுடன் கூடிய இசைநிகழ்ச்சியும் இடம்பெற்றது. திரு. வேந்தனார் இளஞ்சேய் வரவேற்புரை வழங்க, திரு. சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். தொடர்ந்து சிறுவர் சிறுமியரின் பாடல்களும் உரைகளும் சிறப்புச் சேர்த்தன.

வேந்தனாரின் ஆறு நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டு வெளியிட்டு சபையோருக்கு வழங்கி வைக்கப்பட்டன. அவையாவன குழந்தை மொழி பாகம் 1 2 3, மாணவர் தமிழ் விருந்து, தமிழ் இலக்கியச் சோலை, செந்தமிழ்வேந்தன் ஆகியனவாகும். இந்நூல்களின் மூலப்பதிவுகள் அனைத்தும் ஈழப்போர்ச் சூழலில் இயற்கையாலும் இருந்தவர்களாலும் சூறையாடப்பட்டு, எந்தவித தரவுகளோ தகவல்களோ இல்லாத வெறுமை எனும் வறுமை நிலையைக்கடந்து, தேனீக்கள் மலருக்கு மலர்தாவி சுவைதரு தேன் சேகரிப்பது போல, ஒவ்வொரு நூல்களின் பக்கங்களையும் தேடித்தேடிச் சேகரித்த சுவையான அதேவேளை வேதனையான அனுபவங்களை பதிப்புரையில் விரிவாக பதியப்பட்டிருப்பதுடன் விழாவிலும் உணர்வுபூர்வமாக திரு. வேந்தனார் இளஞ்சேய் அவர்கள், பகிர்ந்து கொண்டமை நூல்களின் அருமையையும் பெருமையையும் உயர்த்தி வைத்திருந்தது எனலாம்.

**நூல் அறிமுக உரை வழங்கியோர்**


**குழந்தை மொழி பாகம் 1, 2, 3,** வித்துவான் வேந்தனாரின் குழந்தைப் பாடல்களை உள்ளடக்கியவை. இவற்றை வித்துவான் பிறந்த ஊரான பள்ளம்புலம் வேலணையை தனது பிறந்த ஊராகக் கொண்ட தமிழ்மணி செல்லையா தேவன் அறிமுகம் செய்து உரையாற்றுகையில் குழந்தைகளுக்கான பாடல்களின் தேவையையும் சிறப்பையும் எடுத்தியம்பியதுடன் எதிர்கால சந்ததியினர் தமிழ் மொழியை தமது அடையாளமாக அறிந்து கொள்ள உறுதியான அடித்தளமாக இருக்கும் எனத்தெரிவித்தார்.

**மாணவர் தமிழ் விருந்து,** எனும் நூலை புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்கள் அறிமுகம் செய்து, தனதுரையில் வித்துவான் வேந்தனாரின் இந்நூல் மிகவும் ஆழமான கருத்துப் பொதிந்துள்ள கட்டுரைகளாகவும், எம் இனத்தின் மரபுகளை பேணுவதுடன் எமது இலக்கியங்களையும் எங்கள் வாழ்வியலின் பண்புகளையும் விழுமியங்களையும் அடுத்த சந்ததியினருக்கு கொண்டு செல்வதை, தலையாய நோக்கமாக கொண்டிருக்கின்றது என்றும், அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருந்த போதும் பெரிதாக தெரிந்திருக்கவில்லை என தனது வருத்தத்தை தெரிவித்ததடன், அன்றைய சூழலில் ஒருவர் வாழும் போது மறைப்பதும், இருட்டடிப்பு செய்வதும், முதுகில் குத்துவதும், சேர்ந்திருந்து கழுத்தறுப்பது போன்ற இழிகுணங்கள் இவையெல்லாம் தமிழர்களுடைய வரலாற்றுப் பிரச்சனை என விசனம் தெரிவித்ததோடு, வேந்தனாரின் எழுத்துக்கள் யாவும் கசாயத்தைக் கடுகக்காய்ச்சி தேன் கலந்தாற் போன்றது எனவும், மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும் கட்டாயமாக படிக்கவேண்டும் என கேட்டுக்கொண்டதுடன் அன்பே தமிழ் அதிலே அமிழ் என்று கூறி தனது உரையை நிறைவு செய்துகொண்டார்.



தமிழ் இலக்கியச் சோலை, எனும் நூலை ஆய்வாளர் திரு சூ.யோ. பற்றிமாகரன் அறிமுகம் செய்து பேசுகையில் இன்று தேசமாக எழுந்து கொண்டாட வேண்டிய நூற்றாண்டு விழாவில், வேந்தனார் இளஞ்சேய் அவர்களின் பெருமுயற்சியினால் இன்று ஒன்றுகூடி இருக்கின்றோம். வித்துவான் வேந்தனார் அவர்கள் தேச உருவாக்கத்தை தன்னுடைய சிந்தனையால், சொல்லால், வாழ்வால் எங்கள் மண்ணில் இருபத்து ஆறு ஆண்டுகள் நிலைப்படுத்திய தேசபக்தன். வித்துவான் வேந்தனார் அவர்கள் தேச உருவாக்கத்தின் தந்தையாக விளங்குகின்றார் என்றும், தமிழ் உள்ளவரை, சைவம் உள்ளவரை தமிழீழ மண் உள்ளவரை வேந்தனார் வாழ்ந்து கொண்டே இருப்பார் என்றும் தெரிவித்தார்.

செந்தமிழ்வேந்தன், எனும் நூலை திருமதி சந்திரா ரவீந்திரகுமாரன் அறிமுகம் செய்து உரையாற்றுகையில் இந்நூல் வித்துவான் வேந்தனார் பற்றிய அவரது சமகால தமிழ் இலக்கிய வாதிகளாலும் சைவசித்தாந்த அறிஞர் பெருமக்களாலும் அவரது மாணவர்களாலும் எழுதப்பட்டு காலத்திற்குக்காலம் வெளிவந்த கட்டுரை வடிவங்கள், வேந்தனார் இளஞ்சேயினால் சேகரிக்கப்பட்டு தொகுத்து, ஆவணமாக உருவாகி இருக்கின்றது. இந்நூல் உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் சமூகத்திற்கும், இலக்கிய உலகில் உள்ள ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் மிகவும் பயன் தரக்கூடிய

உயர்ந்த ஆவணமாகத்தான் நான் கருதுகின்றேன். வேந்தனார் அவர்களின் தமிழ் மீதும் சைவ சித்தாந்தத்தின் மீதும் அவர் வைத்திருந்த ஆழமான அறிவும், மனவுறுதியும் இன்னுமொரு வேந்தனார் வருவாரானால் அது நாம் செய்த பாக்கியமாகும் எனக் கூறி உரையை நிறைவு செய்தார்.

சிறப்புரை வழங்கியவர், வித்துவான் வேந்தனாரின் மகள் திருமதி கலையரசி சின்னையா அவர்கள். மூத்த தமிழ் விரிவுரையாளர், தனது தந்தையின் ஆற்றலையும் ஆளுமையையும் தனது இளமைக்காலத்தில் கண்டு கேட்டறிந்த சொந்த அனுபவங்களினூடாக விபரித்து கூறியதுடன், தந்தை வேந்தனாரின் குழந்தைப் பாடல்களுக்கு நிகரான வேறு பாடல்கள் அடையாளம் காணப்படாமையினால், அவருடைய திறமையும் ஆற்றலும் வெளிப்படையாக புலப்படுவதைக்காணலாம். இலக்கியம் மக்கள் வாழ்கையோடு ஒன்றியதாக இருக்க வேண்டும் என்றும் கவிஞன் எப்படிப்பட்ட தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விளக்கத்தினையும் சொல்லிவைத்த, தெளிந்த சிந்தனை வாதி என்று தெரிவித்து, பல சுவையான அனுபவங்களை சபையோருடன் பகிர்ந்து கொண்டார். மகளாகவும் தமிழ் உலகம் அறிந்த சிறந்த விரிவுரையாளராகவும் சபையோர் முன் தோன்றி உரையாற்றியமை, ஒரு உன்னதமான அனுபவமாகும்.

செந்தமிழ்வேந்தன் வேந்தனார் பற்றிய மூன்று தலைமுறையினரின் பார்வையில், முதலில், **காஞ்சி வச்சிரவேலு முதலியார்:** *1942* ம் ஆண்டு. யாழ்ப்பாணத்தில் ஒருவரைக் கண்டேன். வயதால் மிக இளையவர், சைவ சித்தாந்தத்தை விளக்குவதில் அவருக்கு இணையானவர் வெகுசிலரே. இந்தியாவிலும் இத்தகைய அறிஞரைக் காண்பது அபூர்வம். அவருக்கு வேந்தனார் என்று பெயர்.

**இரண்டாவது, வித்துவான், சி.ஆறுமுகம் 1972ம் ஆண்டு,** தான் கற்ற கல்வியை மாணவர் உள்ளம்கொள்ளும் வண்ணம் ஊட்டுவதிலும் வல்லவர் வேந்தனார். பரமேசுவராக் கல்லூரி பழைய மாணவர் பலரின் சிந்தையிலே வேந்தனாரின் செந்தமிழ் சொற்றொடர்கள் என்றும் நின்று இனிக்கும்! அம்மட்டோ! அவை அன்னார் செவிகளில் என்றும் ஒலிக்கும்! நல்லாசிரியன் ஒருபோதும் மறைவதேயில்லை. அவன் அமரன். எனவே வேந்தனாரும் ஓர் அமரர்.

**மூன்றாவது, வித்துவான், சொக்கன் 1984ம் ஆண்டு,** இதுவரை எனக்கு கிடைத்த சான்றாதாரங்களின் அடிப்படையில் வேந்தனாரின் பல்துறைத் திறங்களையும், பணிகளையும் சுருக்கமாக எடுத்துக்காட்டினேன். சிறந்த கவிஞர், உயர்ந்த சிந்தனையாளர், நயமிக்க நல்லாசான், தரமான கட்டுரையாசிரியர், கேட்பார் பிணிக்கும் சொற்பொழிவாளர், இவையாவிலும் மேலாகத் தமிழ், தமிழினம், தமிழ்ப்பண்பாடு என்றே உயிர்த்த தமிழ்ப் பேரன்பர் என்ற பல கோணங்களில் விரிவாக ஆராயப்படவேண்டியவர் வேந்தனார் என்பதற்கு ஐயமில்லை.

**நான்காவது, பண்டிதர், ச.வே. பஞ்சாட்சரம் 2015ம் ஆண்டு,** தலைசிறந்த தமிழ் இலக்கிய அறிஞர், தண்டமிழ் நாவலர், தமிழாசான், சைவசித்தாந்தச்செம்மல், தனித்தமிழ்க் கொள்கையாளர், தமிழுலகு போற்றும் அற்புதக் குழந்தைக் கவிஞர், சமூக சீர்திருத்தவாதி என்றெல்லாம், அக்காலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும், ஈழத் தமிழறிஞர்களால் மட்டுமன்றித் தமிழகத்தின் பேரறிஞர்களாலும் பாராட்டப் பெறுகின்றவர் அமரர் வித்துவான் க.வேந்தனார்.

**ஐந்தாவது, புலவர் நல்லதம்பி சிவநாதன் 2019ம் ஆண்டு,** ஓர் ஆசிரியனாகவும், ஆசானாகவும், உரையாற்றல், எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்க ஒரு சொல்லாளனாகவும், மெய்யுணர்வும், மெய்யறிவும், மெய்யனுபவமும், மெய்ஞான ஒளியும் மிக்கொளிர நின்றியங்கிய ஒரு பாவலனாக, நாவலனாக, தமிழின காவலனாக வித்துவான் வேந்தனார் அவர்களை நான் உள்ளாரக் கண்டு கண் பனிக்க நிற்கின்றேன். தமிழ்மொழியை மட்டுமன்றி, தமிழர் தாயகத்தை மட்டுமன்றி, தமிழர் வரலாற்றுப் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களையும், தன்னுயிரிற் தாங்கி நேசித்த, பூசித்த, சுவாசித்த ஒரு பேராசானை, வித்துவான் வேந்தனாரின் எண்ணத்திலும், எழுத்திலும் எம்மாற் காணமுடிகின்றது.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் எனும் வள்ளுவன் குறளிற்கு இலக்கணமாக திகழுகின்ற வித்துவான் வேந்தனாரின் பிள்ளைகள் கலையரசி சின்னையா மற்றும் வேந்தனார் இளஞ்சேய் இருவருக்கும் சைவத்தமிழ் உலகமும் உலகத் தமிழர்களும் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போமாக. மாபெரும் தமிழ் இலக்கியவாதியை சைவசித்தாந்த அறிஞரை மீண்டும் உயிர்ப்பித்து எமக்கும், இனி வரும் தமிழ் சந்ததியினருக்கும் நிரந்தரமாக காட்சிப்படுத்தி எம்மினத்தை வளம்படுத்தியமைக்கு கோடி கோடி நன்றிகள் உரித்தாகுக. ●

# கணவர் பிழைப்பாரா?

உடல் நலமில்லாத கணவனை, மருத்துவரிடம் அழைத்துச் சென்றார் அவர் மனைவி...

டாக்டர் மனைவியிடம் சொன்னார்:

"நல்ல சத்தான காலை உணவை, அன்பாகவும், அமைதியாகவும் கொடுங்கள். இரவு உணவுக்குப் பின் உங்கள் பிரச்சனைகளை அவரிடம் பேசாது இருங்கள். சீரியல் பார்ப்பதை தவிருங்கள். புது நகைகள் வேண்டும் என்று அவரைத் தொல்லை படுத்தாதீர்கள். இப்படி ஒரு வருடம் செய்தால், உங்கள் கணவர் பிழைத்துக் கொள்வார்"

வீட்டுக்குச் செல்லும் வழியில் கணவர் கேட்டார்: "டாக்டர் என்ன சொன்னார்?"

அதற்கு மனைவி...

"பிழைப்பது கஷ்டம் என்று சொல்லி விட்டார்".



## 31-ம் நாள்
## ஆத்ம சாந்தி கிரியைகள்

மண்ணுலகில்: 16.02.1954



விண்ணுலகில்: 02.05.2019

**கந்தையா அருளானந்தகணேஷ்**

லண்டனில் 02.04.2019 அன்று தமது இல்லத்தில் இறைவனடி சேர்ந்த யாழ். வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அருளானந்த கணேஷ் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும் சிங்கப்பூர், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வசித்தவருமான கந்தையா அருளானந்தகணேஷ் அவர்கள் காலஞ்சென்றவர்களான கந்தையா சரஸ்வதி தம்பதிகளின் ஏக புத்திரனும் சங்கரத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சுகுணராணியின் அன்புக் கணவரும் செல்வி அகிலாவின் ஆசை அப்பாவும் ஆவார்.

அன்னாரின் 31-ம் நாள் ஆத்ம சாந்தி கிரிகைகள் 31-05-2019 அன்று லண்டனில் (Stone Bridge - Wembly) நடைபெறவுள்ளன.

**திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி**
(அக்கா – லீலா பாரிஸ்)

வி.ராம்ஜி

# மகேந்திரனுக்கு மரணமே இல்லை!

## சாகாவரம் பெற்ற உன்னத கலைஞன்

தமிழ் சினிமாவில் எத்தனையோ இயக்குநர்கள் இருந்திருக்கிறார்கள். எத்தனையோ இயக்குநர்கள் இருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ இயக்குநர்கள் வருவார்கள். ஆனால், இத்தனை நீண்ட நெடிதான பட்டியலில் ஒரு சிலருக்கு மாற்றே இல்லை. அப்படி எவரும் இவரைப் போல இதுவரை இயக்கியதே இல்லை. அந்த அவர்... மகேந்திரன்.

கதைகள் குறித்த புரிதலும், சினிமா மொழி தொடர்பான சிந்தனைகளும் மகேந்திரனுக்குள் மாறுபட்டிருந்தன. அது நம் தமிழ் சினிமாவுக்கு வெகுதூரத்தில் இருந்தது. நாம் படம் எடுத்தா இப்படித்தான் எடுக்கணும் என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டே இருந்தது, மகேந்திர நெருப்பு. ஆனால், அவரிடம் கதை கேட்க வந்தவர்களுக்கு, தன் சிந்தனைகளைத் திணிக்காமல், அவர்கள் கேட்டமாதிரியெல்லாம் கொடுத்து வெற்றிப்படங்களைத் தந்திருக்கிறார். ஆக, படைப்புகளில் சமரசப்படுத்திக்கொண்டார் மகேந்திரன்.

சிவாஜியின் ‘நிறைகுடம்’, அந்தக் காலகட்டத்தில் வந்த படங்களைப் போலவும் இருக்கும், சிவாஜி படம் மாதிரியாகவும் இருக்கும். அதனால்தான் மகேந்திரன் எழுதி, நடிகர் செந்தாமரை டிஎஸ்பி சௌத்ரியாக நடித்த ‘தங்கப்பதக்கம்’ நாடகத்தை, சினிமாவாகத் தயாரித்து, பி.மாதவனைக் கொண்டு இயக்கச் செய்தார். மகேந்திரன் கதை, திரைக்கதை, வசனம் எழுதினார். தமிழ் சினிமாவின் ஆகச்சிறந்த போலீஸ் படங்களுள், மிக முக்கியமான படம் என்று இன்றைக்கும் பேசப்படுகிறது, ‘தங்கப்பதக்கம்’.

சினிமா மீது ஆசையோ அதில் சாதிக்க வேண்டும் என்கிற



வெறியோ ஒருபோதும் இருந்ததில்லை மகேந்திரனிடம். ஆனால், நல்ல படைப்பு குறித்த அக்கறையும் கவலையும் தொடர்ந்துகொண்டே இருந்தது.

ஜெய்சங்கர் நடித்த ‘சபாஷ் தம்பி’ படத்துக்கு கதை எழுதினார். கமல் நடித்த ‘மோகம் முப்பது வருஷம்’ படத்துக்கு திரைக்கதை வசனம் எழுதினார். எஸ்.பி.முத்துராமன் கமலையும் ரஜினியையும் வைத்து இயக்கிய ‘ஆடுபுலிஆட்டம்’ படத்தின் கதையும் வசனமும் இவர்தான். சுஜாதா நடித்த ‘வாழ்ந்து காட்டுகிறேன்’, ‘வாழ்வு என் பக்கம்’, சிவாஜியின் ‘ரிஷிமூலம்’, ‘ஹிட்லர் உமாநாத்’ என பல படங்களில் கதாசிரியராகவும் வசனகர்த்தாவாகவும் பணியாற்றினார். இவையெல்லாம் மகேந்திரன் பணியாற்றிய படங்கள்தான் என்றாலும் அவை, மகேந்திரன் படங்களில்லை. 78ம் ஆண்டு, ஆகஸ்ட் 15ம் தேதி மொத்த திரையுலகமும் தமிழ் உலகமும் திரும்பிப் பார்த்து எல்லார் உதடுகளும் ‘மகேந்திரன்... மகேந்திரன்’ என உச்சரித்தன. அன்று முதல், மகேந்திரன் எனும் பெயர், மந்திரச் சொல்லானது. 1978ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் தேதிதான் ‘முள்ளும் மலரும்’ ரிலீஸான நாள். அதுதான் மகேந்திரனின் முதல் படம், மகேந்திரன் படம். தான் நினைத்த சினிமாவை மகேந்திரன் எடுத்திருந்தார்.

அதுவரை தமிழ் சினிமாவின் கதை சொல்லும் பாணி வேறு. கேமிரா நகரும் விதம் வேறு. பின்னணி இசையின் வேலை வேறு விதம். நடிகர்களின் நடிப்புத்திறனைக் காட்டும் உத்தி வேறு மாதிரியாக இருந்தது. ஆனால், ‘முள்ளும் மலரும்’ என்கிற ஒரே படம், ரஜினி முதற்கொண்டு பலரையும் அவர்களுக்கும் உலகுக்கும் அறியச் செய்தது. அதனால்தான் மகேந்திரனை இன்றைக்கும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது திரையுலகம்!



நாவலை, சினிமாவாக்கியவர்கள் பலர் உண்டு. நாவலுக்குக் கெட்டபெயர் வந்துவிடக்கூடாது. சினிமாவும் அதன்



மொழியினூடே கலந்திருக்க வேண்டும். எழுத்தாளர் உமாசந்திரனின் நாவலைத்தான் படமாக்கினார் மகேந்திரன்.

அதுமட்டுமா? எழுத்தாளர் புதுமைப்பித்தனின் ‘சிற்றன்னை’, ‘உதிரிப்பூக்கள்’ படமானது. சிவசங்கரியின் படைப்பு ‘நண்டு’ என்றானது. பொன்னீலனின் கதை, ‘பூட்டாத பூட்டுக்கள்’ என வந்தது. இதிலொரு சுவாரஸ்யம்... 20 படங்களுக்கும் மேலே கதையும் வசனமும் எழுதிய மகேந்திரன், தான் இயக்குநரான போது, எழுத்தாளர்களின் படைப்புகளை சினிமாவாக்கினார். எழுத்து, இலக்கியம், திரைப்படம் ஆகியவற்றுக்கு ஒரு கோடு போட்டு, ரோடு போட்டு, பாலமும் அமைத்த பெருமை, மகேந்திரனுக்கு உரியது. ‘முள்ளும் மலரும்’ படத்தில் கழைக்கூத்தாடிக்கான பின்னணி இசைதான், அண்ணன் தங்கைக் காட்சிகளுக்கு பின்னணியாக வந்து கொண்டே இருக்கும். ‘பாசமலர்’ படத்துக்குப் பிறகு குறிப்பிடத்தக்க, மிக யதார்த்தமான அண்ணன் தங்கை, காளியும் வள்ளியுமாகத்தான் இருப்பார்கள்.

‘முள்ளும் மலரும்’ படத்தில் இருந்து தொடர்ந்து அடுத்தடுத்த படங்களில், ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. மகேந்திரன் படங்களில், பெண்களின் உணர்வுகளும் குழந்தைகளின் எதிர்காலம் குறித்த கேள்விகளுமாகவே கதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சண்டைக் காட்சிகளைப் பார்த்து, விசிலடித்து, கைத்தட்டிப் பார்த்தவர்கள்தானே நாம். ‘உதிரிப்பூக்கள்’ படத்தில் மனைவியுடன் சேர்ந்து வாழச் சொல்லி, விஜயனிடம் பேசுவதற்கு ஆற்றங்கரைக்கு வருவார் சரத்பாபு. இருவருக்கும் சண்டை. அதைக் காட்சிப்படுத்தியிருக்கமாட்டார் மகேந்திரன். அங்கே சலனமே இல்லாமல் ஆற்று நீர் ஓடிக்கொண்டிருக்கும். அதுவொரு ஷாட். எல்லாவற்றுக்கும் வளைந்துகொடுக்கிற நாணல் புற்கள் க்ளோஸப். அதுவொரு ஷாட். கரையில் ஒய்யாரமாகப் படுத்துக்கொண்டிருக்கும் யாரோ ஒரு சிறுவன் தலைதூக்கிப் பார்ப்பான். அதுவொரு ஷாட். அடுத்து, சரத்பாபு ஆற்றுநீரில் கைமுகமெல்லாம் கழுவுவார். முகமெல்லாம் காயம். சட்டையெல்லாம் அழுக்கு. கீழே கிடக்கும் கண்ணாடியை போட்டுக்கொண்டு, துண்டை எடுப்பார். அதை விஜயனுக்குத் தருவார். ‘நீங்க அடிச்சதை அப்படியே வாங்கிகிட்டேன். திருப்பி அடிக்கலியேனு நினைக்கலாம். உங்க மனைவி விதவையாவறதை நான் விரும்பல’ என்று சொல்லிவிட்டுச் செல்வார். இப்படியான காட்சிகளை, இந்த நூற்றாண்டு கண்ட சினிமாவில், பார்த்திருக்கவே முடியாது.



‘உதிரிப்பூக்கள்’ படத்தில் விஜயன், அஸ்வினியின் அந்த இரண்டு குழந்தைகளே பிரதானம். மிக மோசமான, சாடிஸ்ட் குணம் கொண்ட விஜயனிடம் அவர் மனைவியின் தங்கை வந்து, ‘நாளைக்கி கல்யாணம். கூப்புட வரலை. உங்க ஆசீர்வாதமும் எனக்குத் தேவையில்ல. கல்யாணம் முடிஞ்சு ஊருக்குப் போறேன். பசங்க ரெண்டுபேரையும் எங்கூட விட்ரு. நான் கூட்டிட்டுப்போறேன்’ என்பார்.

அப்போது கதவைச் சாத்துவார் விஜயன். அந்தப் பெண்ணின் புடவை, பாவாடை, ரவிக்கை என எல்லாத்துணிகளையும் கழற்றி எறிவார். அந்தப் பெண் குறுகிக் கதறுவாள். ‘பயப்படாதே நான் உன்னைத் தொடமாட்டேன். உன்னை இப்படிப் பாத்த முத ஆள் நானா இருக்கணும். அதான் என் ஆசை. இனிமே ஒவ்வொரு நாளும் என் நெனப்பு வரணும் உனக்கு. இதுதான் நான் கொடுக்குற ஆசீர்வாதம்’ என்பார்.

கடைசியில் ஊரே சேர்ந்து அப்படியொரு முடிவு எடுக்கும். ‘இந்த ஊர் இனிமே நிம்மதியா இருக்கணும்னா, நீயே உன் முடிவை எடு’ என்று ஆற்றில் மூழ்கி இறக்கச் சொல்லும். ‘இதுவரைக்கும் நான் கெட்டவனா இருந்தேன். இப்ப இந்த முடிவை நீங்க எடுத்திருக்கீங்க. உங்க எல்லோரையும் என் பக்கம் கொண்டுவந்துட்டேன். நான் செஞ்சதுலயே இதான் பெரிய தப்பு’ என்பார்.

குழந்தைகளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு, ‘நல்லாப்படிக்கணும். நல்லபேரு எடுக்கணும். அப்பா குளிக்கப் போறேன்’ என்று சொல்லிவிட்டு திரும்புவார். அந்த ஆறு சலனமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும். ஊரே இறுக்கமாகும், நல்லவர்கள் தடுக்கப் பாய்வார்கள். ஆனால், அவர்களை தடுத்துவிடுவார்கள். மீண்டும் அந்த ஆறு சலனமே இல்லாமல் தன் பயணத்தைத்



தொடர்ந்துக்கொண்டே இருக்கும்.

மௌனம்... மௌனம்... மௌனம். நண்டும்சிண்டுமாக இருக்கிற அந்த இரண்டு குழந்தைகளும், ஆற்றங்கரையில், தண்ணீரைப் பார்த்துக்கொண்டே ஓடிக்கொண்டே இருப்பார்கள். பின்னணியில் அந்த இசை நம்மைச் சாகடிக்கும். படம் முடியும். ஆனாலும் அந்த சோகம் இத்தனை வருடங்கள் கழித்தும் மனதுள் ஓர் உருளையாய் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. அதுதான் மகேந்திரன் படைப்பாளியின் ஆளுமை.

அவரின் எந்தப் படமாக இருந்தாலும் ‘இது மகேந்திரன் படம்’ என்று பெருமையாகச் சொல்லுகிறோம். அப்பேர்ப்பட்ட மகேந்திரன், தன் எல்லாப் படங்களிலும் கதை எழுதிய உமாசந்திரன், புதுமைப்பித்தன், பொன்னீலன், சிவசங்கரி என படைப்பாளிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து டைட்டிலில் பதிவிட்டிருப்பார்.

மும்பையில் ஒருவேலையாகப் போயிருந்த மகேந்திரன், அதிகாலையில் மாடியில் இருந்து பார்த்துக் கொண்டிருக்க, சாலையில் ஒரு பெண், ஜாக்கிங் போய்க்கொண்டிருந்தாள். உடனே அவர் மனதுள் கேள்வி, பல கேள்விகள். ‘ஒரு பெண் தன் வாழ்நாளில், எதுஎதுக்கெல்லாம் ஓட வேண்டியிருக்கு’ என யோசித்தார். அதிலிருந்து வந்ததுதான் ‘நெஞ்சத்தைக் கிள்ளாதே’.

‘முள்ளும் மலரும்’ ஷோபா, ‘உதிரிப்பூக்கள்’ அஸ்வினி, ‘மெட்டி’ ராதிகா, ‘கைகொடுக்கும் கை’ ரேவதி, ‘நண்டு’ அஸ்வினி, ‘பூட்டாத பூட்டுகள்’ சாருலதா, ‘ஜானி’ ஸ்ரீதேவி, தீபா என பெண் கதாபாத்திரங்கள், நமக்குள் ஏற்படுத்துகிற தாக்கம், நம் வாழ்க்கைப் பயணம் போலவே நீண்ட நெடியதானது.

தமிழ் சினிமாவில் தாயும் தந்தையுமாக இருந்து மகேந்திரன் சொல்லித் தந்திருப்பது, இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து வருகிற பிள்ளைகளுக்கும் சத்தான பாடம்; வேதம்!

‘சீதக்காதி’ படத்தில் நீதிபதியாக வரும் மகேந்திரன் சொல்லுவார்... “கலைக்கும் சரி, கலைஞனுக்கும் சரி... சாவு கிடையாது. ஏதோவொரு தருணத்தில் அவை வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். கலைஞன் வெளிப்பட்டபடியே இருப்பான்”.

மகேந்திரன் எனும் கலைஞன்... சாகாவரம் பெற்ற உணர்வுபூர்வக் கலைஞன்! உன்னதப் படைப்பாளி. மகேந்திரனுக்கு மரணமே இல்லை! ●

ஆர்.வைதேகி

# வாழ்க்கையே போராட்டம்தான்!

# சவாலே சமாளி!



“ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இளைஞர் நிக் வுஜிசி. அவருக்கு கை கால்கள் கிடையாது. ஆனாலும் சாப்பிடறது, நீச்சலடிக்கிறது, டிரைவிங்னு எல்லா வேலைகளையும் தானே செய்வார். கல்யாணமாகி, மூன்று குழந்தைகளுக்கு அப்பா. மோட்டிவேஷனல் ஸ்பீக்கரான அவர்தான் எனக்கு இன்ஸ்பிரேஷன். நான் ஏறும் மேடைகளில் அவரைப் பற்றிப் பேசத் தவறமாட்டேன். அவராலேயே அணுஅணுவாக ரசிச்சு வாழ முடியும்போது நம்மால முடியாதா என்ன?”

பாசிட்டிவிட்டி அடுத்தவர்களையும் தொற்றிக் கொள்ளும். அதை நிரூபிக்கின்றன ரேகா கௌடாவின் அறிமுக வார்த்தைகள். இந்தியாவில் பெங்களூரின் ‘மல்ட்டி நேஷனல்’ நிறுவனமொன்றில் இன்ஜினியராக வேலை பார்க்கும் ரேகா கௌடாவும், முன்னணி ‘மோட்டிவேஷனல் ஸ்பீக்கர்’களில் ஒருவர். வாழ்வை வெறுத்து விரக்தியின் விளிம்பில் நிற்கும் யாரும், ரேகாவின் பேச்சை ஒருமுறை கேட்டால் மறுபிறவி எடுப்பார்கள். அவரின் வார்த்தைகளில் தன்னம்பிக்கை தாண்டவமாடும். வாழ்க்கையில் எல்லோருக்கும் போராட்டங்கள் வரும்தான் ரேகாவுக்கோ வாழ்க்கையே போராட்டம்தான். ‘மியூகோபாலிசாக்ரிடோசிஸ்’ என்கிற அபூர்வ நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் ரேகாவுக்கு ‘வீல் சேர்’தான் வாழ்க்கை.

“ஜெயந்த் என் அண்ணன். என்னைவிட ரெண்டு வயசுப் பெரியவன். அவன் பிறந்தபோது எல்லாம் சரியாகத்தான் இருந்ததாம். அவனுக்கு ரெண்டரை வயசான போதுதான் அவனுடைய வளர்ச்சியில் ஏதோ அசாதாரணம் தெரியறதா என் பெற்றோர் உணர்ந்திருக்காங்க. அவனுக்குச் சரியா காது கேட்கலையாம். நெஞ்சுப்பகுதி வீங்கியிருந்ததாம். பார்வை சரியா தெரியலையாம். நடப்பதிலும் சிக்கல் இருந்திருக்கு. என்ன பிரச்னைன்னு தெரியாம அவனை குழந்தைகளுக்கான டாக்டர்ஸ்கிட்ட காட்டியிருக்காங்க. ஆனா, டாக்டர்ஸ் அவனுக்கு ‘ரிக்கெட்ஸ்’ பிரச்னைன்னு தப்பா கணிச்சதோடு இல்லாம அதுக்கான மருந்துகளையும் கொடுத்திருக்காங்க. ஒரு கட்டத்துல அது ரிக்கெட்ஸ் இல்லை, ‘எம்.பி.எஸ். டைப் 4’ என்கிற அபூர்வமான மரபியல் பாதிப்புனு கண்டுபிடிச்சிருக்காங்க. அது அவனுடைய எலும்புகள் மற்றும் முதுகுப்பகுதியை பாதிக்கும், வளர்ச்சியையும் தடுக்கும்னு சொல்லியிருக்காங்க. அது மட்டுமல்லாம, ‘உங்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் எல்லாருக்கும் இந்த பாதிப்பு வரும் வாய்ப்புகள் இருக்கு’ங்கிற தகவலையும் சொல்லியிருக்காங்க. அங்கேதான் விதி எங்க எல்லோர் வாழ்க்கையிலும் விளையாடிருச்சு. அந்த அட்வைஸ் அப்பா அம்மாவுக்கு வந்து சேர்ந்தபோது நான் பிறந்திருந்தேன். டாக்டர்ஸ் சொன்ன மாதிரி அதே பாதிப்புகளோடு...”

“மருத்துவமும் பெரிய அளவில் முன்னேறாத காலகட்டம் அது. இங்கிலாந்துலேருந்து பெங்களூரு வந்திருந்த ஒரு டாக்டர்தான் முதன்முறையா என் அண்ணனுக்கு இருக்கிறது எம்.பி.எஸ். பாதிப்பா இருக்கலாம்னு சந்தேகப்பட்டார். ரெண்டு வருஷப் போராட்டத்துக்குப் பிறகு இதுதான் பிரச்னைன்னு உறுதியா தெரிய வந்திருக்கு. அதனால் என் விஷயத்துல அதைக் கண்டுபிடிக்கிறதுல அம்மா அப்பாவுக்குப் பெரிய பிரச்னைகள் இல்லை. எனக்கு ஏழு, எட்டு வயசாகிற வரை பிரச்னை என்னன்னே தெரியாமதான் வளர்ந்தேன். எங்க ரெண்டு பேராலயும் சரியா நடக்க முடியாது. மத்த பிள்ளைங்களைப் போல ஸ்கூல் பேகைத் தூக்கிட்டுப் போக முடியாது. வயசாக ஆக பிரச்னைகளும் அதிகமாச்சு. நடக்கவே முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஹியரிங் எய்டு இல்லாது எங்களால் கேட்க முடியாதுங்கிற நிலை வந்தது. ப்ளஸ் ஒன் படிக்கிற வயசுல நானும் என் அண்ணனும் 100 சதவிகிதம் எங்க பெற்றோரைச் சார்ந்தே வாழ வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டோம். எந்த அம்மாவாவது காலையில பிள்ளைங்களோடு ஸ்கூலுக்குக் கிளம்பி, சாயந்திரம் ஸ்கூல் முடியற வரைக்கும் அங்கேயே உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்திருக்கீங்களா... எங்கம்மா அப்படித்தான் இருந்தாங்க. ரெஸ்ட் ரூம் போகணும்னாலோ, கிளாஸ்ரூம்லேருந்து லேபுக்கு போகணும்னாலோ அம்மா தான் எங்களைத் தூக்கிட்டுப் போவாங்க.

நானும் அண்ணனும் ரெகுலர் ஸ்கூல்லதான் படிச்சோம். காலேஜுக்குப் போனபோதும் இதுதான் தொடர்ந்தது. சயின்ஸ் க்ரூப்ல படிச்சேன். அதனால நிறைய லேப் வகுப்புகள் இருக்கும். லேப் ரெண்டாவது மாடியில் இருக்கும். கொஞ்சம்கூட முகம் சுளிக்காம அம்மாதான் எங்களைத் தூக்கிட்டுப் போவாங்க. அதோடு, எங்களுடைய சவால் முடிஞ்சிடாது. லேபுகளும் மாற்றுத்திறனாளிகளுக்கேற்ற வகையில இருக்காது. அங்கேயும் எங்களுக்கு யாருடைய உதவியாவது தேவைப்படும். ஃப்ரண்ட்ஸும் நிறைய உதவியிருக்காங்க. அம்மாவின் சப்போர்ட் இருந்ததால்தான் நாங்க ரெண்டு பேரும் பி.டெக் படிக்க முடிஞ்சது”.



சாமானியர்களுக்கே சாத்தியமாகாத சாதனைகளைச் செய்திருக்கிறார்கள், இந்த அண்ணனும் தங்கையும்.

“வேலைக்குப் போறதுன்னு முடிவெடுத்தபோதுதான் இன்னும் பயங்கரமான சவால்கள் எங்க முன்னாடி நின்றன. எனக்கும் அண்ணனுக்கும் ஒரே இடத்துல வேலை கிடைக்குமானு முயற்சி செய்தோம். அப்போதான் எங்கம்மாவால ரெண்டு பேரையும் ஒரே நேரத்துல கொண்டுவிடவும் கூட்டிட்டு வரவும் முடியும். ஆனா, பல இடங்களில் யாராவது ஒருவருக்குத்தான் வேலை காத்திருந்தது. நாங்களும் காத்திருந்தோம். கடைசியா ரெண்டு பேருக்கும் ஒரே நிறுவனத்துல வேலை கிடைச்சது. காலையில எழுந்ததிலேருந்து நைட் தூங்கற வரைக்கும் யாரையாவது சார்ந்திருக்கும் நிலை சாதாரணமானதில்லை. சில நேரங்களில் என்ன வாழ்க்கை இதுன்னு நினைச்சிருக்கேன். அப்பலாம் எங்கம்மா, அப்பாவைதான் நினைச்சுப்பேன். எங்களுக்காக அவங்க எல்லாக் கஷ்டங்களையும் சகிச்சுக்கிட்டிருக்கும்போது, வாழ்க்கையை எதிர்கொள்ளும் சவாலைச் சந்திக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதுதானேன்னு எனக்கு நானே தைரியம் சொல்லிப்பேன். மனசு துவண்டு போகும்போதெல்லாம் வாழ்க்கையில என்னைவிடவும் மோசமான உடல்நிலையோடு போராடிக்கிட்டிருக்கிற மனுஷங்களைப் பார்ப்பேன். அவங்களுடைய தன்னம்பிக்கை என் மனசை மாத்திடும்”. தளராமல் சொல்கிறவர், இன்று பலருக்கும் தன்னம்பிக்கையின் அடையாளமாகயிருக்கிறார்.

“ஒரு ரியாலிட்டி ஷோவில் கலந்துக்கிட்டபோது என் கதையைச் சொல்லியிருந்தேன். அது ரொம்பப் பிடிச்சுப் போனதாகவும், தன்னை மோட்டிவேட் பண்ணினதாகவும் நிறைய பேர் சொன்னாங்க. அதுதான் மோட்டிவேஷனல் ஸ்பீச்சுக்கான ஆரம்பப் புள்ளி. இன்னும் நிறைய பேரை ஊக்கப்படுத்த முடியும்னா, நான் ஏன் இதைத் தொடர்ந்து செய்யக்கூடாதுன்னு யோசிச்சேன். மோட்டிவேஷனல் ஸ்பீக்கர் என்பது, இன்னிக்கு என்னுடைய அடையாளமா மாறியிருக்கு. முழுநேர மோட்டிவேஷனல் ஸ்பீக்கராவதுதான் என் எதிர்கால லட்சியம்”. எதிர்காலக் கனவுடன் காத்திருப்பவருக்கு, நிகழ்காலம் அவ்வளவு இனிமையானதாக இல்லை என்பதே உண்மை.

“அப்பா ஓய்வுபெற்ற ஆசிரியர். அவர் சம்பளத்துல ரெண்டு மாற்றுத்திறனாளிக் குழந்தைகளை வளர்த்தெடுக்கிறது, படிக்க வைக்கிறது, மருந்து, மாத்திரைகளுக்கு செலவு பண்றது பெரும் போராட்டமா இருந்தது. நானும் அண்ணனும் முழுவீச்சில் சிகிச்சையில் இருந்த நேரம் அது. அரசியல்வாதிகள் உட்பட நிறைய பேர்கிட்ட உதவிகள் கேட்டு அணுகியிருக்கோம். உதவினவங்களை விடவும், ‘ஏன் இப்படிப் பிச்சை எடுக்கிறீங்க..’ன்னு விரட்டி, அவமானப்படுத்தினவங்கதான் அதிகம். இப்போ வரைக்கும் எங்களுக்கு அரசு உட்பட யாரிடமிருந்தும் எந்த உதவியும் கிடைக்கிறதில்லை. உதவிகள் கேட்டு ஒவ்வோர் இடமா ஏறி, இறங்கற நிலையில் நாங்களும் இல்லை. வாழ்நாள் முழுவதும் நாங்க மருந்துகளின் உதவியோடுதான் வாழ்ந்தாகணும். எங்களுடைய பிரச்னைக்கு அமெரிக்காவில் மருந்து கிடைக்குது. ஆனா, அதன் விலை ஒரு வருஷத்துக்கு ஒரு நபருக்கு ஒன்றரைக் கோடி ரூபாய். அந்த மருந்து இந்தியாவில் கிடைக்க ஏற்பாடுகள் செய்யச் சொல்லி அரசாங்கத்துக்கிட்ட தொடர் கோரிக்கை வெச்சிட்டோம். அதுவும் நடக்கலை. அது இந்தியா, அமெரிக்கானு ரெண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட விஷயம். என்னை மாதிரியான தனி நபர் போராட்டம் எந்த மாற்றத்தையும் கொண்டு வராது. இப்போ நாங்க எடுத்துக்கிற மருந்துகளும் எங்க உடல்நலத்தில் எந்த வகையிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது. ஆனா, எதிர்காலத்தில் பிரச்னைகள் தீவிரமாகாமல் தடுக்கும். மாற்றுத்திறனாளிகளுக்கான அடிப்படை வசதிகளே போதுமானவையாக இல்லை. மாற்றுத்திறனாளிகள் எல்லா இடங்களுக்கும் போயிட்டு வரும்படி மால்கள், தியேட்டர்கள்னு பரவலா ராம்ப் வசதிகள் செய்யப்படணும். பொதுக் கழிவறைகளும், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக் கூடிய வசதிகளோடு இருக்கணும்”- கவலையோடு கோரிக்கைகளையும் முன்வைக்கிறவர், நமக்கும் மேசேஜ் வைத்திருக்கிறார்.

“நெவர் கிவ் அப். போராடுங்க. நிச்சயம் ஜெயிப்பீங்க. அடுத்தவங்களுக்கு உதவறதை உங்க இயல்பா மாத்திக்கோங்க. உதவின்னு சொன்னதும் பொருளாதார உதவியா இருக்கணும்னு அவசியமில்லை. அடுத்தவங்க முகத்துல சின்ன புன்னகையை வரவழைக்கிற உதவிகள்கூட மகத்தானவை.”

புன்னகையோடு விடைபெறுகிறார் வணக்கத்துக்குரியவர்! ●


JK GOLD HOUSE & FASHION HOUSE LTD
314-316 London Rd, Croydon, CR0 2TJ
Tel: 0208 684 4577
Offering Pawnbroking loans up to £50k
Use your assets to secure a loan of up to £50,000 over 6 months.
H&T PAWNBROKERS
In partnership with H&T Pawnbrokers.
H&T Pawnbrokers is a trading name of Harvey & Thompson ltd. Registered address: Harvey & Thompson, Times House, Throwley Way, Sutton, Surrey, SM1 4AF. Tel: 0800 838 973. Authorised and regulated by the Financial Conduct Authority for consumer credit.